Sangathamil
# சங்கத்தமிழ்

குரல் – 70 | சர்வதேச மின் செய்தித்தாள் | ஏப்ரல் 01 2024

## 15ம் ஆண்டு

# வீரவணக்கம்



பிரிகேடியர்
**விதுசா**
கந்தையா ஞானபூரணி
கரவெட்டி, யாழ்
(29.09.1969 - 04.04.2009)



பிரிகேடியர்
**துர்க்கா**
பொன்னுத்துரை கலைச்செல்வி
வலிகாமம், யாழ்
(24.03.1971 - 03.04.2009)



**04.04.2009 அன்று
முல்லைத்தீவு ஆனந்தபுரப்பகுதியில்
சிறீலங்கா மற்றும் சர்வதேசப் படைகளின்
நச்சுக்குண்டு தாக்குதலுக்கு
இலக்காகி வீரச்சாவைத் தழுவிக்கொண்ட
மூத்த தளபதிகள் மற்றும் ஏனைய
மாவீரர்களுக்கும்
எமது வீரவணக்கத்தைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.**



பிரிகேடியர்
**தீபன்**
வேலாயுதம்பிள்ளை பகிரதகுமார்
கண்டாவளை, கிளி
(08.01.1966 - 05.04.2009)



பிரிகேடியர்
**மணிவண்ணன்**
அருளம்பலம் தவேந்திரன்
பருத்தித்துறை, யாழ்
(31.12.1970 - 03.04.2009)



பிரிகேடியர்
**ஆதவன் / கடாபி**
ஆறுமுகம் விநாயகமூரத்தி
கொற்றாவத்தை - வதிரி, யாழ்
27.02.1968 - 04.04.2009

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**




























# விளம்பரத் தொடர்புக்கு
# அழையுங்கள்: 437.345.4203


Sangathamil

# சங்கத்தமிழ்

யாதும் ஊரே யாவரும் கேளிர்


சர்வதேச மின் செய்தித்தாள்

**www.sangathamil.ca**

## தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

எமது மண்ணின்
விடிவிற்காகவும்
எமது மக்களின்
விடுதலைக்காகவும்
களமாடி வீழ்ந்த எமது
மாவீரர்களை நினைவுகூரும்
இப் புனித நாளில்,
தேச விடுதலை என்ற அவர்களது
இலட்சியக் கனவை,
எத்தகைய இடர்கள்,
சவால்களை
எதிர்கொண்டபோதும்
நிறைவு செய்வோமென
நாம் உறுதிபூணுவோமாக.






சங்கத்தமிழ்

தொடர்புகளுக்கு

தொலைபேசி
437 345 4203

மின்னஞ்சல் (Email)
sangathamilcanada@gmail.com


இணையத்தளம் (Website)
www.sangathamil.ca

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# கரும்புலி மேஜர் செங்கதிர்வாணன்




வீட்டிற்குமுன் வாகனம் வந்து நின்ற போது செங்கதிர்வாணன் தான் வருகிறான் என்று நினைத்துக் கொண்டாள் தண ணீருற்று அம்மா. அவனின் அம்மா திருமலையில் என்பதால் இப்போது உறவுகள் எல்லாம் அந்த வீடுதான்.

அம்மா தலையை இழுத்து முடித்தபடி விளக்கையும் எடுத்துக் கொண்டு வாசலுக்கு ஓடிவந்தாள். அக்கம் பக்கத்து வீட்டுச் சிறுமிகள் எல்லாம் “குட்டான் மாமா வந்திட்டார்” என்ற மகிழ்ச் சியுடன் பாடப்புத்தகங்களை மூடிவிட்டு ஆரவாரித்து நின்றனர். அவர்களுக்கு ஒருபுறம் அச்சமும் இருந்தது.

பாடப்புத்தகத்தில் கேள்வி கேட்பார். தேர்வு அறிக்கை பார்ப்பார். என்றாலும், குட்டான்மாமா எவ்வளவு நல்லவர். சிறுமிகளும் வாசலுக்கு வந்தனர். அந்த வயது முதிர்ந்த அம்மா விளக்கை உயர்த்தி எல்லோர் முகங்களையும் பார்த்தாள். இல்லை... அவள் தேடி வந்த செங்கதிர்வாணன் இல்லை.

வந்தவர்களின் முகத்தில் எழுதாத கவிதையொன்று எதையோ உணர்த்தியது. அம்மாவால் முகங்களைப் பார்க்க முடிந்தது. படிக்க முடியவில்லை.

“இவ்வளவு நாட்களுக்கு ஏன் மோனை வரேல்லை”

அம்மாவிற்கு அவன் வந்திருப்பான் என்பதில் அவ்வளவு நம்பிக் கையிருந்தது. அவனை எதிர்பார்த்து எத்தனை வாசல்கள். எல்லோருடனும் சிரித்துப் பழகுவான். அவனுள் எரியும் நெருப்பு வெளியில் தெரியாது. கண்களுக்கு தெரிவது சிரிப்பு. உள்ளே கனன்று கொண்டிருப்பது நெருப்பு. அவனை எரிமலை யாக்கும் முதற்பொதி கலவரங்களினால் விழுந்தது...

“காலம் கெட்டுக்கிடக்கிற நேரத்தில எங்கை மோனை திரியிற... அவங்கள் மனிசரின்ர உயிரை எடுக்கிரதெண்டே ரோட்டுவழிய நிக்கிறாங்கள்.” அம்மா பெற்ற வயிற்றில் நெருப்புப்பற்ற பதறு வாள். அப்போதெல்லாம் அவளின் கைகள் அவனின் தலை யிலோ கன்னத்திலோ உலாவிக் கொண்டிருக்கும்.

அவன் அவளின் பாசத்தைப் புரிந்துகொண்டாலும் கரைந்து போகமாட்டான். கைகளை விலக்கி விட்டுக் கம்பீரமாய் நிமிர்ந்து நிற்பான். பின் வீராவேசமாக வசனம் பேசுவான்.

“அவங்களைப் போலதான் நாங்களும். ஏன் பயந்து சாகிறியள்.” அவன் சொல்லிக்கொண்டே தனது சைக்கிள் பாருக்குள் மறைத்து வைத்திருந்த பழைய சைக்கிள் செயினை எடுத்துக் காட்டினான். “ஆரும் அடிக்க வந்தாங்கலென்றால், இனி அடிப்பன்” அவனின் கண்கள் கோபத்தால்

அம்மா முன்னரிலும் பார்க்க கூடுதலாகப் பதறினாள். “என்ன இழவடா இது... நான் என்ன ... அம்மா அழுதாள்.

அவளின் அழுகைக்குக் காரணம் இருந்தது. அது 1983 ஆம் ஆண்டு இலங்கைத்தீவு இனவாத நெருப்பில் ஆவேசமாக எரிந்துகொண்டிருந்த நாட்கள். வீடுகளின் வீதிகளில் எங்கு என்ற வேறுபாடு இல்லாது கொலை நடந்து கொண்டிருந்த நேரம். தெருவெல்லாம் பிணங்கள். சொந்தத்தேருக்களிலேயே உலாவ முடியாத வேதனை. அதுவும் இவர்கள் திருகோண மலை சிவபுரியில் சிங்கள ஊர்களும் அருகில் குடியிருப் பவர்கள். கொழும்பிலும் வேறிடங்களிலும் கலவரம் நடப்பதை இலங்கை வானொலி அறிவித்துக்கொண்டிருந்தது. இவர் களிற்கு அடுத்த வீடு, எதிர் வீடு, தெருவெல்லாம் காடையர்கள் பெரிதாக ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தன.

இவர்கள் நிலைமையைப் புரிந்துகொண்ட வேலைக்கு வரும் சிங்களக் கிழவியை வீட்டில் விட்டு விட்டுப் பற்றைக்குள் மறைந் தனர். அப்பாவும், மரத்தில் ஏறுமளவுக்கு வளர்ந்த அண்ணாக் களும் மரத்தில் ஏறி ஒளிந்திருந்தனர். அப்பா பதட்டத்தில் விழப் பார்த்து கைகால் எல்லாம் உறஞ்சலோடு மீண்டும் கோப்புகளை கெட்டியாய் பிடித்து ஏறி அமர்ந்து கொண்டார். எல்லோரும் ஊரில் நடந்ததை கவனித்துக் கொண்டிருந்தனர்.

அம்மாவின் இறுகிய அணைப்பில் நின்று சினமும் வெறுப்பும் கண்களில் பொங்கப் பார்த்துக்கொண்டிருந்தான், கடைக்குட்டி. வீடுகள் எரிந்துகொண்டிருந்தன. எங்கும் தீ பரவி புகை மூடி யிருந்தது. ஊரவர்கள் தாறுமாறாய் ஓடிகொண்டிருன்தனர். காடைகள் அவர்களை அடித்து வீழ்த்துவதும் , வெட்டுவதுமாக தாண்டவம் ஆடின. இவர்களின் வீட்டை நோக்கி வேகமாய் ஓடிவந்தன. முற்றத்தில் நின்று சிங்களத்தில் கத்தின. வேலைக்கு வந்த சிங்களக்கிழவி வீட்டிற்குள் இருந்தபடியே சிங்களத்தில் ஏதோ கத்தினாள். அதுகள் போய்விட்டன. ஊரே வெறிச்சோடிபோனது. அது நடந்ததில் இருந்து அணுகுண்டு விழுந்த நகரம்போல அந்த இடம் ஆளரவமற்று போனது.

இரவில் தனியே யாரும் உலாவித்திரிய அச்சும் நாட்களில் அவளின் ஆசைமகன் திரிவதை எப்படிப் பார்த்திருப்பாள். அவ னுக்கு இப்பதானே பதினொரு வயது அம்மா கெஞ்சலான குரலில் மன்றாடினாள். அவன் கேட்கவே இல்லை. வீட்டை விட்டு வெளியே போவான். இனக்கலவரத்தால் ஊரில் கொதிப் புற்றுப் போயிருந்த இளைஞர்களோடு சேர்ந்து ஆங்காங்கே அவனும் எதிர் நடவடிக்கைகளில் ஈடுபட்டான். பெரியவர்கள் செய்யும் ஒவ்வொன்றிலும் ஒருவித துடிப்போடு அவனும் ஓடித் திரிந்து ஈடுபட்டான்.

அவன் இயக்கத்தோடு சேர்ந்துகொள்ள முடியாமல் அவனது வயதும் இருந்தது ஏற்கனவே அவனது அண்ணன் ஒருவன் போராளியாக இருந்தான். இவர்களின் நடவடிக்கைகளை எப் படியோ சிறீலங்கா இராணுவமும் பொலிஸ் அறிந்திருக்க வேண்டும். வீடு அடிக்கடி சுற்றிவளைக்கபட்டது. துடியாட்டமான கடைக்குட்டி ஒவ்வொரு முறையும் தப்பிவிடுவான். அவனது அண்ணன் ஒருவனைக் கைதுசெய்து கொண்டு போய் சிறை யில் அடைத்தார்கள். அண்ணா சிறைக்குப்போனதும் வீட்டில் சோகம் சூழத்தொடங்கியது. அம்மா பொலிவிழந்து போனாள். இவன் கொஞ்ச நாள் வீட்டிலேயே நின்றான். அம்மாவிற்கு தெரியும்படி எங்கேயும் போவதில்லை என்று முடிவெடுத்தான். பிள்ளை இனிப்போக மாட்டான் என்று அம்மா நினைத்து இருப் பாள். ஆனால் அவன் இரகசியமாய்ப் போய் வந்துகொண்டிருந் தான்.

பாடசாலையில் சுற்றுலா போக ஆயத்தமாகினால் அங்கே முண் டியடித்துக் கொண்டு ஓடித்திரியும் துடியாட்டமான சிறுவன், பாடசாலையில் திருத்தவேலை , பாடசாலை வளவில் தோட்டம் வைப்பது அங்கும் அதே ஆள். வகுப்பில் அவன் ஒர் எடுத்துக் காட்டு. எங்கேயும் சின்னனப்பிரசினை வந்து விட்டதென்றால் அதை தீர்த்துவைப்பதில் அவனும் ஒராள். ஒழுக்கக்கேடாக யாரும் நடந்துவிட்டாள் உடனே தண்டனை கொடுக்கப்படும். அங்கேயும் தண்டனை வழங்குபவனாக நிற்பான். பாடசாலை முழுவதும் அவன் பெயர் பரவியிருந்தது. பள்ளியில் வகுப் பாசிரியடம் நல்ல மதிப்பபை பெறுவது பெரும்பாடு, அப்படி யிருக்க அவன் அதிபரின் நம்பிக்கைக்கும் நன்மதிப்புக்கும் உரியவனாக இருந்தான்.

வீட்டின் வறுமை இடையிடையே வயிற்றைக் கடிக்கும். நாட்டின் நிலைமையும் குழப்பமாக இருந்தது. இந்திய இராணுவக் காலம் அது. தேடுதல் வேட்டைக்குள் அகப்படாது முயலோட்டம் ஓடித்திரிந்த நாட்கள் இந்திய இராணுவம் வெளியேறிய காலத் தில், நாளேடொன்றில் தலைவரின் படத்தைக் கண்டவன் உடனே தன் எண்ணத்தில் வந்ததின்படி செய்துவிட்டான்.

படத்தை அளவாக வெட்டித் தடித்த மட்டை ஒன்றில் ஓட்டினான். கீழே தலைவர் வே . பிரபாகரன் என்று தன் கைப்பட எழுதி ஊர் கூடும் இடம் ஒன்றில் எல்லோருக்கும் காணும்படியாக ஓட் டினான். அப்போதுதான் அவன் எந்த பின்விளைவைப் பற்றியும் கவலைப்படவில்லை. எதையும் எதிர்கொள்வது என்ற துணி வோடு இருந்தான். இரகசியப் பொலிசார் நோட்டமிட்டபடியே திரியும் அந்த இடங்களில் அவன் ஓட்டிய படம் மிகுந்த பர பரப்பை ஏற்படுத்தியது.

எல்லோருக்கும் அதிர்ச்சியும் ஆச்சரியமும். யார் இதைச் செய்திருப்பார். அவர்களோடு சேர்ந்து அவனும் ஆச்சரியப் படுவதாய் பாவனை செய்தான். இந்த அதிர்வலை அடங்க முன் யமாளியாவில் தேசத்துரோகிகள் மீது தாக்குதல் நடத்திவிட்டு வரும்போது படகுவிபத்தில் வீரச்சாவடைந்த மாவீரர்களின்




படங்கள் வெளியாகி இருந்தன. அந்தப் படத்தையும் எடுத்து வீட்டில் கூட யாருக்கும் தெரியாமல் பசை கிண்டிப்போய் கோட்டை முகப்பில் ஒட்டிவிட்டான். அது இன்னும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இவனின் செயல் ஒவ்வொன்றிலும் தீவிரம் கூடக்கூட சொந்த ஊரில் வாழ்வதற்கே முடியாமல் போனது. நாளுக்கு நாள் அவனுக்கு அச்சுறுத்தல் அதிகமாகிக் கொண்டிருந்தது. இரண்டாம் கட்ட ஈழப்போர் தொடங்கிய காலத்தில் அண்ணன் ஒருவனுடன் யாழ்ப்பாணம் வந்து அவருடனே வாழ்ந்து கொண்டிருந்தவன். காலத்தின் தேவையறிந்து தன்னை போராட்டத்தில் இணைத்துக் கொண்டான்.

பகைவனின் குகைக்குள்ளேயே கூடுகட்டி அவனையே வேவு பார்க்கும் வேவுப்பணிதான் அவனுக்கு வழங்கப்பட்டது. அராலி, ஊர்காவற்துறை இன்னும் அந்தக் கரையோரத்து இராணுவ முகாம்கள் எல்லாவற்றுக்கு உள்ளேயும் நிற்கும் பற்றைகள் பேசுமானால் மேட்டுமே அவனைப்பற்றி முழுமையாக அறியலாம். எவ்வளவோ கடினங்களும் துயர்களும் அந்தப்பற்றைகளோடும், மரங்களோடும் சேர்ந்து உறங்கிக் கொண்டிருக்கிறது.

ஆட்கள் இல்லாத சூனியப் பிரதேசத்துக் கட்டடங்களும் தண்ணீரில் நனைந்து கொண்டேயிருக்கும். கரையோரத்துப் பற்றைகளுந்தான் அவனின் தங்கிடங்கள். பல நாட்களாய் அங்கேயிருந்து ஊர்காவற்துறை முகாம் வேவிற்காக அலைந்து கொண்டிருந்தான்.

ஒருநாள், தன் அணியோடு வேவிற்காக உள்ளுக்கு வந்தவன் இடையில இராணுவத்தை சந்தித்துக் கொள்ளவேண்டியிருந்தது. தவிர்க்க முடியாத சூழலில் சண்டையிட்டார்கள். முன்னணி அரனைத் தாண்டிவெளியே போகவே முடியாது என்று புரிந்து கொண்டான்.

அவர்களோடு வந்தவர்களில் ஒருவன் காலில் சூடுபட்டு விழுந்துவிட்டான். முன்னணி நிலைகளை இராணுவம் பலமாகவும் விழிப்பாகவும் இனி வைத்திருக்கும் என்று புரிந்தமையால் காயப்பட்டவர்களை தோளில் சுமந்துகொண்டு இராணுவப் பகுதிக்குள்ளேயே சென்றார்கள். இடையிடையே இராணுவக் காவலரண்கள் மற்ற இடங்கள் எல்லாம் பற்றைகள். அவர்களது நடைதூரம் அதிகமாக அதிகமாக நா வறண்டு போனது. ஒரு சொட்டுத் தண்ணீர்கூட இல்லை. பசிவாட்டம் தாங்க இயலாது. உடல் சோர்ந்துவிட்டது. காயப்பட்டவனின் புண்ணுக்குச் சுற்றிய சீலைத் துணியைத் துளைத்து விடும் முயற்சியில் இளையாங்களும் சொடுக்களும் மொய்த்துக்கொண்டிருந்தன.

"சீ... இதுகளே காட்டிக்கொடுக்கும் போல" மடியில் வைத்திருந்தவன் கொசுக்களை விரட்டிக் கொண்டிருந்தான். காயப்பட்டவன் வேதனையோடு முனகிக் கொண்டுகிடந்தான். இந்த வேளையில் எல்லோரும் சோர்ந்து பின்னும் செங்கதிர்வாணன் இன்னுமொருவனை அழைத்துக்கொண்டு தண்ணீர் தேடினான். இப்போது அவர்கள் இயலாமையினால் அழுதால் கூட கண்ணீர் வராது. அவ்வளவிற்கு உடலில் நீர் தன்மையில்லை. தண்ணீர் தேடி அலைந்தவர்களின் கண்ணில் கிணறு ஒன்று தென்பட்டது ஆது ஆழக்கிணறு. யாரும் பாவிப்பதில்லை என்பதால் கிணற்றில் வாளிகூட இல்லை.

அவன் கிணற்றில் இறங்கித் தண்ணீர் எடுப்பது என்ற முடிவோடு உடற்தளர்வை பொருட்படுத்தாது கிணற்றுனுள் இறங்கினான்.

ஒவ்வொரு படியும் குறையக் குறைய நெஞ்செல்லாம் புது பரவசமோடியது. தண்ணீர் தொடும் தூரத்தில் கையால் அள்ளி முதலில் உதடுகளை நனைப்போம் என்று முயன்றான். சீ... சரியான உப்புத்தண்ணி. ஏமாற்றம் இயலாமை என்றாலும் சோர்ந்து விடாது மீண்டும் மேலேரிவந்து தண்ணீர் தேடி அலைந்தான். தனக்கு இல்லாவிட்டாலும் தன காயப்பட்ட தோழனுக்கும் ஏனைய தோழர்களுக்கும் கொடுத்துவிட வேண்டுமே எனத் துடித்தான்.

அவனுக்கு இது பெரும் கஸ்ரமாகவோ இருக்கவில்லை. இப்படிப்பட்ட வேளையிலெல்லாம் அவனின் மனதில் வந்து போபவை அவன் நேரில் கண்ட மக்களின் அவலமும் தன தேசத்தை மீடகத் தாமதமாகும் ஒவ்வொரு நொடியும் அவள்களின் அவலங்களும் அதிகரிக்குமே என்ற எண்ணங்களும் தான்.

அவன் முயற்சிகளை கைவிடாது நடந்தான். அவனது கண்ணில் ஒரு வீடு தென்பட்டது. அவர்களை அழைத்து தண்ணீர் கேட்டு அவர்களுக்குத் தொந்தரவு கொடுக்கவிரும்பவில்லை. அவர்கள் முற்றத்தில் ஏதோ சுவையாகக் கதைத்துக்கொண்டிருக்க பின்புறம் வந்து குடத்துத் தண்ணீரை அவன் கொண்டு வந்து காலங்களில் நிரப்பிக்கொண்டு தோழர்களை நோக்கி விரைந்தான். இடையில் ஓரிடத்தில் பற்றிக்கரியும் தேங்காய் நெய்யும் எடுத்துக்கொண்டுபோய் காயப்பட்ட போராளிக்கு கை மருத்துவம் செய்துவிட்டு உதவி அணி வரும்வரை காத்திருந தான்.

உதவி அணி வந்து சேரமுடியாது அல்லற்பட்டது. இவர்களுக்கு வெளியில் செல்ல மீண்டும் மீண்டும் முயன்றனர் முடியவில்லை. உதவியணி ஒருவாறு இவர்களை வந்தடைந்தது. இரவுபகல் அலைந்தமையால் எத்தனை நாட்கள் எங்கே அலைந்து திரிந்தார்கள் என்று சரியாகத் தெரியாது. உதவியணியில் வந்தவர்களிலும் சிலர் காயமடைந்திருந்தார்கள். அவர்களையும் தூக்கிக்கொண்டு சேற்றுகுள்ளால் நடந்து வெளியேறி வந்து சேர்ந்தார்கள். ஆனால் பெறப்பட்ட தகவல்கள் நெஞ்சின் ஆழத்திற் கவனமாக இருந்தன.

"நொடி மாஸ்ரர்" அவனை அப்படித்தான் எல்லோரும் அழைப்பார்கள். பயிற்சி முடிந்து கிடைக்கும் தேனீர் இடைவேளையிலோ ஓய்வான் வேளைகளிலோ அவன் நிற்கும் இடத்தை சிரிப்பூட்டிக் கொண்டிருப்பான். ஏதாவது நொடி சொல்லி மற்றவர்களை மடக்கிடுவான்.

அவனின் அகன்ற உடம்பும் நடக்கும் போதும் நிற்கும் போதும் பின்புறம் வளையும் கால்களும் குத்திநிற்கும் மீசையும் எடுப்பில்லாத சாதாரணமான தோற்றமும் நினைவுக்கு வரும் ஒவ்வொரு கணமும் அவன் கேட்டு விடை காணமுடியாது போன புதிர்களே நினைவுக்கு வரும்.

"நெடிமாஸ்ரர்" அது அவனுக்கு ஏற்றதாய்த்தான் இருந்தது. அவன் உண்மையில் ஆசிரியன் தான்.

அராலிச் சண்டைக்குச் செல்லும் அணிகளில் ஒன்றிற்கு இவனே வழிகாட்டி. இவன் வழிகாட்டி அழைத்துச்சென்ற அணிக்கு இவன்தான் பயிற்சி கொடுத்தான். அதன் பின் வெடிமருந்து பற்றிப் படிப்பித்தான். புதிதாய் வேவு அணியில் இணைப்பவர்களுக்கு அவனே வெடிமருந்துப் பாடமும் கற்பித்தான். வெடி மருந்து சம்மந்தமான பயிற்சிகளும் கொடுத்தான்.

மெதுவாகவும் பொருள் விளங்கும் படியும் கற்பிக்கும் திறமையால் அவன் கர்பித்ததைப் போராளிகள் விரும்பினர். வேவுபணியில் நின்று வெடிமருந்து பற்றிப் படித்துக் கொண்டிருக்கும் போது முன்னேறிப்பாய்தல் நடவடிக்கையில் எதிரிவைத்த பொறி வெடிகளையும் வெடிக்காமல் போன எறிகணைகளையும் செயலிழக்கச் செய்யும் பணி கொடுக்கப்பட்டது.

வெடிமருந்துக் கல்வி முழுமையாக நிறைவுறாத போதும் அவன் தனது முயற்சியால் ஒவ்வொரு வெடிபொருட்களையும் செயலிழக்கச் செய்யும் முறையை அறிந்து வேகமாக செயற்பட்டான். அவன் இயக்கத்தில் இணையமுன்பே யாழ்ப்பாணத்திற் கற்றுக்கொண்ட தொழில் நுட்பறிவு பெரிதும் பயன்பட்டது.

அவன் சூரியக்கதிர் சண்டையில் அணி ஒன்றிற்கு பொறுப்பாக நின்றபோது கரும்புலி அணிக்குச் செல்வதற்கான அனுமதி வந்தது. அவன் வேவில் நிற்கும் போதே தலைவருக்கு கடிதம் எழுதியிருந்தான். பதில் வந்தபோது துள்ளிக் குதித்தான்.

மனதை வலிகவைக்கும் எத்தனை நிகழ்வு. வளர்த்த நாய் சாப்பிடாது விட்டால் தானும் சாப்பிடாமலேயே பசியிருக்கும் அவனது நேசம் எல்லோர்மீதும் எல்லாவற்றின் மீதும் வியாபித்திருந்தது. மனதுக்குள் எழுகின்ற வலிகள் எல்லாம் வலிமையாகியிருந்தன. இலக்கிற்காக காத்திருப்பது, பயிற்சி எடுப்பது, நகருவது. சண்டை ஆரம்பிக்கலாம் என்ற கடசிக் கணங்களில் சந்தோசப்படும் வேளை ஏதாவது ஒரு காரணம் இலக்கை அழிக்க முடியாமைக்கு வழிவகுக்கும். வாடியமுகம், தளர்ந்த நடை, மறுபடி தளம் திரும்புவான். மறுபடியும் , மறுபடியும்... அவனின் காத்திருப்பு, பயிற்சி எடுப்பது, எல்லாம் தொடரும்.

மூன்று வருடங்களாக கழிந்த ஒவ்வொரு கணத்திலும் அவனது காத்திருப்பும் சேர்ந்தே கழிந்திருந்தது. சோர்வில்லாது எல்லோரையும் மகிழ்ச்சிப்படுத்தியபடி எல்லாக் காரியங்களிலும் ஈடுபடும் செங்கதிர்வாணனின் பாதங்கள் கடைசியாக மணலாற்றுக் காட்டுக்குள் இரத்தம் கசியக் கசிய நடந்தன.

அந்தப் பாதங்கள் பல இடங்களில் பதிந்திருக்கிறன. அநேகமாக சண்டைகளிற்கு முன் வேவுப்பணிக்காக எதிரியின் மையப் பிரதேசம் வரையும் சுவடு பதிந்திருக்கிறது.

கரும்புலியாக வெடிசுமந்தும் ஏராளமான களங்கள். சிலவற்றை இப்போதுகூட வெளிக்காட்ட முடியாது.

"எங்கேனும் ஒலித்திருப்பான்" அவளின் மனம் அங்கலாய்த்தது. சற்றுத் தள்ளி விளக்கை உயர்த்தினாள். வாகனத்திலிருந்து வித்துடற்பேழை இறங்குவது தெரிந்தது. அவளால் நம்ப முடியவில்லை. இனி நம்பித்தான் ஆகவேண்டும். மணலாற்றில் கரும்புலித் தாக்குதல் ஒன்றின் இறுதி வேவிற்காக சென்ற போது அவன் வீரச்சாவடைந்தான்.

"ஆட்டி உடைக்கவேணும்" என்று இரவுபகலாய் விழித்திருந்த அந்த விழிகள் 29.10.1999 அன்று உறங்கிவிட்டன. "குட்டான் மாமா... குட்டான் மாமா" என்று சிறுமிகள் குரலெடுத்து அழுவது மனங்களை உருக்கியது.

நாளை... இந்தச் சின்னமனங்களுக்கு வளமான எதிர்காலமும் நிலையான தேசமும் வேண்டித்தானே குட்டான்மாமா போலப் பலபேர் போகிறார்கள். சிறுமிகளுக்கு இப்போது புரியா விட்டாலும் காலம் ஒரு நாள் உணர்த்தும்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"
வெளியீடு :-விடுதலைப்புலிகள் (தை 2004) இதழ்

www.sangathamil.ca




# வெடுக்குநாறிமலையில் கைதானவர்களை விடுவிக்குமாறு கோரி வவுனியாவில் எதிர்ப்புப் போராட்டம்!

மார்ச் 15, 2024

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சிவ ராத்திரி தினத்தன்று இடம்பெற்ற வழிபாட்டில் ஈடுபட்ட போது கைது செய்யப்பட்ட 8 பேரையும் விடுதலை செய்ய வலியுறுத்தி வவுனியாவில் எதிர்ப்பு போராட்ட பேரணியொன்று தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.





வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தினரின் ஏற்பாட்டில் இடம்பெறும் இப்போராட்டமானது இன்று காலை நெடுங்கேணி சந்தியில் ஆரம்பமாகி பேரணியாக வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தை அடைந்து அங்கு மகஜர் கையளிக்கப்பட்டதுடன் அங்கிருந்து சிங்கள பொலிஸ் நிலையம் நோக்கி சென்றுகொண்டுள்ளது.





அதேவேளை போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள்' வெடுக்குநாறி மலையில் எழுந்தருளியிருக்கும் எங்கள் சிவனின் சாபத்திற்கு ஆளாகாதீர், சிவ வழிபாட்டில் இருந்தவரை எதற்காக கைது செய்தாய் , வெடுக்குநாறிமலை தமிழர் சொத்து, பொலிஸ் அராஜகம் ஒழிக , நெடுங்கேணி பொலிஸாரே பொய் வழக்குகளை மீளப்பெறு உள்ளிட்ட வாசகங்கள் தாங்கிய அட்டைகளுடன் கோசங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றது.

இப் போராட்டத்தில் மதத் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

வெடுக்குநாறியில் அமைந்துள்ள ஆதிசிவன் கோயிலில் சிவன் இராத்திரிப்பூசையில் கலந்து கொண்ட மக்களில் 8பேரை சிறிலங்கா பொலிசார் கைது செய்தனர்.கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யாது தொடர்ந்தும் இழுத்தடிப்பு செய்துவரும் நிலையில், கைது செய்யப்பட்டவர்கள் உணவுத்தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர். ஆனால் சிறைச்சாலையில் அப்படி உணவுத்தவிர்ப்புப் போராட்டம் நடைபெறவில்லை என உண்மைக்குப் புறம்பாக சிங்கள அரசாங்கம் தகவல்களை வெளியிட்டு வருகிறது.

# வெடுக்குநாறிமலை கைதானவர்களை விடுவிக்கக் கோரி நெடுங்கேணியில் பேரணி!

மார்ச் 16, 2024

நெடுங்கேணி நகர சந்தியில் ஆரம்பித்த கண்டன ஆர்ப்பாட்ட பேரணி, நெடுங்கேணி - புளியங்குளம் வீதி ஊடாக சென்று வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் வாயிலில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றதுடன், உதவிப் பிரதேச செயலாளரிடம் கண்டன மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அங்கிருந்து பேரணியாக சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் வனவளத் திணைக்கள அலுவலக வாயிலில் நின்று வனவளத் திணைக்களத்திற்கு எதிராக கோசங்களை எழுப்பியதுடன், பின்னர் அங்கிருந்து சென்று நெடுங்கேணி பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டனர்.

இதன்போது பொலிஸ் உயர் அதிகாரிகள் வருகை தந்து ஆர்ப்பாட்டக்காரருடன் பேச முற்பட்ட போதும், அதற்கு மறுப்பு தெரிவித்து பொலிசாருக்கு எதிரான கோசங்களை ஆர்ப்பாட்டக்கரரர்கள் எழுப்பினர். இதன்போது அப் பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டதுடன், பொலிஸ் நிலையத்தில் விசேட அதிரடிப் படையின் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

பொலிஸ் நிலையம் முன்பாக சுமார் அரை மணி நேரம் ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்ட மக்கள் பின்னர் அங்கிருந்து சென்று பேரூந்து நிலையத்தில் கண்டன ஆர்பாட்டத்தை நிறைவு செய்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் "பொலிஸ் அராஜகம் ஒழிக, வெடுக்குநாறி எங்கள் சொத்து, கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய், வழிபாட்டு உரிமையை தடுக்காதே, சிவ வழிபாட்டை தடை செய்யாதே, வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம், பொய் வழக்கு போடாதே, பௌத்தமயமாக்கலை உடனே நிறுத்து" என எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியிருந்ததுடன் கோசங்களையும் எழுப்பினர்.

வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலய நிர்வாகத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட இக் கண்டன ஆர்ப்பாட்டப் பேரணியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறிதரன், இ.சாள்ஸ் நிர்மலநாதன், வினோதரராதலிங்கம், தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சி இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் வேலன் சுவாமிகள், கிறிஸ்தவ மதகுருமார், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்களான செந்தில்நாதன் மயூரன், ஜி.ரி.லிங்கநாதன், ம.தியாகராஜா, து.ரவிகரன்'ஈ சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.







# வெடுக்குநாறிமலையில் சிவராத்திரி அன்று கைது செய்யப்பட்ட 8 பேரையும் விடுதலை செய்யக்கோரி நெடுங்கேணியில் 2024.03.15 அன்று போராட்டம்!











# வெடுக்குநாறிமலையில் சிவராத்திரி அன்று கைது செய்யப்பட்டவர்களுக்கு நீதிகோரி வவுனியாவில் 2024.03.16 பாரிய ஆர்ப்பாட்டம்!





# விடுதலை கிட்டும்வரை உறங்காது இந்த மண்!

மார்ச் 16, 2024





யுத்தத்தை முடித்துவிட்டதாக இலங்கை அரசு சொல்லிக் கொண்டாலும் மக்கள் மனங்களிலுள்ள உணர்வுகள் தொடர்ந்தும் செத்துப்போகாததொன்றாக உள்ளது.

வன்னியில் பாடசாலையொன்றின் இல்லமெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி நிகழ்வில் தமிழ்த்தேசத்தின் அடையாளங்கள் பிரதிபலிப்புடன் கூடிய மாணவர்கள் அமைத்த அலங்காரங்கள் வெளிப்படுத்தியுள்ளது.

துயிலுமில்லம், தமிழீழம் சிறைப்பிடிக்கப்பட்ட வெடுக்குநாறி சிவன் என வன்னி மாணவர்கள் காட்சிப்படுத்தி தமது உணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

# உணவு தவிர்ப்புப் போராட்டம் தற்காலிகமாக முடிவுக்கு வந்துள்ளது!

மார்ச் 16, 2024

சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வந்த வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயத்தில் கைது செய்யப்பட்ட 5 பேரின் உணவு தவிர்ப்புப் போராட்டம் நேற்று முடித்து வைக்கப்பட்டது.

வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயத்தில் சிவராத்திரி வழிபாட்டில் ஈடுபட்டிருந்த போது கடந்த 8 ஆம் திகதி நெடுங்கேணி பொலிசாரால் ஆலய பூசகர் உள்ளிட்ட 8 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அவர்களில் 5 பேர் கடந்த செவ்வாய்கிழமை முதல் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில், வெடுக்குநாறி மலையில் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கக் கோரியும், பொலிஸ் அராஜகத்தை கண்டித்தும் வவுனியாவில் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்று இடம் பெற்றிருந்தது.

ஆர்ப்பாட்டம் வவுனியா சிறைச்சாலை முன்றலில் நிறைவடைந்ததை தொடர்ந்து, வேலன் சுவாமி, அருட்தந்தை ரமேஸ், ஆகியோர் கைது செய்யப்பட்டர்களின் உறவினர்களுடன் கலந்துரையாடி அவர்களின் இணக்கத்துடன் சிறைச்சாலைக்கு சென்று உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஆலய பூசகர் மதிமுகராசா, எஸ்.தவபாலசிங்கம், கிந்துஜன், தமிழ்செல்வன், விநாயகமூர்த்தி ஆகிய 5 பேருடனும் கலந்துரையாடி அவர்களுக்கு நீராகாரம் கொடுத்து உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நிறைவு செய்து வைத்தனர்.



இதன்போது, அவர்களின் விடுதலைக்காக தாம் வெளியில் ஒன்றுபட்டு தொடர் போராட்டங்களை முன்னெடுப்பதாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முடிந்து வைத்தவர்கள் உறுதி மொழி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஜே.வி.பிக்கு கிளிநொச்சியில் எதிர்ப்பு!

மார்ச் 16, 2024

தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திசாநாயக்கவின் கிளிநொச்சி வருகைக்கு இன்று எதிர்ப்பு தெரிவித்து தனி நபர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மக்கள் சந்திப்பிற்காக அநுரகுமார திசாநாயக்க இன்றைய நாள் கிளிநொச்சி சென்றிருந்த நிலையில் இவ்வாறு எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

முன்னாள் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் சண்முகம் ஜீவராஜ் இவ்வாறு எதிர்ப்பினை வெளியிட்டிருந்தார்.

மக்கள் சந்திப்பு இடம்பெற்ற பகுதியை அண்மித்து A9 வீதியில் "இணைந்த வடக்கு கிழக்கை நீதிமன்றம் வரை சென்று பிரித்த பெருமை ஜே.வி.பி யை சாரும் , சொந்த இனத்தையே அழித்த ஜே.வி.பி எங்கள் இனத்திற்கு எவ்வாறு தீர்வு தரும்" என எழுதப்பட்ட பதாதைகளை கட்டி எதிர்ப்பில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# கொக்குத்தொடுவாய் உள்ளிட்ட மனிதப் புதைகுழிகள் தொடர்பில் அமெரிக்காஆராய்வு!

மார்ச் 17, 2024

வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் மற்றும் சிவில் சமூகப்பிரதிநிதிகளிடம் கொக்குத்தொடுவாய் உள்ளிட்ட மனிதப்புதைகுழிகள் மற்றும் காணாமல்போனோர் தொடர பான நிலுவை வழக்குகள் தொடர்பில் அமெரிக்கத் துணைத் தூதுவர் டக்ளஸ் ஈ.சொனெக் விவரமாகக் கேட்டறிந்துள்ளார்.

வட, கிழக்கு மாகாணங்களுக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் அமெரிக்கத் துணைத்தூதுவர் டக்ளஸ் ஈ.சொனெக் மற்றும் வடக்கைத் தளமாகக்கொண்டு இயங்கிவரும் சட்டத்தரணிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், வலிந்து காணாமலாக்கப் பட்டோரின் உறவினர்களுக்கு இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்நாள் வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது அமெரிக்கத் துணைத்தூதுவர் சொனெக் கொக்குத்தொடுவாய் உள்ளிட்ட மனிதப்புதைகுழிகள் தொடர்பில் விவரமாகக் கேட்டறிந்ததுடன், வலிந்து காணாமலாக்கப் பட்டோர் விவகாரம் தொடர்பில் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்குகள் பற்றியும் கேட்டறிந்துள்ளார்.

இருப்பினும் இச்சந்திப்பிலோ அல்லது துணைத்தூதுவருடனான வேறு பிரத்யேக சந்திப்புக்களிலோ பங்கேற்பதற்கு வட, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கப் பிரதிநிதிகளுக்கு அழைப்புவிடுக்கப்படவில்லை எனவும், 'இச்சந்திப்பில் கலந்துகொள்வதற்கு உங்களுக்கு ஏன் அழைப் புவிடுக்கப்படவில்லை?' என சங்கத்திடம் கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலக அதிகாரிகள் வினவியதாகவும் அறிய முடிகின்றது.

இவ்வாறானதொரு பின்னணியில் வட, கிழக்கு மாகாணங் களில் வலிந்து காணாமலாக்கப் பட்டோர் விவகாரம் தொடர்பில் நீண்டகாலமாக இயங்கிவரும் தமக்கு இச்சந்திப்பில் பங்கேற்பதற்கு அழைப்புவிடுக்கப்படாமை குறித்து வட, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்க உறுப்பினர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க இச்சந்திப்பு தொடர்பில் தமது உத்தியோக பூர்வ எக்ஸ் தளத்தில் பதிவிட்டிருக்கும் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம், பெரும்பாலான இலங்கையர்கள் காணாமல்போன தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறியாமல் இருப்பதாகவும், அக்குடும்பங்கள் உண்மையை அறிந்துகொள்வதற்கு உதவுவதில் தாம் உறுதியாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.



# வெடுக்குநாறிமலை விவகாரம் பற்றி விசேட குழுவில் பௌத்த பிக்குகளும் உள்வாங்கப்பட்டால் என்ன நேரும்?

## பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்கினேஸ்வரன்

மார்ச் 17, 2024

வெடுக்குநாறிமலை விவகாரம் தொடர்பில் ஆராய்வதற்காக ஜனாதிபதியினால் நியமிக்கப்படவிருக்கும் விசேட குழு தொடர பில் எதனையும் கூறமுடியாது. அக்குழுவில் பௌத்த பிக் குகளும் உள்வாங்கப்பட்டால் என்ன நடக்கும்? நாட்டின் வர லாறு மற்றும் தொல்பொருள் சான்றுகள் தொடர்பில் பலருக்கு போதிய விளக்கமின்மையால் தான் இத்தகைய பிரச்சினைகள் தோற்றம்பெற்றுள்ளன. எனவே வெடுக்குநாறிமலை விவகாரம் பற்றிய குழுவில் வரலாற்றை நன்கறிந்த தமிழ் பேராசிரியர்கள் உள்வாங்கப்படவேண்டியது அவசியமென தமிழ்மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் வெடுக்குநாறிமலையில் உள்ள ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை சிவராத் திரி தினத்தன்று பூஜை வழிபாடுகளில் ஈடுபடச்சென்ற பக்தர் களுக்கு பொலிசாரால் இடையூறு விளைவிக்கப்பட்டதுடன், இரவு வேளையில் அங்கு வழிபாடுகளைத் தொடர முற்பட்டோர் அங்கிருந்து வலுகட்டாயமாக வெளியேற்றப்பட்டனர். அதுமாத் திரமன்றி ஆலயப்பூசகர் உள்ளடங்கலாக எண்மர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டனர்.

அதற்கு எதிராகக் கடந்த திங்கட்கிழமை சிவில் சமூகப்பிரதி நிதிகளால் மேற்கொள்ளப்பட்ட கவனயீர்ப்புப்போராட்டத்தின் போது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்ற அமர் வைப் புறக்கணிக்கவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. அதேபோன்று விசேட குழுவொன்றை அமைத்து இவ்விடயம் தொடர்பில் விசாரணை நடத்தவேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் முன்வைக்கப்பட்ட கோரிக் கைக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இணக்கம் தெரிவித் துள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியில் இவ்விரு விடயங்கள் தொடர் பில் ஆராயும் நோக்கில் இன்றைய தினம் (16) மு.ப 11.00 மணி யளவில் யாழ்ப்பாணம், நல்லூரில் அமைந்திருக்கும் தனது இல் லத்தில் நடைபெறவுள்ள சந்திப்பில் பங்கேற்குமாறு தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப் பினருமான சி.வி.விக்கினேஸ்வரன் ஏனைய தமிழ் பாராளு மன்ற உறுப்பினர்களுக்கு அழைப்புவிடுத்துள்ளார்.

அதன்படி பாராளுமன்ற அமர்வைப் புறக்கணிப்பதற்கான சாத்தியப்பாடு குறித்து எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த விக்கி னேஸ்வரன், தனது இல்லத்தில் இன்றைய தினம் நடை பெறவுள்ள சந்திப்பில் பங்கேற்குமாறு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்திருப்பதாகவும், அதில் யார் பங்கேற்பார்கள் என்பது பற்றி இன்னமும் உறுதியாகத் தெரி யாத நிலையில் பாராளுமன்றப் புறக்கணிப்பு குறித்து விரிவாகக் கலந்துரையாடியதன் பின்னரே இறுதித் தீர்மானமொன்றுக்கு வரமுடியும் எனத் தெரிவித்தார்.

'பாராளுமன்ற அமர்வைப் புறக்கணிப்பதனால் ஏதேனும் நன் மைகள் கிட்டுமா? அல்லது இவ்விவகாரம் தொடர்பில் ஜனாதி பதியை நேரடியாக சந்தித்துப் பேசவேண்டுமா? இவற்றில் எதனூடாக எமக்கான தீர்வைப் பெற்றுக்கொள்ளமுடியும்? என்பது பற்றி ஏனைய தமிழ் பாராளுமன்ற உறுப் பினர்களுடனும் கலந்துரையாடவேண்டும். பாராளுமன்ற பகிஷ்கரிப்பின் ஊடாக எமது மனநிலையை வெளிப்படுத்த முடியுமே தவிர, அதன்மூலம் நிலையான தீர்வைப் பெற்றுக் கொள்ளமுடியுமா என்ற கேள்வி உள்ளது' எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் வெடுக்குநாறிமலை விவகாரம் தொடர்பில் ஆராய்வதற் காக விசேட குழுவொன்றை நியமிப்பதற்கு ஜனாதிபதி இணங்கியிருக்கும் நிலையில், அதன் நம்பகத்தன்மை குறித்து வினவியபோது அதற்கு விக்கினேஸ்வரன் பின்வருமாறு பதிலளித்தார்:

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நியமிக்கவிருக்கும் விசேட குழு தொடர்பில் எதனையும் கூறமுடியாது. அக்குழுவில் பௌத்த பிக்குகளும் உள்வாங்கப்பட்டால் என்ன நடக்கும்? நாட்டின் வரலாறு மற்றும் தொல்பொருள் சான்றுகள் தொடர்பில் போதிய விளக்கமின்மையால் தான் இத்தகைய பிரச்சினைகள் தோற் றம்பெற்றுள்ளன. எனவே வெடுக்குநாறிமலை விவகாரம் பற் றிய குழுவில் வரலாற்றை நன்கறிந்த தமிழ் பேராசிரியர்களும் உள்வாங்கப்படவேண்டும். ஆகையினால்தான் நாளைய தினம் (இன்று) எனது இல்லத்தில் நடைபெறவிருக்கும் சந்திப் பில் கலந்துகொள்ளுமாறு வரலாறு மற்றும் தொல்லியல் துறை பேராசிரியர்களான எஸ்.பத்மநாதன் மற்றும் பி.புஷ்பரட்ணம் ஆகியோருக்கும் அழைப்புவிடுத்திருக்கின்றேன். எனவே இவ் விவகாரங்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடித் தீர்மான மொன்றை எட்டுவதே பொருத்தமானதாக இருக்கும் என்று தெரிவித்தார்.

# தமிழ் இளைஞர்களை எழுச்சி கொள்ள வைக்கும் வகையில் கருத்து கூறினார் என ச. லலீசன் மீது குற்றச்சாட்டு!

மார்ச் 17, 2024

கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலையின் அதிபர் ச. லலீச னுக்கு எதிராக புலனாய்வு துறையினரால் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கடந்த டிசம்பர் மாதம் 10ஆம் திகதி இடம்பெற்ற "தமிழ் வேள்வி - 2023" என்ற நிகழ்வில், "ஈழ தமிழ் சமுதாயத்தில் தற்போது இளைஞர் அமைப்புக்களின் எழுச்சி , அவசியமானதா ? அவசியமற்றதா ?" எனும் தலைப்பில் இடம்பெற்ற பட்டிமன்றத்தில் நடுவராக லலீசன் கலந்து கொண் டிருந்தார்.

அதன் போது, தமிழ் இளைஞர்களை எழுச்சி கொள்ள தூண்டும் வகையில் கருத்துக்களை தெரிவித்ததாகவும், இன நல்லிணக் கத்தை குழப்பும் வகையிலான கருத்துக்களை தெரிவித்ததாக கல்வி அமைச்சுக்கு கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம் கல்வி அமைச்சின் ஒழுக்காற்று பிரிவுக்கான மேலதிக செயலர், சீ. சமந்தி வீரசிங்க, கல்வி அமைச்சின் ஆசியர் பயிற்சி கல்வி பிரி வின் பணிப்பாளரிடம் விசாரணைகளை மேற்கொண்டு, நட வடிக்கை எடுக்குமாறும் , எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து, தனக்கு விளக்கமான அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்.

கல்வி அமைச்சுக்கு குறித்த முறைப்பாட்டை புலனாய்வு பிரி வினரே வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒரு பட்டிமன்றில் கூறப்பட்ட கருத்தை முறைப்பாடாக வழங்கிய போது, அதனை ஏற்று விசாரணைகளை முன்னெடுப்பது , கருத்து சுதந்திரத்திற்கு எதிரான மோசமான செயற்பாடு என பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.




# வெடுக்குநாறிமலை வழிபாடு தடுக்கப்பட்டமைக்கும், கைது செய்யப்பட்டவர்கள் விடுதலைக்காகவும் திருகோணமலையில் போராட்டம்!

மார்ச் 18, 2024

சிவராத்திரி தினத்தன்று வெடுக்குநாறி மலை சிவன் ஆலயத்தில் வழிபாட்டின் போது கைது செய்யப்பட்ட எண்மரை விடுதலை செய்யக்கோரியும் அச் சம்பவத்தைக் கண்டித்தும் திருகோணமலை சிவன்கோவிலுக்கு முன்னால் நேற்று மாலை கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று இடம்பெற்றது .

இதனை சமூக செயற்பாட்டாளர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.





வழிபாடு எமது அடிப்படை உரிமை ஆதி சிவன் ஆலயம் எமது பூர்வீகம், ஈழத்தின் சமயத் தலைவர்களை அபகரிக்காதே தொல்பொருள் எனும் போர்வையில் பௌத்தத்தை விதைக் காதே, வழிபாட்டைத் தடுக்கும் உரிமையைக் காவல் துறை யினருக்கு கொடுத்தது யார், ஆலய நிர்வாகிகளை உடனடியாக விடுதலை செய், ஆலயங்கள் சைவத் தமிழர்களின் பூர்வீக அடையாளம் போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

இதில் சுமார் நூற்றுக்கும் அதிகமானவர்கள் இந்தப் போராட டத்தில் கலந்து கொண்டனர்.

வெடுக்குநாறி மலையில் இடம் பெற்ற புனிதமான சிவராத்திரி நாளில் இடம் பெற்ற சம்பவம் அடக்குமுறையானது இதனை காவல் துறையினர் மேற்கொண்டமை கண்டிக்கத்தக்கது என தென்காயிலை ஆதீனம் அகத்தியார் அடிகளார் தெரிவித்தார்.

திருகோணமலையில் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் தெரிவிக்கையில் நாங்கள் வழிபாட்டில் ஈடுபடும் போது இவ் வாறான விடயங்களை மேற்கொள்வது நல்லதல்ல. இந்த நாட் டிற்கு ஒரு சமுதாயத்திற்கு ஏற்றதல்ல இறைவனை வழிபடும் போது அடக்குமுறையான நிகழ்வு சைவத்திற்கு மட்டுமல்ல முழு சமூகத்திற்கும் ஏற்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

# வெடுக்குநாறிமலையில் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்க கோரி மூதூரில் பேரணி!

மார்ச் 18, 2024

வெடுக்குநாறி மலையில் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தியும், மத வழிபாட்டு உரிமையை உறுதி செய்யக் கோரியும் இன்று மூதூரில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.



மூதூர் மணிக்கூட்டு கோபுரத்திற்கு முன்பாக ஆரம்பித்த கவனயீர்ப்புப் போராட்டம் மூதூர் பிரதேச செயலகம் வரை இடம்பெற்றது. இப்போராட்டத்தின் இறுதியில் மகஜர் ஒன்றும் மூதூர் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தரிடம் கையளிக்கப்பட்டது.







# வெடுக்குநாறிமலை பொய் வழக்கில் கைது செய்யப்பட்ட எட்டுப்பேரும் நீதிமன்றால் விடுதலை!

மார்ச் 19, 2024

வெடுக்குநாறிமலை பொய் வழக்கில் கைது செய்யப்பட்ட எட்டுப் பேரும் நீதிமன்றால் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டது.

வவுனியா வடக்கு, வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் கடந்த சிவராத்திரி தினத்தன்று கைதுசெய்யப்பட்ட ஆலயபூசகர் உள்ளிட்ட 8 பேரையும் இன்று செவ்வாய்க்கிழமை (19) வரை விளக்கமறியலில் வைக்க வவுனியா நீதிமன்று உத்தரவு பிறப்பித்தது.





இதனையடுத்து அவர்கள் வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டனர். இந்நிலையில் அது தொடர்பான வழக்கு இன்றையதினம் நீதிமன்றில் மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த 8 பேரையும் வழக்கிலிருந்து விடுதலை செய்த நீதிபதி வழக்கினையும் தள்ளுபடிசெய்தார்.

குறித்த வழக்கில் ஆலயநிர்வாகம் சார்பாக சிரேஸ்ட சட்டத்தரணிகளான என்.சிறிகாந்தா, அன்ரன் புனிதநாயகம், அருள், க.சுகாஸ், தலைமையில் பல சட்டத்தரணிகள் முன்னிலையாகியிருந்தனர்.

# இலங்கை கடற்படையை புனிதமாக்கி தமிழக மீனவர்களையும் உள்ளூர் மீனவர்களையும் மோத வைக்கும் சதி!

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமசந்திரன்

மார்ச் 19, 2024

தமிழக தமிழ் கடற்தொழிலாளர்களையும், வடக்கு தமிழ் கடற்தொழிலாளர்களையும் கடலில் மோத வைக்கவே குடியியல் தன்னார்வ படையணி என்பதனை கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உருவாக்க நினைக்கிறார் என சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

வட கடலில் தமிழக கடற்தொழிலாளர்களின் அத்துமீறல்கள் தொடர்ந்து காணப்படுகிறது. வடக்கு கடற்தொழிலாளர்களின் வலைகள் அறுக்கப்பட்டு, அவர்களின் படகுகள் சேதமாக்கப்பட்டும் வருகின்றன.

தமிழக கடற்தொழிலாளர்களின் அத்துமீறல்கள் நிறுத்தப்பட வேண்டும். இந்தியாவில் கூட தடை செய்யப்பட்ட அடிமடி தொழிலை அவர்கள் இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து செய்கின்றனர்.

இதனை தடுக்க வேண்டிய கடமை கடற்தொழில் அமைச்சரின் கடமையாகும். அதனை தடுத்து நிறுத்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அதற்காக குடியியல் தன்னார்வ படையணி என கடல்பாதுகாப்பு படையணியை உருவாக்க உள்ளதாக கடற்றொழில் அமைச்சர், அமைச்சரவை பாத்திரத்தை தாக்கல் செய்துள்ளார்.

அவ்வாறு கடல் பாதுகாப்பு படையை கடற்தொழில் அமைச்சர் உருவாக்கி கடலில் தமிழக கடற்தொழிலாளர்களுடன் படையணியை மோத விட போகிறாரா ?

உருவாக்கப்படவுள்ள கடல் பாதுகாப்பு படையில் தமிழர்களே உள்வாங்கபடுவார்கள். குறிப்பாக வடக்கு கடற்தொழிலாளர்களே அதில் அதிகம் உள்வாங்கபடுவார்கள். அவர்களை தமிழக கடற்தொழிலாளர்களுடன் நேரடியாக மோத விட போகின்றார்களா ?

இது இலங்கை கடற்படையை நல்லவர்களாக்கி , கடல் பாதுகாப்பு படையை தமிழக கடற்தொழிலாளர்களுடன் மோத விடும் செயற்பாடு.

அதன் மூலம் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக போராடும் தமிழக கடற்தொழிலாளர்களை, வடக்கு தமிழ் கடற்தொழிலாளர்களுக்கு எதிராக போராட வைக்கும் முயற்சியே இது.

இந்த படையணி உருவாக்கப்படுமாக இருந்தால் , கடலில் தமிழக - வடக்கு, தமிழ் கடற்தொழிலாளர்களுக்கு இடையில் மோதலை உருவாக்கும் முயற்சி என்றே கருதுகிறோம்.




கடற்படை செய்ய வேண்டிய வேலைகளை கடல் பாதுகாப்பு படையை செய்ய தூண்டி பிரச்சனைகளை உருவாக்க கூடாது.

எனவே அமைச்சரவை பத்திரத்தை உடனடியாக கடற்தொழில் அமைச்சர் மீள பெற வேண்டும். அதற்கு இங்குள்ள கடற்தொழில் சங்கங்கள் அமைச்சருக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என தெரிவித்தார்.

# யாழ். பல்கலைக்கழகத்தின் முன் வீதியை மறித்து மாணவர்கள் போராட்டம்!

மார்ச் 19, 2024

தமிழர் தாயகத்தில் தொல்லியல் என்ற போர்வையிலான பண்பாட்டு அழிப்பையும் சிங்கள - பௌத்தமயமாக்கலையும் உடன் நிறுத்துமாறு கோரியும், வெடுக்குநாறிமலை ஆலயத்தில் நெடுங்கேணிப் பொலிசாரால் திட்டமிட்டுக் கைது செய்யப்பட்ட செயற்பாட்டினை கண்டித்து இன்றைய நாள் செவ்வாய்க்கிழமை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முன்றலில், மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.













# இந்திய கடற்தொழிலாளர்களின் அத்துமீறல்களை கண்டித்து யாழில் உணவு தவிர்ப்பு போராட்டம்!

மார்ச் 19, 2024

இந்திய கடற்தொழிலாளர்களின் அத்துமீறிய செயற்பாட்டை கண்டித்து யாழ் மாவட்ட கடற்தொழிலாளர்கள் இன்று செவ்வாய்க்கிழமை (19) உணவு தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

யாழ் மாவட்ட கிராமிய கடற்தொழில் அமைப்புக்களின் சம்மேளனமும், யாழ் மாவட்ட கடற் தொழில் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனமும் இணைந்து யாழ்ப்பாணம் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்திற்கு முன்பாக உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.





முன்னதாக இன்றைய தினம் காலை மருதடி சந்தியில் இருந்து பேரணியாக யாழ் இந்திய துணைத் தூதரகம் நோக்கி சென்ற கடற்தொழிலாளர்கள் துணைத் தூதரகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

பின்னர் பொலிஸார் அங்கிருந்து வெளியேற்றியதை அடுத்து யாழ் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்திற்கு முன்பாக தமது உணவு தவிர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.







# வவுனியா நீதிமன்ற நீதவானுக்கு சிங்கள முக நூலில் எச்சரிக்கை!

## யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன்

மார்ச் 21, 2024

நீதவானுக்கு சிங்கள முக நூலில் எச்சரிக்கை

வெட்டுக்குநாறிமலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலய சிவராத் திரிதின நிகழ்வு தொடர்பில் பொலிஸாரால் அராஜகமான முறையில் கைது செய்யப்பட்ட 8 பேரையும் விடுதலை செய்த வவுனியா நீதிமன்ற நீதவானுக்கு சிங்கள முக நூல் (பேஸ்புக்) ஒன்றில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட எம்.பி. யான சி. சிறீதரன் சபையின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.



பாராளுமன்றத்தில் புதன்கிழமை (20) இடம்பெற்ற சபா நாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான 2 ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்விட யத்தை சபையின் கவனத்திற்கு கொண்டு வந்த சிறீதரன் எம்.பி. தொடர்ந்து பேசுகையில்,


வெட்டுக்குநாறிமலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலய சிவராத் திரிதின நிகழ்வு தொடர்பில் பொலிஸாரால் அராஜகமான முறையில் கைது செய்யப்பட்ட 8 பேரும் வவுனியா நீதிமன்ற நீதியரசரால் விடுதலை செய்யப்பட்ட பின்னர் "வடக்கு எமது உரிமை" எனவும் பெயரில் உள்ள சிங்கள முக நூல் பக்கத்தில் இந்த 8 பேரையும் விடுதலை செய்த நீதியரசரின் பெயரைக் குறிப்பிட்டு விரைவில் அவர் குருந்தூர் மலை விவகாரத்தில் தீர்ப்பு வழங்கியவர் நாட்டை விட்டு தப்பியோடியது போன்று தப்பியோடுவார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

நீதியாக வழங்கப்படும் தீர்ப்பைக்கூட சிங்கள பேரினவாதத்தால் ஜீரணிக்க முடியாமல் இருக்கின்றது என்பதைத்தான் இந்த சிங்கள முக நூல் செய்தி மிகவும் வெளிப்படையாக குறிப் பிடுகின்றது.

இந்த நாட்டில் அடிக்கடி நல்லிணக்கம் பற்றி பேசுகின்றவர்கள் வெட்டுக்குநாறிமலையில் நடந்த பொலிஸ் அராஜகம் பற்றி கருத் தில் கொள்ளுங்கள். தான் விரும்பும் மதத்தை வணங்க முடியாத நாட்டில் எப்படி உங்களினால் நல்லிணக்கம்பற்றி வாய் கிழிய கத்த முடியும்? நல்லிணக்கம் என்பது பேச்சளவில் மட் டும் இருப்பதல்ல. ஓர் இன மக்களை அனுசரித்தது நடப்பதில் தான் அது உள்ளது. எனவே வெட்டுக்குநாறி மலையில் இந்து மக்கள் வழிபட எந்த தடையும் இனிமேல் இருக்கக்கூடாது.

இந்தப்பிரச்சினைக்கு முழுமையான காரணம் தொல்பொருள் துறைக்கு அமைச்சராக இருக்கின்ற விதுர விக்கிரமநாயக் கதான். அவர் ஒரு நேர்மையாக, கள்ளம் கபடமற்று இதயசுத் தியோடு செயற்படுவாரேயானால், இனங்களை மதித்து செயற் படுவாரேயானால் இந்த நாட்டில் இவ்வளவு பிரச்சினைகள் வந்திருக்க நியாயமில்லை.

வெட்டுக்குநாறிமலையில் தொல்லியல் திணைக்களமும்



பொலிசாரும் அராஜகமாக நடந்து கொண்ட முறை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இந்தியப்பிரதமர் நரேந்திரமோடிக்கும் நான் எழுதிய கடிதத்தின் பிரதியையும் இந்த சபையில் சமர்ப்பிக்கின்றேன் என்றார்.

# யாழ். இந்திய துணை தூதரகத்தை முற்றுகையிட்ட மீனவர்கள்!

மார்ச் 22, 2024

இந்தியன் இழுவை மடி தொழிலுக்கு எதிர்ப்பு தெரிவித்து, யாழ்ப் பாண மாவட்ட மீனவர்கள் இன்று யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணை தூதரகத்தினை முற்றுகையிட்டுள்ளனர்.

இது தொடர்பில் கடந்த செவ்வாய்க்கிழமை மீனவர்கள் யாழ்ப் பாணத்தில் உண்ணாவிரத போராட்டினை ஆரம்பித் திருந்தனர்.

இவ்வாறு போராட்டத்தின் ஆரம்பித்த மீனவர்கள் தமது பொறுமை இழந்து இன்றைய நாள் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துவங்கி தூதரத்துக்கு முன்னால் போராட்டத்தில் ஈடு பட்டு வருகின்றதுடன் இந்திய துணை தூதரகத்திற்குள் நுழை வதற்கு முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் பொலிசார் மீனவர்களை சுமூகமான நிலைக் குள் கொண்டுவர முயன்றும் மீனவர்கள் பொலிசாரின் கட்டுப் பாட்டுக்குள் அடங்காமல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.



# யாழில் நான்கு நாட்களாக தொடர்ந்த உணவுத் தவிர்ப்பு போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது!

மார்ச் 22, 2024

இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாட்டை கண்டித்து யாழ் மாவட்ட மீனவர்கள் முன்னெடுத்திருந்த உணவு தவிர்ப்பு போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது.

யாழ் மாவட்ட கிராமிய கடற்தொழில் அமைப்புக்களின் சம்மேளனமும், யாழ் மாவட்ட கடற் தொழில் கூட்டுறவு சங்கங் களின் சம்மேளனமும் இணைந்து கடந்த 19 ஆம் திகதி காலை முதல் இன்றைய நாள் வெள்ளிக்கிழமை வரை யாழ்ப்பாணம் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்திற்கு முன்பாக உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வந்திருந்தனர்.



இந்த நிலையில் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்த நான்கு மீனவர்களுக்கும் ஆதரவு தெரிவித்து இன்றைய நாள் காலை முதல் நூற்றுக் கணக்கான மீனவர்கள் ஒன்றுகூடி யிருந்தனர்.

பின்னர் மீனவர்கள் ஒன்றிணைந்து இந்திய துணைத் தூதரகத்தை நோக்கி பேரணியாக சென்று அங்கு முற்றுகை போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

சில மணி நேர போராட்டத்தின் பின்னர் ஒரு சில மீனவர்கள் மாத்திரம் இந்திய துணைத் தூதரகத்துக்குள் பேச்சுவார்த் தைக்காக அழைக்கப்பட்டு கலந்துரையாடியதை அடுத்து



மீனவர்கள் மீண்டும் உணவு தவிர்ப்பு போராட்டம் இடம்பெறும் இடத்திற்கு சென்று அங்கு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

பின்னர் போராட்டம் இடம்பெறும் இடத்திற்கு வருகை தந்த சிறீலங்கா கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீனவர்களுடன் கலந்துரையாடி உணவு தவிர்ப்பு போராட் டத்தை முடிவுக்கு கொண்டுவந்தார்.

கடற்றொழில் அமைச்சரும், இலங்கை கடற்படையும் விடும் தவறுகளாலேயே இந்திய மீனவர்கள் இலங்கைக்குள் வருவ





தாக இந்திய துணைத் தூதரக அதிகாரி கூறியதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

# வலி. வடக்கு தையிட்டியில் சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்கு எதிராக போயா நாளில் போராட்டம்!

மார்ச் 23, 2024

போயா தினத்தை முன்னிட்டு முன்னெடுக்கப்படும் வழி பாடுகளை கண்டித்தும் தமிழர்களின் காணியை அபகரித்து இராணுவத்தினரால் பௌத்த விகாரை நிர்மாணிக்கப் பட்டுள்ளதாக குற்றஞ்சாட்டி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தலைமையில் பௌர்ணமி தினத்திற்கு முன்னதாக போராட் டத்தை முன்னெடுத்துள்ளனர்.

காங்கேசன்துறை வலிகாமம் வடக்கு தையிட்டி பகுதியில் இராணுவத்தினரால் கட்டப்பட்ட திஸ்ஸ விகாரைக்கு அருகில் உள்ள வீதியோரத்தில் போராட்டத்தை முன்னெடுத்த தமிழர்கள் சட்டவிரோத விகாரையை அகற்று, எமது நிலம் எமக்கு வேண்டும், அமைதியை சீர்குலைக்கும் பொலிசார் எமக்கு வேண்டாம், போன்ற கோசங்களை எழுப்பினர்.

"காங்கேசன்துறையில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க திஸ்ஸ விகாரையில் புனரமைக்கப்பட்ட ஸ்தூபி வைக்கும் பணி 27 ஏப்ரல் 2023 அன்று இடம்பெற்றது..." என இலங்கை இராணுவம் ஏப்ரல் 29ஆம் திகதி தனது உத்தியோகபூர்வ இணையதளத்தில் செய்தி வெளியிட்டிருந்தது.

"கி.பி. 3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வரலாற்றைக் கொண்ட இந்த விகாரை, தேவநம்பியதிஸ்ஸ மன்னனால் கட்டப்பட்ட தாகக் கூறப்படுகிறது" என இராணுவம் கூறுகிறது.

14 தமிழ் குடும்பங்களின் 6.2 ஏக்கர் நிலத்தை இராணுவம் வலுக்கட்டாயமாக சுவீகரித்து திஸ்ஸ விகாரையை நிர்மாணித் துள்ளதாக தமது காணிகளை விடுவிக்கக் கோரி மாதந்தம் பௌர்ணமி தினத்தில் விகாரைக்கு அருகில் போராட்டம் நடத்தும் தமிழர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.









# இணைந்த சுகாதார கற்கைகள் பட்டதாரிகள் யாழ். பல்கலைக்கழகத்தின் முன் போராட்டம்!

மார்ச் 25, 2024

இணைந்த சுகாதாரக் கற்கைகள் மாணவர்களின் வேலை வாய்ப்பை உறுதி செய்யக்கோரி யாழ்ப்பாணத்தில் கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற் பாட்டில் இன்றைய நாள் நண்பகல் யாழ் பல்கலைக்கழக இணைந்த சுகாதாரக் கற்கைகள் பீடத்தில் இருந்து ஆரம்பித்த பேரணி பலாலி வீதி ஊடாக பல்கலைக்கழக பிரதான நுழை வாயில் வரை சென்று அங்கு கவனயீர்ப்பு போராட்டம் முன் னெடுக்கப்பட்டது.

இணைந்த சுகாதாரக் கற்கைகள் மாணவர்களின் வேலை வாய்ப்பில் அசமந்தமான போக்கினை உடன் நிறுத்தி, தரமான சேவையை மக்களுக்கு வழங்க, இணைந்த சுகாதார விஞ் ஞான பட்டதாரிகளுக்கு நியமனங்களை வழங்கு என கோரியே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது இணைந்த சுகாதார கற்கைகள் பட்டதாரிகள், பல்கலைக்கழக மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.










# முல்லை. தேராவில் தமிழ் வித்தியாலய மாணவர்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்!

மார்ச் 13, 2024

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் உள்ள தேராவில் தமிழ் வித்தியாலய மாணவர்கள் பாடசாலை தொடங்கப்பட் டதன் நினைவாக 27ஆவது ஆண்டு பாடசாலை தினத்தினை முன்னிட்டு இன்று (25) காலை பாடசாலை மாணவர்களால் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தற்போதைய காலகட்டத்தில் இளம் சமூகத்தினர் குறிப்பாக கல்வி கற்கும் மாணவர்கள் போதையாலும், சமூக சீர கேடுகளாலும் அழிந்துகொண்டு செல்கின்றார்கள். இவற்றில் இருந்து மாணவர்களை மீட்டு கல்வியினை காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் தேராவில் தமிழ் வித்தியாலய மாணவர்கள், ஆசிரியர்கள் இணைந்து இந்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழர் கல்வியினை திட்டமிட்டு நசுக்குகின்ற கொடிய செயல்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது போதை எமக்கு வேண்டாம் போதையில் இருந்து விடுபட்ட ஆரோக்கியமான சமூகத்தினை உருவாக்குவோம் என்ற தொனிப்பொருளில் 'அழிக்காதே அழிக் காதே கல்வியை அழிக்காதே', 'பாதுகாப்போம் இயற்கை வளத் தினை பாதுகாப்போம்', 'இளவயது திருமணம் வேண்டாம் இளையோரே கொஞ்சம் கேளீர்', 'அழிக்காதே அழிக்காதே மாணவர்கள் கல்வியினை அழிக்காதே', 'ஒழிப்போம் ஒழிப் போம் சிறுவர் துஷ்பிரயோகத்தினை ஒழிப்போம்', 'சிறுவர் களின் உரிமையினை பாதுகாப்போம்' உள்ளிட்ட கோசங்கள்



எழுதப்பட்ட பதாதைகளை தாங்கியவாறு மாணவர்கள் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

# கீரிமலையில் சட்டவிரோதமாக அமைந்துள்ள சிறீலங்கா ஜனாதிபதிமாளிகை காணி அளவீட்டு பணிகள்; மக்கள் எதிர்ப்பால் கைவிடப்பட்டுள்ளது!

மார்ச் 26, 2024

யாழ்ப்பாணம் கீரிமலை சட்டவிரோதமாக அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகை காணிகளை நகர அபிவிருத்தி நடவடிக் கைக்காக சுவீகரிப்பதற்கான அளவீட்டுப்பணி இன்றைய நாள் செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட இருந்த நிலையில் மக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டுள்ளது.



குறித்த காணி அளவீட்டுக்கு காணி உரிமையாளர்கள் மற்றும்



பொதுமக்கள் எதிர்ப்பை வெளியிட்டதுடன் நில அளவைத் திணைக்களத்தின் வாகனத்தினையும் இடைமறித்து போராட் டத்தில் ஈடுபட்டனர்.

காணி உரிமையாளர்களின் எதிர்ப்பினை அடுத்து காணி யினை அளவீடு செய்வதற்கு தமக்கு விருப்பம் இல்லை என காணி உரிமையாளர்கள் கடிதம் எழுதி கையொப்பமிட்டு வழங்கியதை அடுத்து நில அளவைத்திணைக்கள அதிகாரிகள் அங்கிருந்து திரும்பிச் சென்றனர்.

தெல்லிப்பளை பிரதேச செயலக பிரிவின் கீழ் உள்ள நகுலேஸ்வரம் ஜே/226 மற்றும் காங்கேசன்துறை ஜே/233 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள ஆழ்வான்மலையடி, வேலர்காடு, புண்ணன்புதுக்காடு, பத்திராயான், புதுக்காடு, சோலைசேனாதிராயன் ஆகிய பகுதிகளில் உள்ள சுமார் 29 ஏக்கர் காணிகளை சுவீகரிக்கும் நோக்குடன் இந்த அளவீட்டு









# வலிகாமம் வடக்கில் விடுவிக்கப்பட்ட வீடுகளை உடைக்கும் கொள்ளையர்கள்; வேடிக்கை பார்க்கும் சிறீலங்கா காவல்துறை மற்றும் இராணுவத்தினர்!

மார்ச் 30, 2024

யாழ்ப்பாணம் வலி வடக்கு பகுதியில் கடந்த 33 வருடங்களாக சிறீலங்கா சிங்கள இராணுவ முகாம் அமைக்கப்பட்டிருந்த தனி யாரின் காணிகள் அண்மையில் காணி உரிமையாளர்களிடம் மீள கையளிக்கப்பட்டது.

பெரும்பாலான காணி உரிமையாளர்கள் வெளி பிரதேசங்கள் மற்றும் வெளிநாடுகளில் வசித்து வருவதால் அவர்களால் உட னேயே அக்காணிகளுக்குள் குடியமர முடியவில்லை. அதனை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டுள்ள கொள்ளையர்கள்(?), அந்த காணிகளுக்குள் புகுந்து வீடுகளை உடைத்து இரும்புகள், கதவுகள், கதவு நிலைகள் என்பவற்றை களவாடி செல்கின்றனர்.

இது தொடர்பில் பாதுகாப்பு தரப்பு மற்றும் பொலிசாரிடம்





அறிவித்தும் கொள்ளையர்களைக் கட்டுப்படுத்த எந்த நடவடிக் கையும் இல்லை என அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக் கின்றனர்.

# கல்முனை வடக்கு பிரதேச செயலகம் முழுமையான அதிகாரத்தோடு இயங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து நடைபெறும் போராட்டம் நேற்றுடன் 05 வது நாளாக நடைபெற்றது! – 30.03.2024











# வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் சர்வதேச நீதி கோரி வவுனியாவில் போராட்டம்!

மார்ச் 30, 2024

வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் சர்வதேச நீதி கோரி இன்றைய நாள் சனிக்கிழமை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பழைய பேருந்து நிலையத்துக்கு முன்பாக இன்று காலை 10 மணிக்கு போராட்டம் ஆரம்பமானது.

குற்றமிழைத்த நாட்டில் எமக்கான நீதி கிடைக்கப்பெறாது. இதனால் சர்வதேச நீதி கோரி நாம் போராட்டத்தினை முன்னெடுத்து வருகிறோம். எனவே சர்வதேசம் இனியும் கண்மூடித்தனமாக இருக்காமல் எமக்கான நீதியை பெற்றுத்தர வேண்டும்.

எமது போராட்டங்களை நீர்த்துப்போகச் செய்வதற்காக பல அமைப்புக்கள் முற்படுகின்றன. எனவே, குற்றம் இழைத்தவர்களை சர்வதேச நீதிமன்றத்தில் பாரப்படுத்தி எமக்கான நீதியை வழங்கவேண்டும். அதுவரை நாம் போராடிக் கொண்டே இருப்போம் என போராட்டத்தில் ஈடுபட்ட உறவினர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை போராட்டத்தில் ஈடுபட்டோர் 'ஓ.எம்.பி கண்துடைப்பு நாடகம்', 'சர்வதேச விசாரணையே எமக்கு தேவை', '12 ஆணைக்குழுக்கள் அமைத்தும் பயன் இல்லை' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறு பல்வேறு கோசங்களை எழுப்பியிருந்தனர்.























## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com



# கனடிய செய்திகள்

## "பிரதமர் பதவியிலிருந்து வெளியேறுவதைப் பற்றி நினைக்கிறேன்"

### கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ

மார்ச் 16, 2024

நான் ஒவ்வொரு நாளும் பிரதமர் பதவியிலிருந்து வெளியேறுவதைப் பற்றி நினைக்கிறேன். தனிப்பட்ட தியாகங்களைச் செய்வது நான் செய்யும் பைத்தியக்காரத்தனமான வேலை என்று கனேடியப் பிரதமராக இருக்கும் ஜஸ்டின் ட்ரூடோ கூறியுள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை ஒரு பிரஞ்சு மொழி ஒளிபரப்பாளருடனான நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நான் ஒவ்வொரு நாளும் பிரதமர் பதவிலிருந்து வெளியேறுவதைப் பற்றி அடிக்கடி நினைப்பதுண்டு. தனிப்பட்ட தியாகங்களைச் செய்வது நான் செய்யும் பைத்தியக்காரத்தனமான வேலை. நிச்சயமாக இது மிகவும் கடினமானது. சில நேரங்களில் இது மிகவும் சலிப்பாக இருக்கிறது. ஆனாலும் மற்றொரு தேர்தல் மூலம் மீண்டும் பிரதமராக வரத் திட்டமிட்டுள்ளதாகவும் கனேடியப் பிரதமராக இருக்கும் ஜஸ்டின் ட்ரூடோ கூறினார்.



ஜஸ்டின் ட்ரூடோ தனது அரசியல் எதிர்காலம் குறித்து வளர்ந்து வரும் கேள்விகளை எதிர்கொண்டுள்ளார். கருத்துக்கணிப்புகள் அவர் வருவதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே காணப்படுறது.

கருத்துக்கணிப்பில், கனேடியர்கள் அவரது அரசாங்கத்தின் மீது பெருகிய அதிருப்தியை உணர்கிறார்கள். வீட்டு வசதி மற்றும் வாழ்க்கைச் செலவு போன்ற பிரச்சினைகளால் விரக்தியடைந்துள்ளனர். மக்கள் ஆதரவானது பிரதான எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் கட்சிக்கு பின்னால் ஆளும் கட்சி பின்தங்கிய நிலையில் உள்ளனர்.

கனடாவின் அடுத்த பொதுத் தேர்தல் அக்டோபர் 2025க்குள் நடத்தப்பட வேண்டும். கனடாவில் ஏறக்குறைய ஒரு தசாப்த கால கன்சர்வேடிவ் கட்சி ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்த ட்ரூடோ, பெரும்பான்மை தேர்தல் வெற்றியுடன் ஆட்சிக்கு வந்தார். ஆனால் தாராளவாதிகளுக்கான ஆதரவு இரண்டு அடுத்தடுத்த தேர்தல்களில் குறைந்து வருகிறது.

கடந்த ஆண்டு, அவரும் அவரது மனைவி சோஃபி கிரெகோயர் ட்ரூடோவும் பிரிவதாக அறிவித்தனர். இவர்களுக்கு ஒன்றாக மூன்று குழந்தைகள் உள்ளனர்.

## கனடாவில் வீடுடைப்பு கொள்ளைச் சம்பவங்கள் வெகுவாக உயர்வு!

மார்ச் 20, 2024

கனடாவின் வீடுடைப்பு கொள்ளைச் சம்பவங்களின் எண்ணிக்கை வெகுவாக உயர்வடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.




வீடுகள், கட்டிடங்கள் உடைக்கப்பட்டு திருடப்படுவதாகவும் வாகனங்கள் அதிக எண்ணிக்கையில் கொள்ளையிடப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



இந்த ஆண்டு இதுவரை காலமும் 1721 திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் ரொரான்ரோ பொலிசாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்களுடன் ஒப்பீடு செய்யும் போது இந்த ஆண்டில் கொள்ளைச் சம்பவங்களின் எண்ணிக்கை 31.5 வீதத்தினால் உயர்வடைந்துள்ளது.

கடந்த 2023ம் ஆண்டில் வீடுடைப்பு கொள்ளைச் சம்பவங்களின் எண்ணிக்கை 400 வீதத்தினால் அதிகரித்துள்ளது.

ஆயுத முனையில் வாகனக் கொள்ளைச் சம்பவங்கள் அதிகளவில் இடம்பெற்று வருவதாக பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.



ரொரான்ரோவில் மட்டுமன்றி நோவா ஸ்கோஷியா, வான்கூவார் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இவ்வாறு கொள்ளைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

## தற்காலிக குடியிருப்பு அனுமதி எண்ணிக்கையைக் குறைக்க கனடா திட்டம்!

### கனடாவின் புலம்பெயர்தல் அமைச்சர் மார்க் மில்லர்

மார்ச் 22, 2024

புலம்பெயர்தலைக் கட்டுப்படுத்த தொடர்ந்து கடுமையான நடவடிக்கைகள் எடுத்துவரும் கனடா அரசு, அதிரடியாக அடுத்த நடவடிக்கையைத் துவங்கியுள்ளது.

கனடாவுக்குக் கல்வி கற்க வரும் சர்வதேச மாணவர்களின் எண்ணிக்கைக்குக் கட்டுப்பாடு, அவர்கள் எவ்வளவு நேரம் வேலை செய்யலாம் என்பதற்குக் கட்டுப்பாடு என தொடர்ந்து புலம்பெயர்தல் தொடர்பில் கட்டுப்பாடுகள் விதித்துவரும் கனடா அரசு, அடுத்த கட்டமாக ஒரு அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

கனடா வரலாற்றிலேயே முதல் முறையாக, கனடாவில் தற்காலிகக் குடியிருப்பு அனுமதிக்கும் கட்டுப்பாடு விதிக்க திட்டமிட்டுவருகிறது அந்நாட்டு அரசு.

நேற்று, கனடாவின் புலம்பெயர்தல் அமைச்சரான மார்க் மில்லர் இது குறித்துக் கூறும்போது, அடுத்த மூன்று ஆண்டுகளில், கனடாவில் தற்காலிக குடியிருப்பு அனுமதி வழங்கப்படுவோரின் எண்ணிக்கை குறைக்கப்பட உள்ளதாக தெரிவித்தார். முதல் கட்டமாக, செப்டம்பரில் முதல் கட்டுப்பாடு விதிக்கப்பட இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த கட்டுப்பாடு சர்வதேச மாணவர்களுக்கும், வெளிநாட்டுப் பணியாளர்களுக்கும், புகலிடக்கோரிக்கையாளர்களுக்கும் பொருந்தும் என்றும் கூறியுள்ளார் மில்லர்.

தற்காலிக குடியிருப்பு அனுமதி வழங்கப்படுவோரின் எண்ணிக்கையை, தற்போதிருக்கும் 6.2 சதவிகிதத்திலிருந்து, கனடாவின் மக்கள்தொகையில் 5 சதவிகிதமாக குறைக்க கனடா திட்டமிட்டுவருவதாக மில்லர் தெரிவித்துள்ளார்.

மேலும், சில கனேடிய நிறுவனங்கள், பணிக்கு எடுக்கும் தற்காலிக வெளிநாட்டுப் பணியாளர்களின் எண்ணிக்கையை குறைக்கவேண்டியிருக்கும் என்று கூறியுள்ள அதிகாரிகள், இந்த கட்டுப்பாடு, மே மாதம் 1ஆம் திகதி முதல் அமுலுக்கு வருவதாக தெரிவித்துள்ளார்கள்.

அத்துடன், அந்த குறிப்பிட்ட காலியிடத்துக்கு கனேடியப் பணியாளர்கள் கிடைக்கவில்லை என்பதை நிரூபிப்பதற்கான கால கட்டத்தையும் குறைக்க இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இந்த விதியிலிருந்து மருத்துவப் பணியாளர்கள் மற்றும் கட்டுமானப்பணியாளர்களுக்கு மட்டும் விதிவிலக்கு அளிக்கப்படுகிறது. (காரணம், கனடாவில் இந்த இரண்டு துறைகளிலும் கடும் பணியாளர் பற்றாக்குறை நிலவிவருகிறது). இந்தப் பணியாளர்கள் மட்டும் இப்போது கனடாவுக்குள் அனுமதிக்கப்படும் அதே எண்ணிக்கையில், ஆகத்து மாதம் 31ஆம் திகதி வரை அனுமதிக்கப்படுவார்கள் என தற்போதைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.



# கனடாவில் குடியேறும் குறிப்பிடத்தக்க மக்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்றார்கள்!

## கனடிய அட்லாண்டிக் பொருளாதாரப் பேரவை

மார்ச் 22 2024

கனடாவில் குடியேறும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலானவர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



கனடிய அட்லாண்டிக் பொருளாதாரப் பேரவை குடியேறிகள் தொடர்பில் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

கனடாவிற்குள் குடியேறும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான வெளிநாட்டுப் பிரஜைகளினால் வாழ்க்கைச் செலவு பிரச்சினைக்கு ஈடுகொடுக்க முடியவில்லை என அந்தப் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

இதனால் குடியேறும் சில ஆண்டுகளில் அவர்கள் வேறும் நாடுகளுக்கு புலம்பெயரத் தொடங்கி விடுகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2013ம் அண்டில் குடியேறிகளின் எண்ணிக்கை 6000 மாக காணப்பட்டதாகவும், 2023ம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 32000 மாக உயர்வடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், இவ்வாறு நாட்டுக்குள் பிரவேசிக்கும் குடியேறிகளில் 50 வீதமானவர்கள் மட்டுமே ஐந்து ஆண்டுகளுக்கு மேல் கனடாவில் தாக்குப் பிடிக்கின்றனர் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வீடமைப்பு, மருத்துவ சேவை, கல்வி வசதி, பாடசாலை வசதி போன்ற சில காரணிகளினால் குடியேறிகள் தொடர்ச்சியாக கனடாவில் வாழ்வதற்கு விரும்புவதில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் போர் காரணமாக உக்ரைனிலிருந்து கனடாவின் நோவா ஸ்கோடியாவில் குடியேறிய பெண் ஒருவர் வாழ்க்கைச் செலவு பிரச்சினை காரணமாக கனடாவை விட்டு



வெளியேறி, ஜோர்ஜியாவில் குடியேறியுள்ளார்.

கடந்த 2023ம் ஆண்டில் கனடாவில் குடியேறிய டிடென்யா மெலினெக் என்ற பெண்ணே இவ்வாறு கனடாவை விட்டு வெளியேறியுள்ளார்.

வாழ்க்கைச் செலவு பிரச்சினை காரணமாக இவ்வாறு கனடாவை விட்டு வெளியேறியதாகத் தெரிவித்துள்ளார்.

எனவே கனடாவிற்குள் குடியேறுவோர் இந்தக் காரணிகள் தொடர்பிலும் கவனம் செலுத்தி சரியான திட்டமிடலுடன் குடியேறுவது பொருத்தமானது என தெரிவிக்கப்படுகின்றது.

# பிரதமர் ஐஸ்ரின் ட்ரூடோ அரசாங்கத்திற்கு எதிரான கார்பன் வரி தீர்மானம் தோல்வி!

மார்ச் 21, 2024

பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தலைமையிலான கனடிய அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மான யோசனை தோற்கடிக்கப்பட்டுள்ளது.

கொன்சவடிவ் கட்சியின் தலைவர் பியே பொலியேவ் இந்த யோசனையை நாடாளுமன்றில் சமர்ப்பித்திருந்தார்.

கார்பன் வரி அறவீடு செய்யும் திட்டத்திற்கு எதிர்ப்பை வெளியிடும் நோக்கில் நம்பிக்கையில்லா தீர்மான யோசனை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

அரசாங்கத்தை கவிழ்க்கும் நோக்கில் இந்த நம்பிக்கையில்லா தீர்மான யோசனை சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் அதற்கு போதியளவு ஆதரவு கிடைக்கவில்லை.

யோசனைக்கு ஆதரவாக கொன்சவடிவ் கட்சியினர் வாக்களித்த போதிலும், லிபரல், என்.டி.பி மற்றும் குபெக்கோ போன்ற கட்சிகள் எதிராக வாக்களித்திருந்தன.

இந்த யோசனைக்கு ஆதரவாக கூடுதல் வாக்குகள் அளிக்கப்பட்டிருந்தால் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்பட்டிருக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

கொன்சவடிவ் கட்சிக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பில் எவ்வித திட்டங்களும் கிடையாது என ஆளும் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

இதேவேளை, கார்பன் வரி அதிகரிப்பு மக்களை மேலும்




சுமையில் ஆழ்த்தும் என கொன்சவடிவ் கட்சி தெரிவித்துள்ளது.

# கனடாவில் வாகனக் கொள்ளையில் ஈடுபட்ட 31 பேர் கைது!

மார்ச் 23, 2024

கனடாவின் ரொரான்ரோவில் வாகனக் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய 31 பேரை பொலிசார் கைது செய்துள்ளனர்.



ஒன்ராரியோ மற்றும் மொன்றியாலில் பொலிசார் இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

அண்மைய நாட்களில் வாகனத் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

வாகனக் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய 31 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஒன்ராரியோ மற்றும் மொன்றியல் காவற்துறையினர் கூட்டாக அறிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கூட்டு ஊடக சந்திப்பு ஒன்றும் நடத்தப்பட்டது. நாட்டின் பல பகுதிகளில் குறித்த கும்பல் வாகனக் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஒன்ராரியோவில் கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட வாகனங்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.




அண்மைக் காலமாக ஆயுத முனையில் வாகனக் கொள்ளைச் சம்பவங்கள் கூடுதலாக பதிவாகி வருவதகாத் தெரிவிக்கப்படுகின்றது.

# ஒன்ராரியோ மாகாணத்தில் எரிபொருளுக்கான வரிச் சலுகை நீடிப்பு!

மார்ச் 25 2024

கனடாவின் ஒன்ராரியோ மாகாணம் எரிபொருளுக்கான வரிச் சலுகையை நீடித்துள்ளது.

பெற்றோல் மற்றும் எரிபொருட்களுக்கான வரிச் சலுகை இந்த ஆண்டு இறுதி வரையில் நீடிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு லீற்றர் பெற்றோலுக்கான வரி 5.7 சதத்தினாலும், ஏனைய எரிபொருட்களுக்கான வரியும் ஒரு லீற்றருக்கு 5.3 சதத்தினாலும் குறைக்கப்பட்டிருந்தது.

இந்த வரிக்குறைப்பு நடைமுறை எதிர்வரும் ஜூன் மாதம் 30ம் திகதியுடன் காலாவதியாவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வரிச் சலுகை இந்த ஆண்டு டிசம்பர் மாதம் 31ம் திகதி வரையில் நீடிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.





"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள்
நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவ்களே,
எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரிது."

*தமிழீழ தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள்*

# கனடாவில் தட்டம்மை நோய்த் தொற்று தொடர்பாக எச்சரிக்கை!

மார்ச் 28 2024

கனடாவில் தட்டம்மை நோய்த் தொற்று பரவுகை குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நாட்டில் நோயாளர் எண்ணிக்கை அதிகரித்து செல்வதாக குறிப்பிடப்படுகின்றது.

கனடாவின் பிரதம பொதுச் சுகாதார அதிகாரி டொக்டர் திரேசா டேம் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இந்த வருடம், நாடு முழுவதிலும் தட்டம்மை நோயாளர் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லும் போக்கு பதிவாகியுள்ளது.

இதுவரையில் இந்த ஆண்டில் நாடு முழுவதிலும் 40 தட்டம்மை நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

தங்களது பிள்ளைகளுக்கு தடுப்பூசி உரிய நேரத்தில் ஏற்றப்படுவதற்கான நடவடிக்கைகளை பெற்றோர் மேற்கொள்ள வேண்டுமென அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

நாட்டில் பரவி வரும் தட்டம்மை நோய் அதிக வேகமாக பரக்கூடிய தன்மையுடையது என டொக்டர் திரேசா டேம் தெரிவித்துள்ளார்.



# கனடிய அரச நிறுவனத்தில் மோசடியில் ஈடுபட்ட பணியாளர்கள் 237 பேர் நீக்கம்!

மார்ச் 28, 2024

கனடாவின் வருமான முகவர் நிறுவனத்தில் மோசடியில் ஈடுபட்ட பணியாளர்கள் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளனர்.

கோவிட் பெருந்தொற்று காலப் பகுதியில் மோசடியான முறையில் நலன்புரிக் கொடுப்பனவு பெற்றுக் கொண்டவர்களே இவ்வாறு பணி நீக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 15ம் திகதி வரையிலான காலப் பகுதியில் கனடிய வருமான முகவர் நிறுவனத்தைச் சேர்ந்த 237 பேர் பணி நீக்கப்பட்டுள்ளனர்.

கனடிய அவசர நிவாரணத் திட்டத்தின் கீழ் கொடுப்பனவு பெற்றுக்கொண்டவர்களே பணி நீக்கப்பட்டுள்ளனர்.

பெருந்தொற்று காரணமாக சுகாதார கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட நிலையில் தொழில்களை இழந்தவர்களுக்கு அரசாங்கம் மாதாந்தம் 2000 டொலர் நலன்புரிக் கொடுப்பனவு வழங்கியிருந்தது.

வருமான முகவர் நிறுவனத்தில் பணியாற்றிய 237 பேர் இந்த கொடுப்பனவு தொகையை மோசடியாக பெற்றுக்கொண்டுள்ளனர்.

மேலும் 600 பேர் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.




# கனடாவில் வசிக்கும் வாடகைக் குடியிருப்பாளர்களின் நலனை மேம்படுத்த திட்டமிடும் கனடா அரசாங்கம்!

மார்ச் 28, 2024

வாடகைக்கு குடியிருப்பவர்களின் நலனை மேம்படுத்த திட்டமிடும் கனடா அரசாங்கம், வெளிநாட்டிலிருந்து வந்து கனடாவில் வசிப்பவர்கள் சந்திக்கும் மிகப் பெரிய பிரச்சனைக்கு தீர்வு காணவிருப்பதாக அறிவிப்பு வெளியாகியுள்ளது.

வாடகைக்கு குடியிருப்பவர்களுக்கு பிரத்யேக சட்டம் ஒன்று அறிமுகம் செய்யப்பட உள்ளது.

இது, வாடகைக்கு குடியிருப்பவர்களை பாதுகாக்க கூடிய நடவடிக்கை என கனடா கூறுகிறது. கடந்த சில ஆண்டுகளாக, அதிகரித்து வந்த வீட்டு வாடகைகள், 2023 ஆம் ஆண்டில் உச்சத்தை எட்டியது.

மலிவு விலையில் வீட்டுவசதி என்ற பேச்சுக்கே இடமில்லாமல் போன நிலையில், அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான வாடகை எப்போதும் இல்லாத அளவிற்குக் அதிகரித்த நிலையில், காலியான வீடுகளின் எண்ணிக்கை இல்லை என்ற அளவில் குறைந்துபோனது.

இதனால், கனடாவில் வீட்டு வாடகை உச்சத்தை எட்டியதால், வெளிநாட்டில் இருந்து வந்து வேலைபார்ப்பவர்கள் மற்றும் மாணவர்களுக்கான செலவும் கணிசமாக அதிகரித்துவிட்டது.

கனடாவில் வீடு வாடகை என்பது வாழ்க்கைச் செலவுகளை வெகுவாக பாதித்துள்ளதற்கும் வெளிநாட்டினரின் குடியேற்றத்துக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது.

கனாடாவிற்கு மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் படிக்க வருவதால் தான் வீட்டு வாடகைகள் அதிகமாக இருப்பதாகவும் எனவே, மாணவர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற உள்ளூர் மக்களின் குரல்களும் உயரத் தொடங்கிவிட்டன.

வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதன் மூலமும், புதிதாக வாடகைகளுக்காக வீடு மற்றும் கட்டுமானங்கள் கட்டுவதற்கு அரசு விதிக்கும் வரிகளைக் குறைப்பதன் அவசியமும் அதிக அளவில் பேசப்படுகிறது.

2023 ஆம் ஆண்டில் கனடாவில் வாடகை 1.7% அதிகரித்துள்ளதாக சில அறிக்கைகள் கூறின. கடந்த ஆண்டு மட்டும், கனடாவிற்கு 1.2 மில்லியன் பேர் புதிதாக வந்தனர்.

வெளிநாட்டவர் அதிக அளவில் வந்து குவிந்துக் கொண்டே இருப்பதால், அங்கு பணியாளர்களுக்கான ஊதியம் உயர்வதில்லை, ஆனால் வாடகை அதிகரித்து வருவது மக்களின் நிதிச்சுமையை அதிகரித்து வந்தது.

இந்த நிலையில், நேர்மையாக வாடகை செலுத்துபவர்களுக்கு நலன்களை வழங்கும் சட்டம் ஒன்றை விரைவில் அறிமுகம் செய்ய உள்ளதாக கனடா நாட்டின் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

இந்த புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டால், கடன் தவணை செலுத்துவோருக்கு கிடைக்கும் சலுகைகளைப் போல, 2000 டாலர் அல்லது அதற்கு அதிகமாக வாடகை செலுத்துபவர்களுக்கும் சலுகைகள் கிடைக்கலாம் என்று கூறப்படுகிறது.




“வாடகைக்கு குடியிருப்பவர்கள் மற்றும் கனடா இளைஞர்களின் சம்பாத்தியத்தில் பெரும் பகுதி வாடகைக்கு செல்வாகி விடுகிறது.

எனவே இந்த விஷயத்தில் முக்கியமான சட்டம் ஒன்றை கொண்டு வரவிருக்கிறோம்” என்று பிரதமர் ட்ரூடோ வான் கூவரில் செய்தியாளர் கூட்டத்தில் பேசும்போது கூறினார்.

அடுத்த மாதம் ஏப்ரல் 16ம் தேதியன்று பிரதமர் ட்ரூடோ அரசு தாக்கல் செய்யவிருக்கும் பட்ஜெட்டில் நியாயமற்ற முறையில் அதிகரித்து வரும் வாடகை மற்றும் மோசமான வீட்டு உரிமையாளர்களுக்கு எதிராக வாடகைதாரர்களை பாதுகாக்க

# ஒன்ராரியோ மாகாணத்தில் சம்பள உயர்வு ஒக்டோபர் 1ம் திகதியில் இருந்து நடைமுறைக்கு!

மார்ச் 30, 2024

கனடாவின் ஒன்ராரியோ மாகாணத்தில் சம்பளங்கள் அதிகரிக்கப்பட உள்ளது.

மாகாணத்தின் குறைந்தபட்ச மணித்தியால சம்பளம் 65 சதங்களினால் அதிகரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 1ம் திகதி முதல் இந்த சம்பள அதிகரிப்பு நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

இதன்படி தற்பொழுது மணித்தியாலம் ஒன்றுக்கு வழங்கப்படும் 16.55 டொலர் சம்பளம் 17.20 டொலர்களாக அதிகரிக்கப்பட உள்ளது.

நாட்டின் நுகர்வோர் விலைச் சுட்டியின் அடிப்படையில் 3.9 வீதமாக சம்பளங்கள் உயர்த்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஒன்ராரியோ மாகாண தொழில், குடிவரவு, பயிற்சி அமைச்சர் டேவிட் பிக்கினி இந்த தகவல்களை வெளியிட்டுள்ளார்.

வாரமொன்றுக்கு 40 மணித்தியாலங்கள் வேலை செய்யும் பணியாளர் ஒருவர் 1355 டொலர்கள் வரையில் சம்பளம் பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்படுகின்றது.



## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.
sangathamilcanada@gmail.com

# தமிழக செய்திகள்



## செம்மொழி மாநாட்டுக்கு முன் கல்வி, வணிகம், நீதிமன்றங்களில் தமிழ் அரியணை ஏறுமா?

பாமக நிறுவனர் இராமதாஸ்

மார்ச் 16, 2024

செம்மொழி மாநாட்டுக்கு முன்பாக கல்வி, வணிகம், நீதிமன்றங்களில் அன்னைத் தமிழ் அரியணை ஏறுமா? என பாமக நிறுவனர் இராமதாஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "தமிழக அரசின் சார்பில் இரண்டாவது உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு அடுத்த ஆண்டு ஜுன் மாதத்தில் சென்னையில் நடத்தப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருக்கிறார். நல்லது.

அதற்குள்ளாக தமிழ்க் கட்டாயப் பாடம், தமிழ் பயிற்றுமொழி, சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழ் அலுவல் மொழி, கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் தமிழ்ப் பெயர்ப் பலகைகள் ஆகியவற்றை சாத்தியமாக்கி அன்னைத் தமிழை அரியணையில் ஏற்றுமா தமிழக அரசு?" என கேள்வி எழுப்பியுள்ளார்.

முன்னதாக இரண்டாம் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு 2025 ஜுன் மாதம் சென்னையில் சிறப்பான முறையில் நடத்தப்படும் என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்திருந்தது குறிப்



பிடத்தக்கது.

## 2025 யூனில் இரண்டாவது செம்மொழி மாநாடு!

மார்ச் 16, 2024

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில், இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்ற முத்தமிழுடன் இன்று கணித் தமிழும் இணைந்து நற்றமிழாக நானிலமெங்கும் சிறப்புடன் திகழ்கின்றது.

தமிழ் மொழி தொன்மை - தனித்தன்மை- பொதுமைப் பண்பு- பண்பாடு - உயர்ந்த சிந்தனை - இலக்கியத் தனித்தன்மை பங்களிப்பு ஆகிய உயர்ந்த கோட்பாடுகள் அனைத்தையும் ஒருங்கே பெற்றதுடன், செம்மொழி என்ற தனித்தகுதியை பெற்றுள்ள அரும்பெரும் மொழியாகும்.

தமிழை, உயர்தனிச் செம்மொழி என்று முதன்முதலில் முன்மொழிந்தவர் தமிழறிஞர் பரிதிமாற்கலைஞர் ஆவார். வளம் பெற்ற நம் மொழிக்குச் செம்மொழித் தகுதியைப் பெற்றுத்தந்து தமிழர்களின் நூற்றாண்டுக் கனவை நனவாக்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். கழக அரசு பொறுப்பேற்ற கடந்த மூன்றாண்டுகளாக தமிழ்நாடு அரசு தனிப்பெரும் நிலையில் தகுதிவாய்ந்த தமிழறிஞர்களுக்குப் பல்வேறு விருதுகளை வழங்குவதோடு, நாடறிந்த தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்குவதும், பண்டையத் தமிழர் பண்பாட்டையும், பழங்காலத் தமிழர்களின் எழுத்தறிவு, நாகரிக வாழ்வு முறைமைகளை நுண்மையோடு பறைசாற்றும் வகையில் கீழடி அருங்காட்சியகத்தை அமைத்து, அதன் தொடர்ச்சியாக பொருளை அருங்காட்சியகத்தையும் அமைத்து வருவது தமிழ்ப் பண்பாட்டின் மணிமகுடங்களாகும்.

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் அனைத்தும் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்ஷ" என்ற மகாகவி பாரதியின் கனவை நனவாக்கும் வகையில் அறிவியல், பொறியியல், மருத்துவம், தொழில்நுட்பம், வேளாண்மை மற்றும் பல்வேறு துறை சார்ந்த பாடநூல்களை தமிழில் மொழிபெயர்க்கும் பெரும் பணியினைச் செய்து வருவதும், செயற்கை நுண்ணறிவைப் போற்றும் வகையில் கணித் தமிழ் மாநாடு 24 நடத்தியதும், தாய்த்தமிழை உயிர்ப்போடும் வனப்போடும் வளர்த்தெடுக்கும் கழக அரசின் முயற்சிகளாகும்.மேலும் உலகெங்கிலும் வாழும் தமிழர்களை ஒருங்கிணைக்கும் விதமாகவும், அவர்களின் பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாகவும் அயலகத் தமிழர் தினமாக ஜனவரி-12-ஆம் நாளினை தமிழ் வெல்லும் என்னும் கருப்பொருளை மையமாக 2024-ஆம் ஆண்டு அயலகத் தமிழர் மாநாட்டினை வெற்றியோடு நடத்தியதும், பார்போற்றும் வகையில் பன்னாட்டு புத்தகக் கண்காட்சி நடத்தியதும் தமிழ் வழியில் படித்த மாணவர்களுக்கு அரசுப் பணியில் முன்னுரிமை வழங்குவதும், திருக்கோவில்களில் தமிழ் வழிபாட்



டினை முன்னிறுத்துவதுமான ஆகச்சிறந்த பல்வேறு தமிழ்ப் பணிகளை ஆற்றி வருகிறோம்.

"இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்பார் பாவேந்தர். நம் உயிருக்கு இணையான தமிழுக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில் இரண்டாம் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு, சென்னையில் வரும் 2025-ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் ஐந்து நாட்கள் சீரோடும் சிறப்போடும் சிந்தனைச் செயல்திறத்தோடும் மாபெரும் அளவில் நடத்தப்படும்.இவ்வாறு அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

## மீனவர் சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வு காண மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்!

பாமக தலைவர் அன்புமணி இராமதாஸ்

மார்ச் 15, 2024

நாகை மாவட்டத்தைச் சேர்ந்த 15 மீனவர்கள் வங்கக்கடலில் மீன் பிடிக்கச் சென்ற போது இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்நிலையில், மீனவர் சிக்கலுக்கு உடனடியாக நிரந்தரத் தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி இராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "நாகை மாவட்டத்தைச் சேர்ந்த 15 மீனவர்கள் வங்கக்கடலில் மீன் பிடிக்கச் சென்ற போது இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு காங்கேசன் துறை சிறையில் அடைக்கப்பட்டிருக்கின்றனர். அவர்களின் படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. பாரம்பரியமாக மீன் பிடிக்க உரிமையுள்ள இடங்களில் மீன் பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்களை சிறீலங்கா கடற்படையினர் அத்துமீறி கைது செய்திருப்பது கண்டிக்கத்தக்கது.

சிறீலங்கா கடற்படையினரின் அத்துமீறல் முடிவே இல்லாமல் தொடர்ந்து வருகிறது. கடந்த 10-ஆம் தேதி தான் வங்கக் கடலின் இரு பகுதிகளில் 22 தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்தனர். அதனால், அந்தப் பகுதிகளில் ஏற்பட்ட பதட்டமும், கவலையும் விலகுவதற்கு முன்வாகவே மேலும் 15 மீனவர்களை இலங்கைக் கடற்படை கைது செய்திருப்பதை சகித்துக் கொள்ள முடியாது.

தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்வது கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து வருகிறது. தமிழக மீனவர்களை கைது செய்து சிறையில் அடைப்பது, அவர்களின் படகுகளை பறிமுதல் செய்து ஏலத்தில் விடுவது உள்ளிட்ட நடவடிக்கைகளின் மூலம் தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தை பறிப்பது தான் இலங்கை அரசின் நோக்கமாக உள்ளது. இந்த உண்மையை தெரிந்திருந்தும் அதைத் தடுக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்காமல் இருப்பது நியாயமல்ல.

இந்தியா - சிறீலங்கா அரசுகள் இணைந்து அமைத்துள்ள கூட்டுப் பணிக்குழுவின் கூட்டத்தைக் கூட்டி மீனவர் சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி



தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. மீனவர்கள் கைது தொடர்பான வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றமும் அதையே அறிவுரையாக வழங்கியிருக்கிறது. எனவே, இனியும் தாமதிக்காமல் கூட்டுப் பணிக்குழுவின் கூட்டத்தைக் கூட்டி மீனவர் சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வு காண மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

## அகதிகள் முகாமில் பிறந்தோருக்கு குடியுரிமை; மத்திய அரசு பரிசீலிக்க உயர் நீதிமன்றம் உத்தரவு!

மார்ச் 15, 2024

அகதிகள் முகாமில் பிறந்தவர்களுக்கு குடியுரிமை கோரி விண்ணப்பித்தால், குடியுரிமை சட்டத்துக்கு உட்பட்டு, பரிசீலித்து முடிவெடுக்க வேண்டும் என மத்திய அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில், சென்னையைச் சேர்ந்த வழக்கறிஞர் ரவிகுமார் தாக்கல் செய்த மனுவில், 'தமிழகத்தில் உள்ள இலங்கை தமிழர்கள் அகதிகள் முகாமில் பிறந்த குழந்தைகளுக்கு இந்திய குடியுரிமை வழங்க உத்தரவிட வேண்டும். இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு அகதிகளாக வந்த 94 ஆயிரம் பேரில் 59,500 பேர் முகாம்களில் உள்ளனர்.

இந்த முகாம்களில் வளரும் குழந்தைகள் கல்வி, வேலை வாய்ப்பு உரிமைகளை பெற இயலாததால், அகதிகள் முகாமில் பிறந்த குழந்தைகளுக்கு இந்திய குடியுரிமை வழங்கக் கோரி அளித்த மனு மீது இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்நிலையில், 2022-ம் ஆண்டு டிசம்பர் 14-ம் தேதி மத்திய உள்துறை அமைச்சகம், முறையான பயண ஆவணங்கள் இல்லாமல் சட்டவிரோதமாக குடியேறியவர்கள் குடியுரிமை பெற உரிமையில்லை என உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்த உத்தரவை ரத்து செய்து, தமிழகத்தில் உள்ள அகதிகள் முகாமில் பிறந்த குழந்தைகளுக்கு குடியுரிமை வழங்க மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும்' என மனுவில் கோரியிருந்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி கங்கபுர்வாலா, நீதிபதி பரத சக்ரவர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வில் வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள், 'இந்த



மனு பொதுப்படையாக உள்ளது. முகாமில் இருப்பவர்கள் குறித்த விவரங்கள் இல்லாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. முகாம்களில் பிறந்தவர்கள் குடியுரிமை கோரி விண்ணபபித்தால், அதை குடியுரிமை சட்டத்துக்கு உட்பட்டு பரிசீலித்து முடிவெடுக்க வேண்டும்' என உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்தனர்.

# தமிழக மீனவர்கள் மேலும் 21 பேர் கைது; நிரந்தர தீர்வு காண அன்புமணி வலியுறுத்தல்!

மார்ச்17, 2024

தமிழக மீனவர்கள் மேலும் 21 பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் இனியும் தாமதிக்காமல் மீனவர் சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வு காண நடவடிக்கை வேண்டும் என்று பாமக தலைவர் அன்புமணி இராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அன்புமணி இன்று (ஞாயிற்றுக்கிழமை) வெளியிட்டுள்ள அறிக்கையில், "வங்கக்கடலில் கச்சத்தீவுக்கு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த இராமேசுவரம் மீனவர்கள் 21 பேரை இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர். அவர்கள் மீன் பிடிக்கச் சென்ற 2 விசைப்படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. பாரம்பரியமாக மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டப் பகுதிகளில் தமிழக மீனவர்கள் மீன் பிடிப்பதை பன்னாட்டு விதிகள் அனுமதிக்கும் போதிலும், அந்த விதிகளை மீறி தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்திருப்பது கண்டிக்கத்தக்கது ஆகும்.

தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்யும் நிகழ்வுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. கடந்த 10ம் தேதி தான் வங்கக்கடலின் இரு பகுதிகளில் 22 தமிழக மீனவர்களும், 15ம் தேதி 15 தமிழக மீனவர்களும் கைது செய்யப்பட்டனர். அதனால், அந்தப் பகுதிகளில் ஏற்பட்ட பதட்டமும், கவலையும் விலகுவதற்கு முன்பே மேலும் 21 மீனவர்களை இலங்கைக் கடற்படை கைது செய்திருப்பது இந்தியாவின் இறையாண்மைக்கு விடப்பட்ட சவால் ஆகும்.

கடந்த ஒரு வாரத்தில் மட்டும் தமிழ்நாடு மற்றும் காரைக்காலைச் சேர்ந்த 58 மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்திருக்கின்றனர். கடந்த இரு மாதங்களில் 80-க்கும் கூடுதலான மீனவர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல்களும், கைது நடவடிக்கைகளும் முடிவில்லாமல் தொடர்வதை மத்திய அரசு அனுமதிக்கக் கூடாது. தமிழக மீனவர்களை கைது செய்யக்கூடாது என்று இலங்கை அரசை மத்திய அரசு எச்சரிக்க வேண்டும். அதையும் மீறி இலங்கைக் கடற்படையினரின் அத்துமீறல்கள் தொடர்ந்தால் அவர்கள் மீது தூதரக அடிப்படையிலான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.



மற்றொருபுறம் தமிழக மீனவர் சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில் இந்தியா - இலங்கை அரசுகள் இணைந்து அமைத்துள்ள கூட்டுப் பணிக்குழுவின் கூட்டத்தைக் கூட்ட மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கைப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ள 58 மீனவர்களை விடுதலை செய்யவும், தமிழக மீனவர்களின் அனைத்துப் படகுகளையும் மீட்கவும் மத்திய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்." என்று வலியுறுத்தியுள்ளார்.

# ஆதித்தமிழக்குடிகளுக்குச் சொந்தமான பஞ்சமி நிலங்களை மீட்டுத்தர தமிழ்நாடு அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்!

### நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமான்

மார்ச் 17, 2024

தமிழ்நாட்டிலுள்ள பஞ்சமி நிலங்கள் குறித்த ஆய்வு அறிக்கையை 15 நாட்களில் வெளியிட தேசிய பட்டியலினத்தோர் ஆணையம் தமிழ்நாடு அரசுக்கு உத்தரவிட்டுள்ளது வரவேற்கத்தக்கது. இதற்கு மேலும், காலம் தாழ்த்தாமல் பஞ்சமி நிலங்களின் நிலை என்ன? அவை இப்போது எங்கே யாரிடம் உள்ளது? அவற்றை மீட்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? என்பது குறித்த தெளிவான ஆய்வு அறிக்கையை உடனடியாக வெளியிட வேண்டுமென திமுக அரசினைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில், அன்றைய சென்னை மாகாணத்தில் சமூக அடுக்கில் மிகவும் பின்தங்கிய நிலையில் வாழ்ந்த ஆதித்தமிழ்க்குடி மக்களின் முன்னேற்றத்திற்காக 12 இலட்சம் ஏக்கர் நிலங்கள் வழங்கப்பட்டது. ஆனால், சமத்துவம், சாதி ஒழிப்பு, சமூகநீதி எனப் பேசி ஆட்சி அதிகாரத்தை அடைந்த, 56 ஆண்டுக்கால திராவிடக் கட்சிகளின் ஆட்சிக் காலத்தில் ஆதித்தமிழ்க்குடி மக்களை ஏமாற்றி, பெருமளவு பஞ்சமி நிலங்கள் முறைகேடாக அபகரிக்கப்பட்டது.

அவற்றை மீட்டுத்தரக்கோரிப் பல ஆண்டுகளாக ஆதித்தமிழ்க்குடி மக்கள் போராடி வரும் நிலையில், இன்று வரையில் அதற்கான எவ்வித ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளையும் அரசு எடுக்கவில்லை என்பது மிகுந்த வேதனைக்குரியது. ஆட்சியாளர்களே பஞ்சமி நிலத்தை அபகரித்து உள்ளதால் அதனை மீட்டுத்தர திமுக அரசு மறுக்கிறதா? என்ற கேள்வியும் எழுகிறது.

ஆகவே, பஞ்சமி நிலங்களை விரைந்து மீட்டு ஆதித்தமிழ்க்குடி மக்களிடம் ஒப்படைக்க உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென தமிழ்நாடு அரசினை நாம் தமிழர் கட்சி சார்பாக



வலியுறுத்துகிறேன்.

# தமிழ் நாட்டில் பயிலும் அனைத்து மாணவர்களும் பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வில் தமிழ்மொழித் தேர்வெழுதுவதைக் கட்டாயமாக்க வேண்டும்!

### நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமான்

மார்ச் 14, 2024

தமிழ்நாட்டில் பிறமொழியில் பயிலும் மாணவர்களுக்கு 10ஆம் வகுப்புத் தேர்வில் கட்டாயத்தமிழ் பாடம் தேர்வெழுதுவதிலிருந்து நடப்பாண்டு திமுக அரசு விலக்கு அளித்துள்ளது வன்மையான கண்டனத்துக்குரியது. 10ஆம் வகுப்புப் பொதுத்தேர்வில் தமிழ்மொழித் தேர்வெழுதுவதைக் கட்டாயமாக்கி அரசாணை வெளியிட்டு 8 ஆண்டுகளாகியும் இன்றுவரை அதனை நடைமுறைப்படுத்த முடியாதது மிகுந்த ஏமாற்றமளிக்கிறது.

தமிழ் கற்றல் சட்டம் 2006 - பிரிவு '3' இன்படி, தமிழ்நாட்டில் 2006-07 ஆம் கல்வி ஆண்டிலிருந்து அனைத்துப் பள்ளிகளிலும் படிப்படியாக ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை தமிழ் கற்பிக்கப்படுவது கட்டாயமாக்கப்பட்டது. அதன்படி, பத்தாண்டுகளுக்குப் பிறகு 2016-ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வெழுதும் மாணவர்கள் பகுதி 1-இல் தமிழ் மொழிப்பாடத் தேர்வெழுதுவதைக் கட்டாயமாக்கி அரசாணையும் தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்டது.

ஆனால் அவ்வரசாணையை எதிர்த்துத் தொடுக்கப்பட்ட வழக்கினை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம் முதலில் அரசின் முடிவுக்கு இடைக்காலத் தடையும், பின் 2023ஆம் ஆண்டு வரை அத்தடையை நீட்டித்தும் உத்தரவிட்டது. இத்தனை தடைகளையும் கடந்து, 'தமிழ் கற்றல் சட்டம்' நிறைவேற்றப்பட்டு 18 ஆண்டுகளுக்குப் பிறகு, நடப்புக் கல்வி ஆண்டு முதலாவது நடைமுறைக்கு வரும் என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட நிலையில், திமுக அரசு இந்த ஆண்டும் பிறமொழி பேரவையினரின் கோரிக்கையை ஏற்று 10ஆம் வகுப்புத் தேர்வில் கட்டாயத் தமிழ்ப் பாடம் தேர்வெழுதுவதிலிருந்து விலக்கு அளித்துள்ளது எவ்வகையிலும் ஏற்புடையதல்ல.

ஏற்கனவே தமிழ் கட்டாயப்பாடச் சட்டத்திற்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கில், 'குழந்தைகள் தாங்கள் வாழும் மாநிலத்தின் மொழியைக் கற்றுக்கொள்வது அவர்களின் நலனுக்கு மிகவும் நல்லது; மாறாக வாழும் மாநில மொழியைக் கற்றுக்கொள்ள மறுப்பது நாட்டின் ஒற்றுமைக்கு நல்லதல்ல" எனவும், இதனால் பிற மொழியினரின் எந்த உரிமையும் பறிபோய்விடாது எனவும் தீர்ப்பளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தனியார் ஆங்கில வழிப்பள்ளிகள் கடந்த 8 ஆண்டுகளாக வெவ்வேறு பொய்யான காரணங்களைக் காட்டி வேண்டுமென்றே தமிழ்ப்பாடத் தேர்வெழுதுவதிலிருந்து விலக்குப் பெற்று வருகிறது. இந்நிலையில், இந்த ஆண்டு விலக்கு அளிக்க எல்லைப்புற மாவட்டமான கிருஷ்ணகிரியில் தமிழ் மொழிப்பாட ஆசிரியர்கள் நிரப்பப்படாமல் உள்ளதை திமுக அரசே காரணம் காட்டுவது, அதன் நிர்வாகத் திறமையின்மையும், தமிழ் மொழி மீதான அக்கறை இன்மையையுமே காட்டுகிறது. தமிழ்நாட்டில், தமிழ்நாடு அரசின் அனைத்து உதவிகளையும், சலுகைகளையும் பெற்று இயங்கும் தனியார் ஆங்கில வழி மற்றும் பிறமொழிப் பள்ளிகள், தமிழைக் கற்பிக்க மறுப்பதும், அதற்கு திமுக அரசு துணைபோவதும் தமிழ் மொழிக்கும், மண்ணுக்கும் செய்கின்ற பச்சைத்துரோகமாகும். இதன் மூலம்



'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்!, 'வீழ்வது நாமாக இருப்பினும், வாழ்வது தமிழாக இருக்கட்டும்' என்ற வசனங்கள் எல்லாம் தமிழர்களின் வாக்குகளைப் பெறுவதற்காகச் சொல்லப்படும் திமுகவின் தேர்தல் கால வெற்று முழக்கங்கள் என்பது மீண்டுமொருமுறை நிறுவப்பட்டுள்ளது.

ஆகவே, 'தமிழ் வாழ்க' என்று அரசு கட்டிடங்களில் எழுதி வைத்தால் மட்டும் தமிழ்மொழி வாழாது, வளராது; அதற்கு அரசு சட்டங்களில் உள்ளதை முழுமையாக நடைமுறைப்படுத்தி, தமிழ்நாட்டில் வாழும் மக்களின் இதயச் சுவரில் எழுத வேண்டும் என்பதை திமுக அரசு இனியாவது உணர்ந்து, தமிழ்நாட்டில் பத்தாம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவர்களும் நடப்பு கல்வியாண்டு முதலே தமிழ்மொழித் தேர்வெழுதுவதைக் கட்டாயமாக்க வேண்டுமென நாம் தமிழர் கட்சி சார்பாக வலியுறுத்துகிறேன்.

# நாம் தமிழர்கட்சி சார்பாக போட்டியிட பொதுச்சின்னமாக தேர்தல் ஆணையம் வழங்கியுள்ள 'ஒலிவாங்கி'!

மார்ச் 27 2024

எதிர்வரும் ஏப்ரல் 19 அன்று, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் ஒரே கட்டமாக நடைபெறவிருக்கும் 40 நாடாளுமன்றத் தொகுதிகளுக்கான பொதுத்தேர்தலுக்கும், விளவங்கோடு சட்டமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தலுக்கும் நாம்தமிழர்கட்சி சார்பாக போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவருக்கும் பொதுச் சின்னமாக தேர்தல் ஆணையம் வழங்கியுள்ள ஒலிவாங்கி (Mike - மைக்) சின்னத்தையும், நாடாளுமன்றத் தேர்தல் வரைவையும் தலைமை ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமான் அவர்கள் இன்று (27.03.2024) சென்னை சேப்பாக்கத்தில் உள்ள சென்னை பத்திரிகையாளர் மன்றத்தில் ஊடகவியலாளர்கள் மற்றும் பொது மக்கள் முன்னிலையில் வெளியிட்டார்





# உலக செய்திகள்

## காசாவில் ஒரு இரவில் மட்டும் 61 பாலஸ்தீனியர்கள் பலி!

மார்ச் 17, 2024

காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் 92 பேர் உயிரிந்துள்ளனர் என்று காசாவில் இயங்கும் ஹமாசின் சுகாதார அமைச்சகம் கூறியுள்ளது.

அக்டோபர் 7 முதல் காஸாவில் இசுரவேலிய தாக்குதல்களால் குறைந்தது 31,645 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர் மற்றும் 73,676 பேர் காயமடைந்துள்ளனர் என்று பாலஸ்தீனிய சுகாதார அமைச்சகம் மேலும் தெரிவித்தது.

கத்தாரில் புதிய போர்நிறுத்த பேச்சுவார்த்தைக்கு பேச்சுவார்த்தை நடத்துபவர்களை அனுப்ப இசுரவேல் தயாராகி வரும் நிலையில், இன்று ஞாயிற்றுக்கிழமை காவின் டெய்ர் அல்-பாலாவில் இசுரவேல் நடத்திய குண்டுவீச்சில் குறைந்தது 61 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர். இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 12 பேர் கொல்லப்பட்டனர்.

இசுரவேலுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான போரில் போர் நிறுத்தத்தை உறுதிப்படுத்தும் நோக்கில் நிறுத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் ஞாயிற்றுக்கிழமை கத்தாரில் மீண்டும் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது எகிப்பதிய அதிகாரிகள் கூறினர்.



## ரஷ்ய அதிபர் தேர்தலில் வரலாறு காணாத வெற்றி; மீண்டும் அதிபரானார் விளாடிமிர் புட்டீன்!

மார்ச் 18, 2024

ரஷ்யாவில் நடைபெற்ற ரஷ்ய அதிபர் தேர்தலில் விளாடிமிர் புட்டீன் மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளார் என்பதை முடிவுகள் காட்டுகின்றன.

12 மணி நேர வேறுபாடுகளைக் கொண்ட ரஷ்ய நிலப்பரப்புக்குள் கடந்த மூன்று நாட்கள் தேர்தல் நடைபெற்றது.

புட்டீன் 87 சதவீத வாக்குகளைப் பெற்றதாக ஆரம்ப முடிவுகள் காட்டுகின்றன. ரஷ்யாவின் மத்திய தேர்தல் ஆணையத்தின்படி, அவர் 87 சதவீத வாக்குகளைப் பெற்றிருந்தார்.

கம்யூனிஸ்ட் வேட்பாளர் நிகோலாய் கரிடோனோவ் 4 சதவீதத்திற்கும் குறைவான வாக்குகளுடன் இரண்டாவது இடத்தையும், புதிய வேட்பாளரான விளாடிஸ்லாவ் டாவன்கோவ் மூன்றாவது இடத்தையும், தீவிர தேசியவாதி லியோனிட் ஸ்லட்ஸ்கி நான்காவது இடத்தையும் பிடித்தனர்.

தேர்தல் முடிவடைந்தபோது நாடு முழுவதும் 74.22 சதவீத வாக்குகள் பதிவாகியிருந்தது. இது 2018ஆம் ஆண்டு 67.5 சதவீதத்தையும் தாண்டியுள்ளது.

முன்னாள் சோவியத் ரஷ்யாவின் உளவாளியான லெப்டினன்ட் கேணலான புட்டீன் 1999 ஆம் ஆண்டு முதல் முதலில் அரச அதிகாரத்தில் பதவிக்கு வந்தார்.

கடந்த 200 ஆண்டுகள் கொண்ட ரஷ்ய வரலாற்றில் சோவியத் ரஷ்யாவில் ஆட்சியிலிருந்த ஜோசப் ஸ்டாலினை பின்னுக்குத் தள்ளி நீண்ட காலம் ஆட்சியில் இருந்த ஒரு தலைவர் என்ற இடத்தை புட்டீன் பெறுகிறார்.

புட்டீனின் ஆட்சி இனிவரும் ஆறு ஆண்டுகள் நீடிப்பார். அவ்வாறு அவர் ஆட்சியில் இருக்கும் பட்சத்தில் கால் நூற்றாண்டு ஆட்சியில் இருந்த தலைவர் என்ற இடத்தைப் பெறுவார்.




இந்த வாக்கெடுப்பு சுதந்திரமானதோ அல்லது நியாயமானதோ அல்ல என்று அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகள் தங்கள் உத்தியோகபூர்மான ஊடகங்களில் தொடர்ச்சியாக செய்திகளை வெளியிட்டு வருகின்றன என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

## இசுரவேல் மனிதாபிமான உதவிகளுக்கு அனுமதி வழங்கவேண்டும்; அவுஸ்திரேலியாவும், இங்கிலாந்தும் கூட்டாக வேண்டுகோள்!

மார்ச் 22, 2024

மனிதாபிமான உதவிகள் காசாவை சென்றடைவதை இஸ்ரேல்உறுதி செய்யவேண்டும் என அவுஸ்திரேலியாவும் இங்கிலாந்தும் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளன.

அவுஸ்திரேலிய இங்கிலாந்து வெளிவிவகார அமைச்சர்கள் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்

நிரந்தர பேண்தகு யுத்தநிறுத்தத்தை உருவாக்குவதற்கு உடனடி யுத்தநிறுத்தம் அவசியம் எனவும் இரு நாடுகளும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இரண்டு நாடுகளும் இன்று கூட்டாக அறிக்கையொன்றை விடுத்துள்ளன.

காசாவில் காணப்படும் பேரழிவு மனிதாபிமான நிலவரம் குறித்து அவுஸ்திரேலியாவும் இங்கிலாந்தும் கவலை வெளியிட்டுள்ளன.

ஒக்டோபர் ஏழாம் திகதி தாக்குதலை கண்டித்துள்ள அவுஸ்திரேலிய பிரிட்டன் இந்த தாக்குதல் அப்பாவி மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டது என தெரிவித்துள்ளதுடன் பாலியல் வன்முறைகள் இடம்பெற்றதாகவும் தெரிவித்துள்ளன.

அனைத்து தரப்பினரும் சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் வரையறைக்குள் செயற்படவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள அவுஸ்திரேலியாவும் பிரிட்டனும் உடனடி யுத்த நிறுத்தம் நிபந்தனையற்ற பயணக்கைதிகள் விடுதலை பொதுமக்களை அனைத்து சந்தர்ப்பத்திலும் பாதுகாத்தல் என்



பவற்றிற்கான வேண்டுகோளையும் விடுத்துள்ளன.

## பௌத்த பிக்குகளின் பேரரசியலை தடுக்கும் வரை மோதல்கள் தொடரும்; எச்சரிக்கும் சர்வதேசம்!

### சர்வதேச நெருக்கடி கண்காணிப்புக்குழுவின் இலங்கை ஆய்வாளர் அலன் கீனன்

மார்ச் 19, 2024

வெடுக்குநாறிமலை விவகாரத்தை ஒத்த மோதல்கள் தொடர்ந்தும் அரங்கேறும் என சர்வதேச நெருக்கடி கண்காணிப்புக் குழுவின் இலங்கை ஆய்வாளர் அலன் கீனன் எச்சரித்துள்ளார்.

அதாவது வவுனியா மாவட்டத்தின் வெடுக்குநாறிமலையில் உள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் கடந்த எட்டாம் திகதி சிவராத்திரி தினத்தன்று பூஜை வழிபாடுகளில் ஈடுபடச்சென்ற பக்தர்களுக்கு காவல்துறையினரால் இடையூறு விளைவிக்கப்பட்டதுடன் இரவு வேளையில் வழிபாடுகளைத் தொடர முற்பட்டோர் அங்கிருந்து வலுகட்டாயமாக வெளியேற்றப்பட்டனர். அத்தோடு அதுமாத்திரமன்றி ஆலயப்பூசகர் உள்ளடங்கலாக எட்டு பேர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டனர்.

இதனடிப்படையில் அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றைய தினம்(19) அவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டதுடன் அவர்களுக்கு எதிரான வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டது. இவ்வாறு இவர்கள் விடுவிக்கப்பட்டது வரவேற்கத்தக்க செய்தி என அலன் கீனன் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் சட்டத்துக்கு மதிப்பளிக்குமாறு 'கொழும்பு அரசாங்கம்' வலியுறுத்தும் வரையிலும், நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணிகளை அபகரிப்பதையும் அத்தோடு இன மற்றும் மதப்பரவலை மாற்றியமைப்பதையும் இலக்காகக்கொண்டு இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் இயங்கிவரும் (சிறியளவிலான) பௌத்த பிக்குகளின் பேரரசியல் அபிலாஷைகளைத் தடுக்கும் வரையிலும் இவ்வாறான மோதல்கள் தொடர்ந்துகொண்டேயிருக்கும் என எச்



சரித்துள்ளார்.

# குர்திஸ்தான் மாநில அரசின் அனுசரணையில் இடம்பெற்ற இனவழிப்பு மாநாட்டிற்கு உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவிற்குஉத்தியோகபூர்வ அழைப்பு; அதிதியுரை ஆற்றினார் WTCC பிரதிநிதி!

மார்ச் 18, 2024

குர்திஸ்தான் மாநில அரசின் அனுசரணையுடன் குர்திஸ்தான் தலைநகர் எர்பிலில் இடம்பெற்ற இனவழிப்பு மாநாட்டில் தேசத்தின் புதல்வி மருத்துவர் துவாரகா பிரபாகரன் அவர்களின் அரசியல் தலைமைத்துவத்தை ஏற்று இயங்கும் உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவிற்கு (WTCC) விடுக்கப்பட்ட உத்தியோகபூர்வ அழைப்பை ஏற்று அவ் அமைப்பின் பிரதிநிதி அதிதியுரை ஆற்றியுள்ளார்.






கடந்த 15.03.2024 வெள்ளிக்கிழமை எர்பில் மாநகரில் அமைந்திருக்கும் அதியுயர் பாதுகாப்பு வலயத்தில், KONCICC அமைப்பின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற இம் மாநாட்டில் பங்குபற்றிய வெளிநாட்டு அதிதிகளுக்கான பயண ஏற்பாடுகள், பாதுகாப்பு, தங்குமிடம், உபசரிப்பு ஆகியவற்றுக்கு ஈராக்கில் தனியான இராணுவக் கட்டமைப்பையும், அரச கட்டமைப்பையும் கொண்ட அதியுச்ச சுயாட்சி மாநில அரசாக விளங்கும் குர்திஸ்தான் மாநில அரசு அனுசரணை வழங்கியிருந்தது.



இனவழிப்பில் இருந்து உயிர்வாழ்வு வரை (From Genocide to Life) என்ற மகுடத்தின் கீழ் இடம்பெற்ற இம் மாநாட்டில் ஆசியுரையினை குர்திஸ்தான் மாநில அதிபர் நெச்சிர்வான் பார்சானி அவர்களின் மதியுரைஞர் கொறான் அவர்கள் ஆற்றினார்.

தொடர்ந்து குர்திஸ்தான், மொறக்கோ, கொரியா, லெபனான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த இனவழிப்பிற்கு எதிரான அமைப்புக்களின் பிரதிநிதிகளோடு, தமிழீழத்தின் சார்ப்பில் பிரித்தானியாவில் இருந்து பங்கேற்ற உலகத் தமிழர் ஒருங்கிணைப்




புக குழுவின் (WTCC) பிரதிநிதியான கலாநிதி A.R.சிறீஸ்கந்தராஜா அதிதியுரை ஆற்றினார் (Guest Speaker).

இதன்போது குர்திஸ்தானிலும், தமிழீழத்திலும் நிகழ்ந்த இனப்படுகொலைகளை உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதிநிதி ஒப்பிட்டுப் பேசியதோடு, ஏலவே நடந்தேறிய இனவழிப்புகளுக்கு நீதி தேடுவதோடு மட்டும் நின்றுவிடாது, இரு தேசங்களிலும் மீண்டும் இனவழிப்புகள் நிகழாதிருக்க வேண்டுமாயின், பன்னாட்டு உத்தரவாதத்துடன் கூடிய வலுவான பாதுகாப்புக் கட்டமைப்புகள் தமிழீழத்திலும், குர்திஸ்தானிலும் கட்டியெழுப்பப்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

குர்திஸ்தான் தேசம் மீண்டெழுவதற்கு இனவழிப்பில் இருந்து உயிர்தப்பிய குர்திஸ் தலைவர்கள் வழிகாட்டியது போன்று, தமிழீழ தேசமும் மீண்டெழுவதற்கு முள்ளிவாய்க்காலில் இனவழிப்பில் இருந்து உயிர்தப்பிய மருத்துவர் துவாரகா பிரபாகரன் அவர்கள் வழிகாட்டியாக விளங்குவதாகவும் தனது உரையில் உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதிநிதி தெரிவித்தார்.




மாநாட்டைத் தொடர்ந்து வந்த இரண்டு நாட்களும் உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதிநிதி உட்பட அனைத்து வெளிநாட்டு அதிதிகளும் கடந்த காலங்களில் குர்திஸ்தானில் சதாம் உசேனின் படைகளால் இனவழிப்பு அரங்கேற்றப்பட்ட பகுதிகள், சித்திரவதைக் கூடங்கள், மனிதப் புதைகுழிகள், நினைவுத் தூபிகள், மடிந்த குர்திஸ் பொதுமக்கள் மற்றும் பெஷ்மேகா (Peshmerga) போராளிகளின் கல்லறைகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அதிலும் குறிப்பாக சதாம் உசேனின் படைகளால் இரசாயனக் குண்டுகள் வீசிக் கொத்துக் கொத்தாக குர்திஸ் பொதுமக்கள் கொன்று குவிக்கப்பட்ட ஹலாப்ஜா பகுதியில் உள்ள கல்லறைகள் மற்றும் மனிதப் புதைகுழிகளில், மேற்குலக இராஜதந்திரிகள் மலர்வளையம் வைத்து இராணுவ மரியாதையுடன் வணக்கம் செலுத்திய 16.03.2024 சனிக்கிழமை காலை 11:00 மணிக்கு அதே இடத்தில் மலர்வளையம் வைத்து வணக்கம் செலுத்த உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதிதி உட்பட அனைத்து வெளிநாட்டு அதிதிகளும் அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பன்றியின் சிறுநீரகத்தை நபரொருவருக்கு பொருத்தி சாதனை படைத்த அமெரிக்க மருத்துவர்கள்!

மார்ச் 22, 2024

அமெரிக்காவில் சிறுநீரக பிரச்சனையால் பாதிக்கபட்டு இறுதிக்கட்டத்தை நொருங்கிய 62 வயதான நபரொருவருக்கு பன்றியின் சிறுநீரகத்தை பொருத்தி, மருத்துவர்கள் குழுவொன்று வெற்றி பெற்றுள்ளனர்.





அமெரிக்காவில், ரிக் ஸ்லாய்மென் என்ற 62 வயது நபர், கடந்த 11 வருடங்களாக சிறுநீரக நோயால் அவதிப்பட்டு வந்துள்ளார்.

குறித்த நபருக்கு மாசசூசெட்ஸ் Massachusetts மருத்துவமனையில் அவருக்கு சிறுநீரக மாற்று அறுவைசிகிச்சை செய்தனர்.

ஆனால், அறுவை சிகிச்சை முடிந்து ஐந்து வருடங்களுக்குள்ளாகவே மீண்டும் அவருக்கு 2 சிறுநீரகமும் செயல் இழந்துள்ளது.

அப்போது, மருத்துவர் டாட்சுவோ கவாய், தனது கடைசி முயற் சியாக நோயாளியான ரிக்ஸ்லாய்மென்னிடம், பன்றியின் சிறுநீரகத்தை பொருத்தி பார்க்கலாம் என்று அனுமதி கேட்டுள்ளார்.

நோயாளியும் தனது இறுதிக்கட்டத்தை நெருங்கி இருந்ததால், மருத்துவரின் ஆலோசனைக்கு ஒத்துக்கொண்டார். இதனால், மருத்துவர்கள் குழுவானது இவருக்கு பன்றியின் சிறுநீரகத்தை பொருத்தி, அதில் வெற்றி பெற்றுள்ளனர்.

இது தொடர்பாக பேசிய மருத்துவர் டாட்சுவோ கவாய்,



“பன்றியின் சிறுநீரகம் மனித சிறுநீரகத்தின் அளவை ஒத்ததாக இருக்கும். பன்றியின் இரத்த நாளங்களை நோயாளியின் இரத்த நாளங்களுடன் இணைக்கும் பொழுது, நாங்கள் எதிர்பார்த்தபடி உடனடியாக அது வேலை செய்ய ஆரம்பித்து, நோயாளியின் உடலிலிருந்து சிறுநீர் பிரிய ஆரம்பித்தது. இது எங்கள் ஆராய்ச்சி குழுவிற்கு கிடைத்த வெற்றி என்று தெரிவித்துள்ளார்.

# சர்வதேச விசாரணை மூலமான அர்த்தமுள்ள நீதியின் ஊடாக சிறீலங்காவின் கறைபடிந்த கறுப்புப் பக்கத்தைப் புரட்டமுடியும்!

## பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர் எலியற் கோல்பேர்ன்

மார்ச் 22, 2024

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வை வழங்குவதாக உத்தரவாதமளித்து, தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தாலும், அம்முயற்சிகளில் பலனேதுமில்லை என்பது நிரூபணமாகியுள்ளது.

தமிழ் சமூகம் அர்த்தமுள்ள நடவடிக்கைகளுக்காகக் காத்திருக்கின்றார்களே தவிர, அவர்களுக்கு வெறும் வார்த்தைகள் தேவையில்லை.



செயற்திறன்மிக்க சர்வதேச விசாரணைப்பொறிமுறை மற்றும் தண்டனை அளித்தல் ஊடாகவே இலங்கையில் அர்த்தமுள்ள நீதியையும், நல்லிணக்கத்தையும் உறுதிப்படுத்தமுடியும். அதன்மூலமே கறைபடிந்த இந்தக் கறுப்புப் பக்கத்தைப் புரட்ட முடியும் என பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர் எலியற் கோல்பேர்ன் அந்நாட்டு பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதுமாத்திரமின்றி இலங்கையில் போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டோருக்கு எதிராக பிரிட்டன் அரசாங்கம் தடைகளை விதிக்காமை தொடர்பில் தனது கரிசனையை வெளிப்படுத்தியுள்ள எலியற் கோல்பேர்ன், தடைகளை விதிப்பதன் மூலம் பொறுப்புக்கூறல் சார்ந்த அழுத்தத்தை வழங்கவேண்டும் எனவும், இலங்கையுடனான உறவை மீள்பரிசீலனைக்கு உட்படுத்தவேண்டும் எனவும் பிரிட்டன் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார்.

பிரிட்டன் பாராளுமன்றத்தில் புதன்கிழமை (20) இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் இடம்பெற்ற விவாதத்தில் உரையாற்றுகையிலேயே எலியற் கோல்பேர்ன் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

அங்கு அவர் மேலும் சுட்டிக்காட்டிய விடயங்கள் வருமாறு,

கடந்த 2009 ஆம் ஆண்டு இலங்கையில் மிகக் கொடூரமான இரத்த வெள்ளத்துடனேயே யுத்தம் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டது. இறுதிக்கட்ட யுத்தத்தின்போது ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர். சுமார் 70,000 - 170,000 தமிழர்களுக்கு என்ன நேர்ந்தது என்று தெரியாமலும், அவர்கள் உயிரிழந்திருப்பார்கள் என்ற எடுகோள் அடிப்படையிலான தீர்மானத்துடனும் இந்தக் கறைபடிந்த கதை இன்னமும் நிலைபெற்றிருக்கின்றது.

போர்க்குற்றங்களையும், மனிதகுலத்துக்கு எதிரான மிகமோசமான மீறல்களையும், இனப்படுகொலையையும் அரசாங்கம் தொடர்ச்சியாக நிராகரித்துவருவதானது இப்பழைய காயங்களிலிருந்து மீள்வதை நோக்கிய பாதையில் தடைகளை ஏற்படுத்தியிருக்கின்றது.

இலங்கையில் தமிழர்களினதும், முஸ்லிம்கள் உள்ளிட்ட ஏனைய சிறுபான்மையின சமூகங்களினதும் நிலை மிக மோசமானதாகக் காணப்படுகின்றது.

தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு, மனித உரிமை மீறல்கள் மற்றும் தீவிர இராணுவமயமாக்கல் என்பன தொடர்கின்றன. பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதிலும், நிலைமாறுகால நீதியை அடைந்துகொள்வதிலும் இலங்கை அடைந்திருக்கும் தோல்வி, அங்கு நிலையான சமாதானம் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றை இலக்காகக்கொண்ட எதிர்பார்ப்புக்களை மழுங்கடித்துள்ளன.

இலங்கையின் இனமோதலுக்கு மிகமுக்கிய காரணங்களாக அமைந்த பல தசாப்தகால செயற்திறனற்ற ஆட்சி நிர்வாகமும், தேசியவாத அரசின் கொள்கைகளும் தற்போதும் தொடர்வதுடன், அவை அண்மையகால அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கும் வழிகோலியுள்ளன.

இவ்வாறானதொரு பின்னணியில் கடந்தகால மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச சமூகம் இலங்கையைப் பொறுப்புக்கூறச்செய்யவேண்டும்.

ஏனெனில் செயற்திறன்மிக்க சர்வதேச விசாரணைப்பொறிமுறை மற்றும் தண்டனை அளித்தல் ஊடாகவே இலங்கையில் அர்த்தமுள்ள நீதியையும், நல்லிணக்கத்தையும் உறுதிப்படுத்த முடியும். அதன்மூலமே கறைபடிந்த இக்கறுப்புப் பக்கத்தைப் புரட்டமுடியும்.

கடந்த சில வருடங்களாக மாவீரர் தினத்தன்று வட, கிழக்கு வாழ் மக்கள் யுத்தத்தில் உயிரிழந்த தமது அன்புக்குரியவர்களை நினைவுகூரும்போது, அதற்குப் பல்வேறு வழிகளிலும் தடையேற்படுத்தப்படல், மாவீரர்தின நிகழ்வுகளில் பங்கேற்றோருக்கு எதிராகப் பயங்கரவாதத்தடைச்சட்டம் பிரயோகிக்கப்படல் என்பன தொடர்கின்றன.

குறிப்பாக தமிழ், முஸ்லிம் சிறுபான்மையினரை இலக்குவைத்துப் பிரயோகிக்கப்படுகின்ற மிகமோசமான தன்மையைக் கொண்ட பயங்கரவாதத்தடைச்சட்டத்தை முற்றாக இல்லாதொழிப்பதற்கு பிரிட்டன் அரசாங்கம் வலுவாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதேபோன்று இலங்கையின் வட, கிழக்கு மாகாணங்களில் இராணுவமயமாக்கல் தீவிரமடைந்துள்ளது. குறிப்பாக உலகளாவிய ரீதியில் பாரிய இராணுப்படையணியைக் கொண்டிருக்கும் நாடுகளில் ஒன்றான இலங்கை அதன் 20 இராணுவப்பிரிவுகளில் 18 பிரிவுகளை வட, கிழக்கு மாகாணங்களிலும், அவற்றில் 14 ஐ தனியாக வடக்கிலும் நிலைநிறுத்தியுள்ளது.

இராணுவமயமாக்கலை குறைத்திருப்பதாகவும், நீக்கியிருப்பதாகவும் அண்மையகாலங்களில் கூறப்பட்டாலும், நடைமுறையில் அது தென்படவில்லை. எனவே இவ்விடயத்தில் பிரிட்டன் அரசாங்கம் அதன் சர்வதேச பங்காளிகளுடன் இணைந்து இலங்கைக்கு அழுத்தம் பிரயோகிக்கவேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வை வழங்குவதாக உத்தரவாதமளித்து, தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தாலும், அம்முயற்சிகளில் பலனேதுமில்லை என்பது நிரூபணமாகியுள்ளது. தமிழ் சமூகம் அர்த்துமுள்ள நடவடிக்கைகளுக்காகக் காத்திருக்கின்றார்களே தவிர, அவர்களுக்கு வெறும் வார்த்தைகள் தேவையில்லை.

தமிழர்களுக்கு எதிராக போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் பாதுகாக்கப்படல், தண்டனைகளிலிருந்து விடுவிக்கப்படல் மற்றும் உயர் இராஜதந்திரப்பதவிகளுக்கு நியமிக்கப்படல் என்பன இன்னமும் தொடர்கின்றன. இவை இலங்கையின் நீதிக்கட்டமைப்பில் நிலவும் குறைபாட்டையும், தண்டனை விலக்கீட்டை அரச நிர்வாகம் பொறுத்துக்கொள்வதையும் காண்பிக்கின்றன.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் இன்னமும் தண்டிக்கப்படவில்லை. அதற்குரிய பல்வேறு ஆதாரங்கள் இருக்கின்ற போதிலும், பிரிட்டனின் மக்னிற்ஸ்கி சட்டத்தின்கீழ் எந்தவொரு குற்றவாளிக்கு எதிராகவும் தடைகள் விதிக்கப்படவில்லை.

கனடா முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராகவும், அமெரிக்கா ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிராகவும் தடைகளை விதித்திருக்கும் நிலையில், இவ்விடயத்தில் பிரிட்டன் எந்தவொரு நடவடிக்கையையும் முன்னெடுக்காமை அவற்றுக்கு முற்றிலும் முரணானதாக அமைந்திருக்கின்றது.

எனவே இவ்விடயத்தில் பிரிட்டன் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். இலங்கையுடனான பிரிட்டனின் உறவு மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்படவேண்டுமென நான் கருதுகின்றேன்.

மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் பாதுகாப்புத்துறை அதிகாரிகளை இலங்கை அதன் பாதுகாப்புப்படையிலிருந்து விலக்கும் வரை அந்நாட்டுடனான இராணுவ ஒத்துழைப்புக்களை பிரிட்டன் இடைநிறுத்தவேண்டும்.

அதுமாத்திரமன்றி அவ்வாறான குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானோருக்கு பிரிட்டன் இராஜதந்திர உள்நுழைவு அனுமதியையோ அல்லது இராஜதந்திர பதவிகளை வகிப்பதற்கான அனுமதியையோ வழங்கக்கூடாது. இலங்கையின் மனித உரிமைகள்சார் கடப்பாடுகளையும் மறுசீரமைப்புக்களையும் மேற்கொள்வதற்கான அழுத்தத்தைப் பிரயோகிப்பதற்கு தடைகளை விதிப்பதென்பது சிறந்த கருவியாக அமையும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ரஷ்யா மீதான பயங்கரத் தாக்குதல்; இஸ்லாமிய அமைப்பு பொறுப்பேற்றுள்ளது!

மார்ச் 23, 2024

ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவிற்கு புறநகரில் அமைந்துள்ள குரோகஸ் சிற்றி ஹால் இசை அரங்கில் கூடியிருந்த மக்கள் மீது ஆயுதம் தாக்கிய ஆயுததரிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 137 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 100க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என என்று ரஷ்யாவின் மத்திய பாதுகாப்பு சேவையை மேற்கோள்காட்டி ரஷ்யாவின் அரசு செய்தி நிறுவனமான TASS தெரிவித்துள்ளது.

23-03-2024 வெள்ளிக்கிழமை தாக்குதலாளிகள் துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்தியதோடு மேலும் வெடிபொருளையும் வெடிக்க வைத்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பிக்னிக் என்ற ராக் இசைக்குழுவின் இசை நிகழ்ச்சி நடைபெற்றிருந்த வேளை மூன்று தொடக்கம் 5 பேர் கொண்ட ஆயததரிகளே மக்கள் மீது தாக்குதலை நடத்தினர்.

ஆயுததாரிகள் துப்பாக்கிச் சூட்டை நடத்தியதுடன் கையெறிகுண்டு அல்ல தீக்குண்டை வீசியாதாக சம்பவ இடத்தில் இருந்த ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இதைத் தொடர்ந்து தீ அரங்கு முழுவம் பரவியது.

துப்பாக்கிச் சூடு 15 நிமிடங்கள் தொடங்கம் 20 நிமிடங்கள் வரை நடந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மக்கள் தங்கள் உயிர்களைக் காப்பாற்ற தரையில் படுத்தனர்.

காயமடைந்தவர்களில் சிலர் ஏற்கனவே மருத்துவ வசதிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ரஷ்யாவின் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மூக ஊடகங்களில் வெளியிடப்பட்ட ஒரு வீடியோ, ரஷ்ய தலைநகரின் வடக்கில் உள்ள க்ராஸ்னோகோர்ஸ்க் புறநகரில் உள்ள கட்டிடத்தின் மீது பெரும் கறுப்பு புகை எழுவதைக் காட்டியது.

ரஷ்யாவின் புலனாய்வு அமைப்பினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் சம்பவ இடத்திற்கு பாதுகாப்புப் படையினர் சென்றுள்ளனர்.

இதேவேளை இந்த தாக்குதலுக்கு ஆப்கானை சேர்ந்த ISIS-K என்ற அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.



இந்த தாக்குதலுக்கு பொறுப்பேற்றுள்ள ISIS-K என்ற அமைப்பு 2014 முதல் ஈரான், துர்க்மெனிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானில் பரவலாக செயல்பட்டுவரும் குழுவாகும். ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டீனை கடுமையாக விமர்சித்துவந்துள்ள ISIS-K அமைப்பு, இஸ்லாமியர்களை அடிமைகளாக நடத்துவதாக ரஷ்யா மீது குற்றஞ்சாட்டியுள்ளது.

# காசாவில் உடனடிப் போர் நிறுத்தம்; ஐ.நா பாதுகாப்புச் சபையில் தீர்மானம்!

மார்ச் 25, 2024

காசாவில் ரமழான் பண்டிகையின் போது உடனடிப் போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுக்கும் தீர்மானத்திற்கு ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் நிறைவேறியது. அத்துடன் ஹமாசின் பிடியில் உள்ள பணயக்கைதிகளையும் உடனடியாக விடுவிக்கவும் அழைப்பு விடுக்கிறது.

பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும 15 நாடுகளில் 14 நாடுகள் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தன. அமெரிக்கா வாக்கெடுப்பில் வாக்களிக்கவில்லை.

காசாவில் இசுரவேல்-ஹமாஸ் போருக்கு கிட்டத்தட்ட ஆறு மாதங்கள் கடந்துள்ள நிலையில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் திங்களன்று முஸ்லிம்களின் புனித மாதமான ரமலான் முடியும் வரை உடனடி போர்நிறுத்தம் கோரும் தீர்மானத்தை நிறை வேற்றியது.

நீடித்த, நிலையான போர்நிறுத்தத்திற்கு இட்டுச் செல்லும் போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுக்கும் பாதுகாப்பு சபையில் அங்கம் வகிக்கும் 14 நாடுகளின் வாக்குகளுடன் நிறைவேற்றப்பட்டது.

அக்டோபர் 7 அன்று இசுரவேல் மீதான ஹமாஸின் திடீர் தாக்குதலின் போது சிறைபிடிக்கப்பட்ட அனைத்து பணயக்கைதிகளையும் விடுவிக்கவும் தீர்மானம் கோருகிறது.

இருப்பினும் இந்த கோரிக்கை ஏப்ரல் 9 அன்று முடிவடையும் ரமழானின் போது போர்நிறுத்தத்திற்கான கோரிக்கையுடன் இணைக்கப்படவில்லை.

மேலும், காசா பகுதி முழுவதற்கும் மனிதாபிமான உதவியின் ஓட்டத்தை விரிவுபடுத்த வேண்டிய அவசரத் தேவையை அது வலியுறுத்தியது மற்றும் மனிதாபிமான உதவிகளை அளவில் வழங்குவதற்கான அனைத்து தடைகளையும் நீக்குவதற்கு அழைப்பு விடுத்தது.

ஸ்லோவேனியா, சுவிட்சர்லாந்து, ஈக்வடார், கயானா, ஜப்பான், மால்டா, மொசாம்பிக், தென் கொரியா மற்றும் சியரா லியோன் உள்ளிட்ட பலதரப்பட்ட நாடுகளுடன் அரபு நாடுகளின் உறுப்பினராக உள்ள அல்ஜீரியாவால் வெற்றிகரமான தீர்மானம் வரைவு கொண்டுவரப்பட்டது.

பாலஸ்தீன மக்கள் ஐந்து மாதங்களாக பயங்கர துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். "இந்த இரத்தக்களரி நீண்ட காலமாக நடந்து வருகிறது. இதற்கு முற்றுப்புள்ளி வைப்பது எங்கள் கடமை. இறுதியாக, பாதுகாப்பு கவுன்சில் பொறுப்பேற்கிறது.



ஐ.நா.வுக்கான அல்ஜீரிய தூதர் அமர் பெண்ட்ஜாமா கூறினார்.

காசா போரை முடிவுக்குக் கொண்டுவருவதில் இந்த தீர்மானம் ஒரு திருப்புமுனையாக இருக்க வேண்டும் என்று பாலஸ்தீன தூதர் ரியாத் மன்சூர் கூறினார். இந்த யுத்த நிறத்தமானது தாக்குதலின் முடிவை, நம் மக்களுக்கு எதிரான அட்டூழியங்களின் முடிவைக் குறிக்க வேண்டும் அவர் மேலும் தெரிவித்தார்.

இசுரவேல் அல்லது ஹமாஸ் தீர்மானத்தை ஏற்று செயல் படுத்துமா என்பது வேறு விடயம். ஆனால் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், இங்கிலாந்து மற்றும் பிற நாடுகளால் பயங்கரவாத அமைப்பாக கருதப்படும் ஹமாஸ், தீர்மானத்தை வரவேற்றுள்ளது.

# அமெரிக்காவில் கப்பல் மோதி பால்டிமோர் பாலம் இடிந்து விழுந்தது!

மார்ச் 26, 2024

அமெரிக்காவில் பால்டிமோர் பகுதியில் பிரான்சிஸ் ஸ்காட் என்ற பெயரிலான மிக பெரிய பாலம் ஒன்று அமைந்துள்ளது. இதன் மீது பெரிய சரக்குக் கப்பல் ஒன்று இன்று அதிகாலை திடீரென மோதியது. இதனால் பாலம் இடிந்து வீழ்ந்தது.

விபத்தின் போது அப்பாலத்தின் வழியாகப் பயணித்தவர்கள் கடலில் வீழ்ந்தனர். கடலில் வீழ்ந்தவர்களை தேடும் பணி தொடர்கிறது. இதில் வாகனங்கள் நீரில் விழுந்ததில் சிக்கி தவித்து வரும் 7 பேரை மீட்கும் முயற்சிகள் நடந்து வருகின்றன. வீழ்ந்தவர்களில் இருவர் உயிருடன் மீட்கப்பட்டனர். அதில் ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அவர்கள் பாலத்தில் கட்டுமான பணியில் ஈடுபட்ட தொழிலாளர்கள் என கூறப்படுகிறது. இதேபோன்று சில வாகனங்களும் நீரில் விழுந்தன.

இந்த விபத்து எதிரொலியாக, பாலத்தின் இருபுறமும் போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டது. அனைத்து வழிகளும் அடைக்கப்பட்டு உள்ளன. போக்குவரத்து வேறு பகுதிக்கு திருப்பி விடப்பட்டு உள்ளது என்று மேரிலேண்ட் போக்குவரத்து பிரிவு தெரிவித்து உள்ளது.

சிங்கப்பூர் கொடியுடன் கூடிய டாலி என்ற பெயரிலான அந்த சரக்கு கப்பல் பால்டிமோர் வழியே, இலங்கையின் கொழும்பு



நகருக்கு சென்று கொண்டிருந்தது என கடலோர காவல் படையை சேர்ந்த மேத்யூ வெஸ்ட் என்பவர் கூறியுள்ளார்.

# விமானங்களில் இருந்து பரசூட் மூலம் உதவிப்பொருட்களை விநியோகிப்பதை நிறுத்துமாறு ஹமாஸ் கோரிக்கை!

மார்ச் 27, 2024

காசாவில் விமானங்களில் இருந்து பரசூட் மூலம் உதவிப் பொருட்களை விநியோகிப்பதை நிறுத்துமாறு ஹமாஸ் அமைப்பு கோரியுள்ளது.

ஹமாஸ் பயங்கரவாத அமைப்பின் இந்த கோரிக்கைக்கு அமெரிக்கா மறுப்பு தெரிவித்துள்ளது.

காசாவில் உணவுப் பற்றாக்குறையால் தவித்துவரும் மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக விமானங்களில் இருந்து பரசூட் மூலம் உதவிப்பொருட்களை விநியோகிக்கும் நடவடிக்கையில் அமெரிக்கா உட்பட பல நாடுகள் ஈடுபட்டுள்ளன.

பரசூட் மூலம் வழங்கப்படும் உணவுப் பொதிகளை பெறுவதற்கான முயற்சிகளில் இதுவரை 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதனால் பரசூட் மூலம் பொதிகளை இறக்குவதை நிறுத்துமாறு ஹமாஸ் அமைப்பு கோரியுள்ளது.



இதற்கு பதிலாக, தரை வழியாக அதிகளவு விநியோகங்களுக்கு இசுரவேல் அனுமதிக்க வேண்டும் எனவும் ஹமாஸ் கோரியுள்ளது.

இருப்பினும், வான் வழியான விநியோகம் என்பது காசாவில் உள்ள பாலஸ்தீன மக்களுக்கு உதவிகளை விநியோகிப்பதற்காக அமெரிக்கா கையாளும் வழிகளில் ஒன்று எனவும், அதை அமெரிக்கா தொடரும் எனவும் அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு பேரவை தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஒக்டோபர் 7 ஆம் திகதியின் பின்னர் காஸாவில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 32,490 ஆக அதிகரித்துள்ளது என காஸா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# அமெரிக்கா ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரிக்க வேண்டும்!

## அமெரிக்கா காங்கிரஸ் உறுப்பினர்கள்

மார்ச் 30, 2024

இலங்கையில் ஐநாவின் உண்மை மற்றும் நல்லிணக்க முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்துள்ளன என தெரிவித்துள்ள அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் அமெரிக்கா ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரிக்கவேண்டும் ஆதரித்து என வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கெனிற்கு எழுதியுள்ள கடிதத்தில் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் டொனால்ட் ஜி டேவிஸ் வைலிநிக்கலஸ் ஜோன்கொதைமர், ஜெப் ஜக்சன் சமர்லீ, டானி கே டேவிஸ், சூசன் வைல்ட் ராஜாகிருஸ்ண மூர்த்தி, ஜமால்போமன் கேப்வாஸ்குவாஸ் ஆகியோர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்

அவர்கள் தங்கள் கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது.

1. ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரித்து, மற்றும் சர்வதேச சட்டங்களின்படி அவர்களுக்குள்ள உரிமைகளின் அடிப்படையில், பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, உலகளாவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜனநாயக வழிமுறையான பொது வாக்கெடுப்புமுறையை (Referendum) ஆதரிக்கவும்.

2. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகரின் பரிந்துரைகளைப் பின்பற்றி, போரின் போது பொதுமக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு விரிவான சர்வதேச விசாரணைகள் மற்றும் பொறுப்புக்கூறலை ஆதரிக்கவும். அத்தகைய விசாரணையில் இனப்படுகொலை (Genocide) செய்யப்பட்டதா என்பது பற்றிய ஆராய்வதும் அடங்கும்.

3. சுயாதீனமான நீதித்துறை நடவடிக்கைகளை ஊக்குவிக்கவும், சாத்தியமான குற்றச்சாட்டுகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (International Criminal Court) விசாரணைகளுக்காகப் பரிந்துரைக்கவும் அமெரிக்காவிற்கு ஐக்கிய



நாடுகள் சபையில் - பொதுச் சபை (General Assembly), பாதுகாப்பு கவுன்சில் (Security Council) மற்றும் மனித உரிமைகள் கவுன்சில் (UNHRC) உட்பட- உள்ள தலைமைப் பாத்திரத்தை வாய்ப்பாகப் பயன்படுத்தவும்,

# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC



www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

**Cell : 416-624-4843**

எமது முகவரி

305 Milner Ave, Unit 301
Toronto ON M1B 3v4
(Markham & HWY 401)




MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4




## சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

**உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்**
**சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?**

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# “எமது மாவீரர்களின் சுதந்திர தாகம் சாவுடன் தணிந்து போகவில்லை. அது எமது இனத்தின் வீர விடுதலைக் குரலாக உலகெங்கும் ஒலித்துக் கொண்டிருக்கிறது”

**–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**



அன்றைய தமிழர் இராச்சியம் வீழ்ச்சியடைந்து, பல நூறு ஆண்டுகள் அந்நியருக்கும், அயலவருக்கும், அளமைப்பட்டு வாழ்ந்த தமிழீழ தேசம் இன்று தலைநிமிர்ந்து நிற்கிறது. இன்று எமது தாயகத்தின் பெருநிலப் பரப்பில் எமது தன்னாட்சி நடைபெறுகிறது. ஒரு நீண்ட, துயரமான, கொடூரமான வரலாற்று இடைவெளியின் பின்பு, மீண்டும் தமிழினத்தின் வீர எழுச்சிச் சின்னமாக, தமிழர் மண்ணிற் புலிக்கொடி பட்டொலிவீசிப் பறக்கிறது. இநத மாபெரும் வரலாற்றுத் திருப்பத்தை ஏற்படுத்தித் தந்தவர்கள் எமது மாவீரர்கள் என்பதை நான் பெருமிதத்துடன் இன்று கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

எமது தேசிய விடுதலைப் போராட்டம் என்றுமில்லாதவாறு இன்று உலக மயமாகியுள்ளது. பல தசாப்தங்களாகப் பாராமுகம் காட்டி வந்த உலகம் இன்று தனது முழுக் கவனத்தையும் எமது போராட்டத்தின் மீது திருப்பியுள்ளது. ஒரு பலம் வாய்ந்த விடுதலைப் போராட்ட சக்தியாக இன்று உலகரங்கில் நாம் முன்னணி வகித்து நிற்கின்றோம். தர்மத்தின் வழி தழுவி, ஒரு சத்திய இலட்சியத்திற்காகச் செய்யப்படும் தியாகங்கள் என்றுமே வீண்போவதில்லை. எமது தேசத்தின் விடுதலைக்கு நாம் கொடுத்த விலை ஒப்பற்றது. உலக விடுதலை வரலாற்றில் நிகரற்றது. இந்த அளப்பரிய ஈகத்தின் ஆன்மீக சக்தி இன்று உலகத்தின் மனச்சாட்சியை உலுப்பிவிட்டிருக்கிறது. எமது மாவீரர்களின் சுதந்திர தாகம் சாவுடன் தணிந்து போகவில்லை. அது எமது இனத்தின் வீர விடுதலைக் குரலாக உலகெங்கும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

சாதி, மதம், வர்க்கம் என்று வேறுபாடுகளுக்கப்பால், ஒரு விடுதலை இயக்கத்தின் கீழ், ஒரு விடுதலை இலட்சியத்தின் கீழ், ஒன்றுபட்ட சமூகமாக எமது மக்கள் இன்று அணிதிரண்டு நிற்கிறார்கள். வீரம் செறிந்த எமது விடுதலைப் போராட்டமும் அந்த விடுதலைப் போராட்டத்தில் எமது போராளிகள் ஈட்டிய அபாரமான சாதனைகளும் அவர்கள் புரிந்த அற்புதமான தியாகங்களுமே எமது மக்களை எழுச்சியூட்டி, உணர்வூட்டி ஒரே அணியில், ஒரே இனமாக, ஒரே தேசமாக ஒன்றுதிரள வைத்திருக்கின்றன. எமது மாவீரர்களின் மகத்தான தியாகங்களும் அர்ப்பணிப்புககளுமே எமது தேசத்தின் ஒருமைப்பாட்டிற்கு ஆதாரசக்தியாக விளங்குகின்றன.

*2003 ஆம் ஆண்டு தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.*



மரகதம்
வைரம்
முத்து
புஷ்பராகம்
மாணிக்கம்
பவளம்
வைடூரியம்
நீலம்
கோமேதகம்
உங்கள் இராசிக்கேற்றபடி
அதிஸ்டக் கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் செய்து தரப்படும்
லஷ்சுமி பொற்சாலை
Inside of Majestic City Plaza
அழையுங்கள்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6





PSP
PSP MOTORS
QUALITY USED CARS
Dealers in all kinds of used Motor Vehicles
பல வருடம் அனுபவம் கொண்ட நம்பிக்கையான ஸ்தாபனம்
தரமான பாவித்த ஜப்பானிய வாகனங்கள்
நியாயமான விலையில் கிடைக்கும்
WE'LL BUY YOUR USED VEHICLE EVEN IF YOU DON'T WANT TO BUY OURS!
T. Udayakumar
PSP MOTORS 416.871.0450
30 Old Kennedy Road Unit B Markham ON. L3R 0L6
www.pspmotors.com I info@pspmotors.com




HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
Endless Supply of Hot Water
No Up-front Equipment Cost
Save Up To 40%
Save Money & Space Design
15 Years Warranty
No More Risk of Flooding or Explos
KD NAVIEN
The Leader in Condensing Tankless Technology
FREE ESTIMATE
Sales, Service & Repair
S.Kumar
416-993-8001
Airehvac70@gmail.com
FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN
$15,000





நான் பெரிது நீ பெரிது என்று
வாழாமல்
நாடு பெரிது என்று
வாழவேண்டும்
தமிழீழத் தேசியத் தலைவர்
தமிழீழம்
விடியலை நோக்கி

# எரி சுமந்து நடப்போம்



தணலாய்த் தகிக்கும் தாய் நிலமே!
தமிழீழத் தாயவளே
கனலேந்தி நீ காத்திருக்கிறாய்
பெருமழை பொழியாதோ என்று...

ஐயெட்டு ஆண்டுகளாய்
அடிக்கொரு அடியாய் வளர்த்த போராட்டம்
பொய்பட்டுப் போய் விடுமோ என்று
புலம்பித்தவிக்குதம்மா நெஞ்சம்

கைப் பிடித்து நீ வளர்த்த பிள்ளைகள்
எத்தனை ஆயிரம் பேர்கள் - தம்
மெய்யை உரமாக்கித் துயில
மெய்யான விடுதலைக்காய் நடக்கிறோம்...
சுதந்திரக் காற்றுவீசாதோ என்று

உறுதி குலையா மனத்தோடு உழைத்த
எமதருமை மக்கள் லட்சம் பேர்...
உன் திருமேனியில் நீள்துயில் கொள்ள
ஐயகோ என்றுஅழுது புலம்பி...

ஆவதென்ன இங்கே - அடிமைத்தனம்
அழித்தே தீரவேண்டும் இதுவிதி - பொய்யாரை
ஒழிக்கத் தேடுவோம் வழி.
ஆயிரம் ஆயிரம் உயிர்களின் விதையில்
ஆலமரமானது விடுதலைப்போர் விருட்சம்

குருதிநீரும் நெஞ்சுக் கூட்டின்
வலிகளாலான உரமும் கொண்டேதான்.
நீண்டு வந்த நிறைவான விடுதலை
வேண்டிப் பெருவேள்வி இரண்டாயிரத்தெட்டுஒன்பதில்

வேங்கைத் தலைவன் வழி நடந்து
விளாசி எரித்தோம் போர்த் தீயை.
ஆடவர் பெண்கள் என்ற பேதமில்லை
வீரர்கள் யாவருமே விரைந்துகளமாட

வீரியம் தந்தவன் உன் பிள்ளை
கூரிய அறிவுடைய எங்கள் அண்ணன்.
பூக்கள் பிஞ்சுகளும் மனமுவந்து
தீயாய் போயினதேசம் காத்திட

தாய்மார்கள் கூட களமாடிய வரலாறு
தமிழீழ மண்ணின் பெருமிதம்.
கணத்திற்கு ஓர் உயிரென
பறித்தது சிங்களம்

உணவுக்குப் பதில்
சன்னங்கள் உயிரில் ஏற.
மக்களின் அவலங்கள் சொல்லிமாளாது
மாக்களை விடக்கேவலம் சொந்தமண்ணில்

ஒவ்வொரு நிமிடமும் துப்பாக்கி சீற
ஓட ஓட விரட்டிய இராணுவம்.
நீரில்லை, உணவில்லை, நேரான வாழ்வில்லை
தூக்க மில்லைக்கண்ணில், துயர்சொல்ல யாருமில்லை
பேய்கள் உறைந்தன எங்கள் முகங்களில் - நடைப்

பிணங்களாய் நடந்தோம்– தாயே

நாம் செய்த பிழையென்ன?...
உரிமை கேட்டது குற்றமா?...
உயிரோடு வாழ்வது குற்றமா?...
தமிழனாய் இருப்பது குற்றமா?...
தன்மானம் மதிப்பது குற்றமா?...

பரம்பரையாய் எம் முன்னோர்கள் ஆண்ட நிலம்
பைந்தமிழ்க் கலைகள் சிறந்துவாழ்ந்தநிலம்
பாரினில் தமிழரின் வரலாற்று வழி நிலம்
போரில் எரிந்து சுடுகாடாய் ஆனது.

இரத்த ஆறு பிணங்களின் காடு
இவை கதைகளில் கேட்டிருந்தேன் சிறுவயதில்
எனது மண்ணிலே இந்நிலை தன்னை

பன்னிரு கண்களினாற் பார்க்க நேர்ந்ததே
'ஆனந்தபுரம்' என்னும் அழகிய ஊரை
ஆருக்குத் தெரியும் அழிவுக்கு முன்னர் ?
'முள்ளிவாய்க்கால்' என்னும் முல்லையின் ஒர் பகுதியை
முன்னர் இவ்வுலகம் அறியுமா ?

ஆசையாய் நாம் ஆடிக்களித்த ஆனந்தபுரத்திலே
ஓநாய்ச் சிங்கள ஆமியின் ஊளைகள்
ஒருலட்சம் குண்டுகள் போட்டு
பேயாட்டம் ஆடியதை என்னசொல்ல

நெஞ்சிலுறுதிகொண்டு தானைப் புலித் தளபதிகள்

அஞ்சாது படைநடத்தி ஆனந்தபுரத்தினுள்ளே
துஞ்சாது துணிந்து களமாடியவாறே
வெஞ்சமர் அக்கினிக்குள் வெந்தனர் அன்று.
உலகத்தில் காணவொண்ணா உறுதிமிக்க பெண் புலிகள்
தலைவன் வளர்த்தெடுத்த தனித்தமிழ் மறப்புலிகள்

ஒன்றாய் இணைந்து முற்றுகைக்குள் மூசினர்
மூர்க்கரைதுடைத்தழித்து முறியடித்த வியூகங்கள் பற்பல
பயந்து நடுங்கினர் சிங்களப் படைகள்
எரிந்தது பகைவரின் படைக் கலங்கள்

தடைசெய்தஆயுதம் கொண்டே சிங்களம் - போரைத்
தடுத்திடத் தீட்டினர் வஞ்சகத் திட்டம்
முப்பது நாடுகளின் மூலோபாயங்கள்
தப்பாத ராஜபக்சவின் கொலை வெறித்தனங்கள்

பதினைந்து விமானங்கள் போட்டனகுண்டுகள்
பல் குழல் எறிகணைகள் பாய்ந்தன ஒரேநேரத்தில்
பங்குனி தொடங்கி சித்திரை ஐந்துநாள் வரை
கொத்தாக மாவீரர் ஆகுதியாகினர்
ஆனந்தபுரத்திலே அன்னைமண் கலந்தனர்

அணைந்தன உயிர்கள் எரிந்தன எம் மனங்கள்
முத்தானபல மூத்ததளபதிகளோடு
ஐந்நூறு வீரர்கள் அங்கேமௌனிக்க
முடியவில்லை, போர் மூசிஎழுந்தது
முள்ளிவாய்க்கால்க் கரைவரை நீண்டது..

இன்னும் பலவீரர்கள் சிறைப்பிடிக்கப்பட்டனர்
இதுவரை அவர்கள் செய்தியேதும் எங்களின்
செவிகளுக்கு எட்டவில்லை
தேடிக் களைத்து நலிந்தன உறவுகள்.

சித்திரவதைகளால் அவர்கள்
செத்திருக்கக் கூடுமொ... இல்லை
சிறுகச் சிறுக அவரை இராணுவம்
சிதைத்தழிக்கின்றனரோ?... யாரறிவார்?

பத்தி எரியுது நெஞ்சம் துயரினால்
பாராமுகமாய் இன்றும் உலகநாடுகள்
ஐ.நா சபையில் அரங்கேறும் நாடகங்கள்
நீதிகேட்டு ஓலமிடும் புலம்பெயர்ந்த எம் மக்கள்

இன்றும் தொடருது எங்கள் போராட்டம்
இனியும் தொடரும் தாய் மண்ணைமீட்கும் வரை
ஆயுதமா, அகிம்சையா என்பதல்ல முக்கியம் - தமிழீழம்

அடையும்வரை தீசுமந்து நடப்போம் இது சத்தியம்

விடுதலைப் பசி வேகம் கொள்ள
விரைகிறோம்...
விதையாகி வீழ்ந்த எங்கள் - மா
வீரர்களின் நினைவு சுமந்து...

ஆனந்தபுரத்தில் ஆகுதியானமாவீரர்களுக்கும்,
தமிழீழவிடுதலைக்காய் உயிரீந்த அனைத்து மாவீரர்களுக்கும் எம் இனிய
மக்களுக்கும் இக் கவிதைசமர்ப்பணம்
- கலைமகள்

# வெடுக்குநாறிமலையும் வெள்ளை ஈயும்!

23.03.2024



வெடுக்குநாறி மலை விவகாரம் பெரும்பாலான தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகளை ஒன்றுபடுத்தியிருக்கிறது. கடந்த 15 ஆண்டுகளாகத் தமிழ்க் கட்சிகளை ஒன்றுபடுத்துவது எதிர்த் தரப்புத்தான்.



சிவ பூசையில் கைது செய்யப்பட்டவர்களை விடுவிப்பதற்கான போராட்டக் களத்தில் எல்லாக் கட்சிகளும் ஒன்றாக நின்றன. பரவாயில்லை. குறைந்தது ஒரு விவகாரத்தை மையமாகக் கொண்டாவது கட்சிகள் அவ்வாறு ஒன்றாகத் திரள்வது நல்லது. ஆனால் இந்த விவகார மைய ஐக்கியம் மட்டும் தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டப் போதாது. தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டுவது என்ற அடிப்படையில் கட்சிகள் ஒன்றிணையும் போதுதான் கடந்த 15 ஆண்டு காலத் தேக்கத்தில் இருந்து விடுபடலாம். அல்லது அவ்வாறு கட்சிகளை ஒன்றிணைக்கத் தக்க பலத்தோடு ஒரு கட்சி பலமானதாக மேற்கிளம்ப வேண்டும்.

எதுவாயினும் சிவராத்திரியன்று கைது செய்யப்பட்டவர்களை மீட்பதற்காக கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட்டது வரவேற்கத் தக்கது. இது போன்ற "கலெக்டிவ்" ஆன அதாவது ஒன்றிணைந்த கூட்டு முயற்சிகள்தான் வெற்றியளிக்கும் என்பதற்கு இங்கு அரசியல் அல்லாத வேறு ஒரு உதாரணத்தைச் சுட்டிக் காட்ட வேண்டும்.

எங்களில் எத்தனை பேர் எமது வீடுகளில் உள்ள தென்னை மரங்களில் விளைச்சல் குறைந்து வருவதை அவதானித்திருக்கிறோம்? தென்னோலைகளில் மேற்பரப்பில் கறுப்பாக எண்ணெய்த் தன்மையோடு ஏதோ ஒட்டிக் கொண்டிருக்கிறது. ஓலைகளின் கீட் பகுதிகளில் பூஞ்சனம் போல வெள்ளையாக ஏதோ ஒட்டிக் கொண்டிருக்கிறது. அது தென்னை மரங்களில்





இருந்து தொடங்கி கொய்யா, மா, நாவல், வாழை, வெண்டி, எலுமிச்சை, செம்பருத்தி, சீத்தாப்பழம், கருவேப்பிலை என்று ஏனைய மரங்களின் மீதும் பரவுகிறது. ஒரு வீட்டில் மட்டுமல்ல, ஒரு கிராமம், ஒரு பிரதேசம் முழுவதும் அது பரவி வருகின்றது.

குறிப்பாக வெக்கையான காலங்களில் தென்னை மரங்களைத் தாக்கும் வெள்ளை ஈ -Spiral Whitefly(Aleurodicus Disperses) -அதுவென்று துறைசார்ந்த திணைக்களங்கள் தெரிவிக்கின்றன. அதன் தாக்கத்துக்கு இலக்காகிய தென்னோலைகள் சத்திழந்து, காய்ந்து கருகி ஒரு கட்டத்தில் மட்டையோடு கழண்டு விழுகின்றன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் வெள்ளை ஈயின் தாக்கம் அதிகரிக்கின்றது. புத்தளம் மாவட்டத்தில் தங்கொடுவ, நாத்தாண்டிய, சிலாபம், முகுனுவடவன, ஆரியகம, பட்டுலு ஓயா, முந்தலம ஆகிய பிரதேசங்களில் வெள்ளை ஈயின் தாக்கம் உள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது. தீவிரமாகப் பரவும் வெள்ளை ஈயினால் இலங்கையில் சுமார் இரண்டாயிரம் ஏக்கர் தென்னந் தோப்புகள் சேதமடைந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

மழைக் காலங்களில் வெள்ளை ஈயின் தாக்கம் குறைவாக இருக்கின்றது. தென்னோலைகள் கழுவப்படும் போது வெள்ளை ஈயின் பெருக்கம் குறைகிறது. ஆனால் வறட்சியான காலங்களில் வெள்ளை ஈ தென்னந் தோப்புக்களுக்கு எதிராக ஓர் உயிரியல் போரைத் தொடுக்கின்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை விருதுகள் வழங்கும் நிகழ்வு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. அதில் பேசிய அந்த அமைப்பின் தலைவராகிய ஐங்கரநேசன் வெள்ளை ஈ தொடர்பாகவும் சுட்டிக்காட்டினார். வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்துவதற்கு ஒஸ்ரேலியாவைச் சேர்ந்த ஒரு தமிழர் கூறிய ஒரு பரிகாரத்தை அவர் மேடையில் வைத்துச் சொன்னார். வீடுகளில் நாங்கள் பயன்படுத்தும் சலவைத் தூளில் இரண்டு அல்லது மூன்று கரண்டிகளை எடுத்து 5 லிட்டர் நீரில் கரைத்த பின் அதனை தென்னோலைகளுக்குத் தெளிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். சலவை தூளுடன் ஒரு மரத்துக்கு 200 மில்லி லீட்டர் வேப்பெண்ணெயையும் கலந்து அடித்தால் பயன் தரும் என்று தென்னை பயிர்ச் செய்கை சபையைச் சேர்ந்தவர்கள் கூறினார்கள்.

குறிப்பிட்ட கலவையை தென்னோலைகளின் மீது தெளிப்பதற்கு உயர் அழுத்தப் பம்பிகள் தேவை. வடபகுதி தென்னை பயிர்ச் செய்கை சபையிடம் 10 பம்பிகள் உண்டு என்று கூறப்படுகிறது. சீனாவில் இருந்து சிறிய பம்பி ஒன்றை கிட்டத்தட்ட 40,000 ரூபாய்க்கு இறக்குமதி செய்ய முடியும் என்று ஒரு வணிகர் கூறினார்.

வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்தத் தவறினால், ஒருகட்டத்தில் தேங்காய்த் தட்டுப்பாடு ஏற்படும். அது நேரடியாக வயிற்றில் அடிக்கும். இறுதிக்கட்டப் போரில் தேங்காய்க்கு அலைந்த ஒரு மக்கள் கூட்டம் நாங்கள். இறுதிக் கட்டப் போரில் 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆனந்தபுரத்தில் நடந்த சண்டையோடு பெரும்பாலும் தேங்காய் இல்லாமல் போய்விட்டது. முள்ளிவாய்க்கால் கடற்கரையில் தென்னைகள் இருந்தன. ஆனால் அங்கிருந்த அசாதாரண சனத்தொகைக்குப் போதுமான தேங்காய்கள் இருக்கவில்லை. ஆனந்தபுரத்தில்தான் ஒப்பீட்டளவில் அதிக தென்னை மரங்கள் இருந்தன. ஆனந்தபுரத்தை இழந்ததோடு தேங்காய்த் தட்டுப்பாடு தொடங்கியது. அதன் பின் முள்ளிவாய்க்கால் கஞ்சிக்குத் தேங்காய்ப் பாலுக்குப் பதிலாக பால்மாவை பயன்படுத்தப்பட்டது. ஒரு கஞ்சிக்கலயத்துக்கு இரண்டு பால்மா பக்கெட்டுகள்.

அது போர்க்காலம். ஆனந்தபுரத்தோடு தேங்காய் இருக்கவில்லை. ஆனால் இப்பொழுது 15 ஆண்டுகளின் பின் வெள்ளை ஈ ஏறக்குறைய ஒரு போரைத் கொடுத்திருக்கிறது. அது ஒரு கூட்டுத் தாக்கம். இத்தாக்கத்திலிருந்து தென்னை மரங்களைப் பாதுகாக்கத் தவறினால் தேங்காய்க்கு அலைய வேண்டி வரும். தேங்காய் எண்ணையின் விலை கூடும். தேங்காய் எண்ணெயை பயன்படுத்தும் எல்லா உணவுப் பொருட்களின் விலையும் கூடும். பொருளாதார நெருக்கடிக்கு முன்னரே தேங்காய் எண்ணெயின் விலை அதிகரித்துவிட்டது. இப்பொழுது ஒரு லிட்டர் 600 ரூபாயிலிருந்து ஆயிரம் ரூபாய்க்கு மேல் வரை போகிறது.

நுகர்வுக் கலாச்சாரத்துள் சமூக வலைத்தளங்கள் ஏற்படுத்திய நல் விளைவுகளில் ஒன்றை இங்கே சுட்டிக் காட்ட வேண்டும். பல்பொருள் அங்காடிகளில் விற்கப்படும் தேங்காய் எண்ணையின் தரம் குறித்த சந்தேகங்கள், சமூக வலைத்தளங்களில் பரவலாக வரத் தொடங்கிய ஒரு பின்னணியில், வீட்டில் தென்னைகளை வளர்ப்பவர்கள் தங்களுக்குத் தேவையான தேங்காய் எண்ணெயைத் தாங்களே உற்பத்தி செய்யத் தொடங்கினார்கள். அது ஒரு அற்புதமான செயல். தமிழ்ப் பகுதிகளில்



அதிகம் தென்ன மரங்களைக் கொண்ட காணிகளை வைத்திருப்பவர்கள் தங்களுக்கு தேவையான தேங்காய் எண்ணெயைப் பல்பொருள் அங்காடிகளில் வாங்குவதைத் தவிர்க்கத் தொடங்கினார்கள். ஆனால், இப்பொழுது வெள்ளை ஈ எல்லாவற்றையும் கேள்விக்கு உள்ளாக்கியிருக்கிறது.

வெள்ளை ஈயின் உயிரியல் எதிரிகளான பூச்சிகளை, வண்டுகளைப் பெருக்குவதின்மூலம் அதைக் கட்டுப்படுத்தலாமா என்று தென்னை பயிர் செய்கை சபை கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் ஒரு பரிசோதனை முயற்சியைத் தொடங்கியிருக்கிறது. அதன் விளைவுகள் விரைவில் தெரிய வரலாம் என்று கூறப்படுகின்றது. வெள்ளை ஈயின் தாக்கத்துக்கு உள்ளாகிய தென்னை மர உரிமையாளர்கள், தென்னை பயிர்ச் செய்கை சபையை அணுகி பரிகாரத்தைப் பெறலாம் என்றும் அவர்கள் கூறுகிறார்கள். ஒவ்வொரு பிரதேசத்துக்கும் உரிய கமநல சேவை நிலையத்தில் தென்னை பயிர்ச் செய்கை சபையின் ஒரு பிரிவு இயங்குவதாகவும் அங்கே பாதிக்கப்பட்டவர்கள் தமது முறைப்பாடுகளைச் செய்யலாம் என்றும் கூறப்படுகிறது. ஆனால் பாதிக்கப்பட்ட ஒருவர் அல்லது சில பண்ணையாளர்கள் அதற்கு தீர்வு காண்பதன்மூலம் வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்த முடியாது. அது ஒரு கூட்டுத் தாக்கம். ஒரு முழுப் பிரதேசத்தையும் அது தாக்குகின்றது. ஒரு வீட்டில் கட்டுப்படுத்தினால் சிறிது காலத்தின் பின் பக்கத்துக்கு வீட்டிலிருந்து வெள்ளை ஈ மீண்டும் வரும். எனவே ஒரு வீட்டில் அல்லது ஒரு பண்ணையில் மட்டும் அதை கட்டுப்பட்டுவதால் பிரியோசனம் இல்லை. அதை முழுச் சமூகத்துக்கும் உரிய ஒரு கூட்டு செயற்பாடாக முன்னெடுத்தால் மட்டுமே வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்தலாம் என்று சம்பந்தப்பட்ட துறைசார் திணைக்களங்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே தமிழ் மக்கள் முள் முருக்கு மரத்தை பெருமளவுக்கு தொலைத்து விட்டார்கள். தமிழ் பண்பாட்டில் மிகவும் மங்களகரமான ஒரு நிகழ்வாகிய திருமணத்தில் கன்னிக்கால் என்று கூறி நடப்படுவது முள்முருக்கு. முள் முருக்கில் ஏற்பட்ட ஒரு நோய்த் தாக்கம் காரணமாகவும் நகரமயமாக்கத்தின் விளைவாக உயிர் வேலிகள் அருகிச் செல்வதன் காரணமாகவும் முள் முருக்கு அழிந்து செல்லும் ஒரு தாவரமாக மாறி வருகிறது.

தமிழ் மக்கள் மத்தியில் உயர் கல்வி நிறுவனங்களில் தாவரவியல் ஓர் ஆராய்ச்சிப் பிரிவாக உண்டு. தமிழ் பண்பாட்டில் தனக்கென்று தவிர்க்க முடியாத ஒரு தாவரவியல் இருப்பைக் கொண்டிருக்கும் முள்முருக்கைக் காப்பாற்ற ஏன் அதில் சம்பந்தப்பட்ட துறைசார் நிபுணர்கள் அல்லது புலமையாளர்களால் முடியவில்லை? திருமணங்களில் முள்முருக்கிற்குப் பதிலாக குரோட்டன் முருக்கந்தடியைப் பயன்படுத்துவதுபோல, தேங்காய்க்குப் பதிலாக வேறு எதையாவது பயன்படுத்தப் போகிறோமா?

முள் முருக்குப் போலவே வெள்ளை ஈயின் விடயத்திலும் பொருத்தமான துறை சார்ந்த ஆய்வுகள் அவசியம். வடக்குக் கிழக்குப் பகுதிகள் உலர் வலையத்துக்குரியவை. நாட்டில் உலர் வலையத்துக்கு என்று தென்னை ஆராய்ச்சி மையம் எதுவும் கிடையாது. அதனால், உலர் வலையத்துக்குரிய தென்னை ஆராய்ச்சி மையம் ஒன்று தமிழ்ப் பகுதிகளில் உருவாக்கப்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனவே, வெள்ளை ஈயிடமிருந்து தமிழ்ச் சமையலைப் பாதுகாக்க, துறைசார் ஆராய்ச்சியாளர்களும் திணைக்களங்களும் சமூக நலன் விரும்பிகளும் சுற்றுச்சூழலியலாளர்களும் கிராமமட்ட அமைப்புகளும் குடிமக்கள் சமூகங்களும் ஊடகங்களும் ஒன்றிணைய வேண்டும். பொதுவாக சமூகம் தழுவிய கூட்டு முயற்சிகள் என்று வரும்பொழுது அங்கே அரசியல் தலைமைத்துவம் அல்லது சமூகச் செயற்பாட்டு அமைப்புகளின் தலைமைத்துவம் தேவைப்படுவதுண்டு. எனவே வெள்ளை ஈ தமிழ் மக்களின் சாப்பாட்டு மேசைக்கு வரமுன்னரே அதைத் தடுக்கும் முயற்சிகளில் கூட்டாகத் தமிழ்ச் சமூகம் இறங்க வேண்டும். வெடுக்குநாறி மலையில் உள்ள தமிழ் மரபுரிமை சின்னத்தைப் பாதுகாப்பதற்காகத் தமிழ்க்கட்சிகள் ஒன்று திரண்டதைப்போல.

நன்றி: நிலாந்தன்



# தென்னையில் வெள்ளை ஈக்களைக் கட்டுப்படுத்த மஞ்சள் நிற ஒட்டும் பொறி!

தமிழ் நாடு திருப்பூர் மாவட்டம், உடுமலை சுற்றுவட்டாரப் பகுதிகளில் சுமார் 40 ஆயிரம் ஏக்கரில் தென்னை சாகுபடி (Coconut Cultivation) செய்யப்பட்டுள்ளது. தற்போது தென்னை, பாக்கு, கொய்யா மற்றும் காய்கறிப் பயிர்களில் சாறு உறிஞ்சும் பூச்சிகளான வெள்ளை ஈக்களால் மகசூல் இழப்பு (Yield Loss) ஏற்படுவதைத் தவிர்க்க விவசாயிகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற் கொண்டு வருகின்றனர். அந்தவகையில் உடுமலை பகுதியில் உள்ள விவசாயி ஒருவர் தனது தோப்பிலுள்ள அனைத்து தென்னை மரங்களிலும் மஞ்சள் நிற ஒட்டும் பொறியைக் கட்டியுள்ளார்.

சுருள் வெள்ளை ஈக்களைப் பொறுத்தவரை எந்தவிதமான இரசாயன மருந்துகளாலும் கட்டுப்படுத்த முடிவதில்லை. முழு வதுமான இயற்கை முறையில் மட்டுமே அவற்றின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முடிகிறது. அந்தவகையில் மஞ்சள் நிறம் தாய் பூச்சிகளைக் கவரக் கூடியதாக உள்ளது என்ற அடிப்படையில் ஏக்கருக்கு 8 எண்ணிக்கையில் மஞ்சள் நிற ஒட்டும் பொறிகளை வைக்க வேளாண்மைத் துறையினர் வலியுறுத்தினர்.

அதனடிப்படையில் ஏக்கருக்கு 8 தென்னை மரங்களில் சுமார் 6 அடி உயரத்தில் மஞ்சள் நிற ஒட்டும் பொறிகளைக் கட்டி வைத்தோம். இதன் மூலம் வெள்ளை ஈக்கள் பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டது.

ஒரு சிறு குறிப்பு – விவசாய தகவல்கள் செய்தி, 28.01.2022

# குடாரப்புத் தரையிறக்கமும் அதனோடான ஆனையிறவு மீட்புச் சமரும்




கரு: குடாரப்புத் தரையிறக்கத்தின் பொழிப்பு பார்வை மற்றும் ஆனையிறவுச்சமரின் மேலோட்டப் பார்வை.



ஆனையிறவு கூட்டுப் படைத்தளத் தாக்குதல் சிறீலங்கா படைத் துறையினரின் ஆனையிறவு ஆக்கிரமிப்பிற்கெதிராக 2000 ஆம் ஆண்டு மார்ச் 26, ஞாயிற்றுக்கிழமை மாலை நேர அளவில் தமிழீழ விடுதலைப் புலிகளால் தொடுக்கப்பட்ட தாக்குதல் ஆகும். ஓயாத அலைகள் மூன்று என்ற நடவடிக்கை மூலம் ஆனையிறவுப் படைத்தளம் தமிழீழ விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது.

35 நாட்களின் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் முழுக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்ட ஆனையிறவுப் படைத் தளமானது பத்தாயிரத்திற்கும் அதிகமான சிறீலங்கா படைத் துறையினரின் பாதுகாப்பில் அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.


குடாரப்புவில் தரையிறக்கப்படுவதற்கென வெற்றிலைக் கேணியில் இருந்து கடல்வழியே தமிழீழ விடுதலைப் புலிகள் பாரியளவிலான படை நகர்வொன்றை முன்னெடுத்தனர். கடற் புலிகளின் படகுகளில் 1200 வரையிலான தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள் தாழையடி முகாம் மீதிருந்து வரும் தாக்குதல்களையும் எதிர்நோக்கிச் செல்லும் சூழலிற்கு தள்ளப் பட்டும் மேலும் குடாரப்புப் பகுதியில் தரையிறங்கும் குறிக் கோளுடன் சென்றனர்.

ஈழப்போராட்ட வரலாற்றில் குறிப்பிட்டுச் சொல்லப்படவேண்டிய சாதனைகளில் இது முக்கியமானது. மிகப்பெரிய நாடுகளின் படைத்துறைக்கு ஈடான உத்தியுடனும் வளத்துடனும் ஒரு மரபுவழித் தரையிறக்கத்தை தமிழரின் விடுதலைச்சேனை நிகழ்த்தியிருந்தது. அதன்மூலம் வெல்லப்பட முடியாததாக பலராலும் கருதப்பட்ட மிகமுக்கிய படைத்துறைத் தளமான ஆனையிறவும் அதைச்சுற்றியிருந்த மிகப்பெரும் படைத் தளமும் புலிகளால் மீட்கப்பட்டது.

அறைகூவல்களை ஏற்றுச் சமர் செய்யக்கூடாதென்பது கரந்தடிப் போராளிகளுக்கான பொதுவிதி.

ஓயாத அலைகள் மூன்று என்ற தொடர் நடவடிக்கையில் முத லிரு கட்டங்களும் வன்னியின் தெற்கு மற்றும் மேற்குமுனை களில் முன்னேறியிருந்த படையினரை விரட்டி மிகப்பெரும் நிலப்பகுதி மீட்கப்பட்டிருந்தது. மூன்றாம் கட்டம் மூலம் வன்னி யின் வடக்கு முனையில் கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி உள்ளடக்கிய கடற்கரைப் பகுதிகள் கைப்பற்றப்பட்டன. அதைத் தொடர்ந்து பரந்தன் படைத்தளமும் கைப்பற்றப்பட்டது.

கைப்பற்றப்பட்ட கடற்கரைப் பகுதியிலிருந்து நாலாம் கட்டத் துக்கான பாய்ச்சல் தொடங்க இருந்தது.



'தரையிறங்கிய போராளிகளோடும் தன் மெய்க்காவலர்களோடும் விரக்களியாற்றின் சதுப்பு நிலத்தினூடாக விடியப்புறம்போல் இத்தாவில் சமர்க்களம் நோக்கி நகரும் கட்டளையாளர் கேணல் பால்ராஜ் அவர்கள். இப்படிமமானது ஈழத்தமிழரின் வரலாற்றுப் புகழ்மிக்க படிமமாகும்.'



26.03.2000 அன்று மாலை வெற்றிலைக்கேணிக் கடற் கரையில் போராளிகள் அணிவகுத்து நிற்கிறார்கள். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, ஈழப்போராட்டத்தில் பாரிய திருப் புமனையை ஏற்படுத்திய போரியற் சாதனையொன்றை நிகழ்த்த அவர்கள் ஆயத்தமாகி நின்றார்கள்.

வெற்றிலைக்கேணியிலிருந்து கடல்வழியாக எதிரியின் கட்டுப் பாட்டிலிருக்கும் தாழையடி உட்பட்ட மிகவலுவான கடற் கரையை மேவிச்சென்று குடாரப்புப் பகுதியில் புலிகளின் அணிகள் தரையிறங்க வேண்டும் தரையிறங்கிய அணிகள் ஆனையிறவுத் தளத்துக்கான முக்கிய வழங்கல் பாதையான கண்டிவீதியைக் குறுக்கறுத்து நிலைகொள்ள வேண்டும் என்பதே திட்டம்.

தரையிறக்கம் செய்யப்பட வேண்டிய படைத்தொகுதி மிகப் பெரியது. ஆயிரத்து இருநூறு வரையான போராளிகளை ஒரே யிரவில் தரையிறக்க வேண்டும். தரையிறக்கத்தைத் தடுக்க எதிரி அனைத்து வழிகளிலும் முயல்வான். கடலில் முழுக் கடற்படைப் வலுவோடும் எதிரி தாக்குவான். கடற்கரையி லிருந்தும் தகரிகள் மூலம் நேரடிச்சூடு நடத்தி கடற்புலிகளின் படகுகளை மூழ்கடிப்பான். விடிந்துவிட்டால் எதிரியின் வான் படையின் அகோரத் தாக்குதலையும் எதிர்கொள்ள வேண்டி வரும்.





மிக இடரான பணிதானென்றாலும் அதைச்செய்தே ஆக வேண்டும். கடற்புலிகள் அந்தப்பொறுப்பை ஏற்றுத் திறம்படச் செய்துமுடித்தனர். மாலை புறப்பட்ட படகு கலத்தொகுதி ஆழக் கடல் சென்று இரண்டு மணிநேரப் பயணத்தில் தரையிறங்க வேண்டிய பகுதியை அண்மித்தது. எதிர்பார்த்தது போலவே கடலில் கடுஞ்சண்டை மூண்டது. இரவு 8.30 க்கு கடலில் சண்டை தொடங்கியது. 16 டோறா அதிவேக சுற்றுக்காவல் படகுகள் அடங்கிய கலத்தொகுதியுடன் சண்டை நடந்தது. தாக்குதலணிகளைத் தரையிறக்கவேண்டிய படகுகளுக்கு எதுவித சேதமும் ஏற்படாவண்ணம் கடற்புலிகளின் சண்டைப் படகுகள் சமராடின.

கடுமையான சண்டைக்கிடையில் விடிவதற்குள் வெற்றிகரமாக அணிகள் கடற்கரையில் தரையிறக்கப்பட்டன. முதற்கட்டமாக தரையிறக்க அணிகளைக் காவிச் சென்ற ஏழு படகுகளும் வெற்றிகரமாக அணிகளைத் தரையிறக்கின. தரையிறங்கிய அணிகள் தொண்டமானாறு நீரேரியைக் கடந்து அதி காலைக்குள் கண்டிவீதியைக் குறுக்கறுத்து நிலைகொண் டனர். அவர்கள் தரையிறங்கிய நேரத்தில் ஏற்கனவே உட்புகுந் திருந்த கரும்புலிகள் அணி பளையிலிருந்த சேணேவித்தளத் தைக் கைப்பற்றி பதினொரு தெறோச்சிகளை செயலிழக்கச் செய்திருந்தனர்.



தரையிறங்கி நிலைகொண்ட அனைத்து அணிகளையும் கேணல் பால்ராஜ் நேரடியாக களத்தில் நின்று ஒருங்கிணைத்து வழிநடத்தினார். அவருக்குத் துணையாக துணைக் கட்டளை யாளர்களாக சோதியா படையணிக் கட்டளையாளர் துர்க்கா, மாலதி படையணிக் கட்டளையாளர் விதுசா, சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் கட்டளையாளர் (பின்னர் பிறிதொரு நேரத்தில் வீரச்சாவடைந்த) லெப். கேணல் ராஜசிங்கன், விக்ரர் கவச எதிர்ப்பணிக்குத் தலைமைதாங்கிக் களமிறங்கியிருந்த இளங்கீரன் ஆகியோர் செயலாற்றினர்.

புலிகள் இயக்கம் இப்படியொரு தரையிறக்கத்தைச் செய்யு மென்று யாரும் கனவிலும் நினைத்திருக்க மாட்டார்கள். இவ்வகையான முயற்சிகள் புலிகளின் சக்திக்கு அப்பாற்பட்டது என்பதோடு தற்கொலைக்கு ஒப்பானது என்றே எல்லோரும் கருதியிருந்தனர். உண்மையில் தற்கொலைக்கு ஒப்பானது தான். வன்னித் தளத்தோடு நேரடி வழங்கலற்ற நிலையில் பெருந்தொகைப் போராளிகள் எதிரியின் பகுதிக்குள் சிறிய



இடமொன்றில் நிலையெடுத்திருப்பது தற்கொலைக்கு ஒப்பானது தான். தரையிறங்கிய அணிக்கான உணவு வழங்கலைக்கூடச் செய்யமுடியாத நிலை.

கடலில் மிகக்கடுமையான எதிர்ப்பை எதிரி கொடுத்தான். தரையிறக்கம் தொடர்பான செய்தியை அறிந்தபோது முதலில் திகைத்தாலும், அவ்வளவு பேரையும் கொன்றொழிப்பது என்பதில் எதரி தெளிவாக இருந்தான். தன்னால் அந்தத் தரையிறக்க அணியை முற்றாக அழிக்க முடியுமென்று எதிரி நம்பினான். புலிகளின் போரிடும் வலுவுள்ள முக்கிய அணிகள் அங்கிருந்ததும், முக்கியமான சமர் கட்டளையாளர்கள் அங்கிருந்ததும் அவனுக்கு வெறியேற்றியது. அந்தத் தரையிறக்க அணியை முற்றாக அழித்தால் புலிகளின் கதை அத்தோடு முடிந்துவிடுமென்று கணித்திருந்தான்.

வெற்றிலைக்கேணியிலிருந்து குடாரப்பு வரை அரச படையினரின் மிகவலுவான படைத்தளப் பகுதியாக இருந்தது. தரையிறக்கத்தின் முன்பே, கடல்வழியான தொடர்ச்சியான வழங்கல் சாத்தியப்படாதென்பது தெளிவாக உணரப்பட்டது. ஆகவே தரைவழியாக வழங்கலை ஏற்படுத்தவேண்டுமென்பதே நியதி. அதன்படி வெற்றிலைக்கேணியிலிருந்து கடற்கரை வழியாக குடாரப்பு வரை நிலத்தைக் கைப்பற்ற வேண்டும். தரையிறங்கிய அடுத்தநாளே தாளையடி, மருதங்கேணி, செம்பியன்பற்றுப் பகுதிகளைக் கைப்பற்றி குடாரப்பு வரை தொடர்பை ஏற்படுத்தும் சமர் தொடங்கிவிட்டது.





இத்தாவில் போர்க்களத்தில், போராளிகள் தமது உயிர் கொண்டு தகர்த்த எதிரிக் கவசவாகனமொன்றைப் பாதுகாத்து வரலாற்றிற்கு அறிவிப்பதற்காக அமைக்கப்பட்ட காப்பகம்

இத்தாவில் பகுதியில் கண்டிவீதியைக் குறுக்கறுத்திருந்த புலியணிகளை முற்றாக அழிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டிருந்த எதிரிப்படையோடு கடும் சண்டை நடைபெற்றுக்கொண்டிருந்த நேரத்தில், இத்தாவிலில் நிலைகொண்டிருக்கும் படையணிக்கு வழங்கலை ஏற்படுத்த புலியணிகள் கடுமையான சண்டையைச் செய்தன. இரண்டுநாள் எத்தனிப்பின் முடிவில் தாளையடி உட்பட்ட மிகவலுவான படைத்தளங்களைக் கைப்பற்றி தரையிறக்க அணிக்குரிய தரைவழியான வழங்கலை உறுதிப்படுத்திக்கொண்டனர் புலிகள்.

அதுவரை சரியான வழங்கலை, இருந்தவற்றை மட்டும் பயன்படுத்தி நிலத்தைத் தக்கவைத்துக்கொண்டிருந்த தரையிறக்க அணி ஆசுவாசப்படுத்திக்கொண்டது. அணிகள் சீராக்கப்பட்டு தொடர்ந்து சண்டை நடந்தது. கண்டிவீதியைக் குறுக்கறுத்திருக்கும் புலிகளை முற்றாக அழிப்பதற்கு எதிரி தனது முழு வளத்தையும் பயன்படுத்தினார். கவசவூர்திகள், சேணேவிகள், படையணிகள் என்று அனைத்தையும் பயன்படுத்தினான். மிகமிக முரட்டாகத் தாக்கினான். ஆனாலும் புலிவீரரின் அஞ்சாத எதிர்ச்சமரில் தோற்றோடினான்.

கவசப்படைக்குரிய பல ஊர்திகள் அழிக்கப்பட்டன சேதமாக்கப்பட்டன. புலியணி நிலைகொண்டிருந்த பகுதி சிறியதாகையால் மிகச்செறிவான சேணேவிச்சூட்டை நடத்துவது எதிரிக்கு இலகுவாக இருந்தது. புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டபின் அவ்வழியால் சென்றவர்கள் அப்பகுதியைப் பார்த்திருப்பர். அழிக்கப்பட்ட கவசவூர்திகள் வீதியோரத்தில் நிற்பதையும் இத்தாவில் பகுதியில் ஒருதென்னைகூட உயிரோடின்றி வட்டுக்கள் அறுக்கப்பட்டு மொட்டையாக நிற்பதையும் காணலாம். அவ்வளவுக்கு அகோரமான குண்டுத்தாக்குதல் புலியணிமீது நடத்தப்பட்டது. ஆனாலும் அப்பகுதியைத் தொடர்ந்து தக்கவைப்பதில் உறுதியாக இருந்து வெற்றியும் கண்டனர் புலிகள். ஆனையிறவுத்தளம் முற்றாகக் கைப்பற் றப்படும்வரை முப்பத்துநான்கு நாட்கள் இத்தாவில் பகுதியில் நிலைகொண்டு அதைத் தக்கவைத்துக்கொண்டனர் தளபதி பால்ராஜின் தலைமையிலான புலியணியினர்.



தரையிறங்கிய சிலநாட்களுக்குள் ஆனையிறவைக் கைப்பற்றும் முயற்சியொன்றைப் புலிகள் மேற்கொண்டு அது தோல்வியில் முடிவடைந்தது. பின்னர் சிலநாட்களில் வேறொரு திட்டத்தைப் போட்டு மிக இலகுவாக, மிகக்குறைந்த இழப்புடன் ஆனையிறவுப்பெருந்தளம் முழுவதையும் கைப்பற்றிக் கொண்டனர் புலிகள். இயக்கச்சியைக் கைப்பற்றியதோடு தானாகவே எதிரிப்படை ஆனையிறவிலிருந்து தப்பியோடத் தொடங்கிவிட்டது. ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட பின்வாங்கல் போலன்றி அனைவரும் தங்கள்தங்கள் பாட்டுக்குச் சிதறியோடினர். தாம் பயன்படுத்திய தெறோச்சிகள் முழுவதையும் கூட அழிக்க முடியாத கெதியில் விட்டுவிட்டு ஓடினர். அவர்களுக்கு இருந்த ஒரே பாதையான ஆனையிறவு - கிளாலி கடற்கரைப்பாதை வழியாக ஓடித்தப்பினர்.



ஆனையிறவிலிருந்து கிளாலிநோக்கித் தப்பியோடும் படையினரைத் தாக்கும் எமது கனரக ஆயுத அணி



முடிவில் ஆனையிறவு தமிழர்களிடம் வீழ்ந்தது. ஆனையிறவு மட்டுமன்றி மிகப்பெரும் நிலப்பகுதி - கண்டிவீதியில் முகமாலை வரை - கிழக்குக் கடற்கரையாகப் பார்த்தால் சுண்டிக்குளம் முதல் நாகர்கோவில்வரை என்று மிகப்பெரும் நிலப்பகுதி மீட்கப்பட்டது. அனைத்துக்கும் அடியோசையாக இருந்தது அந்தத் தரையிறக்கம்தான்.

சிங்களப்படையே அப்படியொரு தரையிறக்கத்தைச் செய்ய முனையாது. 1996 இல் அரசபடையால் அளம்பிலில் அவ்வாறு செய்யப்பட்ட தரையிறக்கமொன்று பெருத்த தோல்வியில் முடிவடைந்து படைத்துறை மீண்டும் தப்பியோட நேரிட்டது. ஆனால் புலிகள் மிகவெற்றிகரமாக படையணிகளைத் தரையிறக்கி ஒருமாதத்துக்கும் மேலாக மிகக்கடுமையான எதிர்த் தாக்குதலைச் சமாளித்து நிலைகொண்டிருந்ததோடு இறுதியில் எதிரியை முற்றாக வெற்றிகொண்டனர்.

கரு: கரும்புலிகளால் பளையில் 11 தெறோச்சிகள் அழிக்கப்பட்டமை.







26.03.2000 அன்று இரவு விடுதலைப்புலிகளின் சிறிய அணியொன்று மெதுவாக நகர்ந்துகொண்டிருக்கிறது. முதல்நாளே கடல்வழியாக எதிரியின் பகுதிக்குள் ஊடுருவிவிட்டிருந்தனர் அவ்வணியிலுள்ளவர்கள். அதுவொரு கரும்புலியணி. ஆண் போராளிகளும் பெண்போராளிகளும் அதிலிருந்தனர். அவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள பளையை அண்டிய பகுதியில் கமுக்கமாக நகர்ந்துகொண்டிருக்கின்றனர். அப்போது ஆனையிறவு எதிரியின் வசமிருந்தது. அன்று இரவுதான் வரலாற்றுப் புகழ்மிக்க குடாரப்புத் தரையிறக்கம் நடைபெற இருந்தது. இவர்கள் நகர்ந்துகொண்டிருக்கும் அதேநேரத்தில் கடலில் தரையிறக்க அணிகளைக் காவியபடி கடற்புலிகளின் படகுகள் நகர்ந்துகொண்டிருந்தன.

குறிப்பிட்ட கரும்புலி அணிக்குக் கொடுக்கப்பட்ட பணி, பளையிலுள்ள பாரிய சேணேவித்தளத்தை அழிப்பதுதான். பின்னொரு சமரில் வீரச்சாவடைந்த கரும்புலி மேஜர் வர்மனின் தலைமையில் அவ்வணி பளை சேணேவித்தளத்தை நோக்கி நகர்ந்துகொண்டிருந்தது. முழுவதும் எதிரியின் கட்டுப்பாட்டுப் பகுதி. எந்தநேரமும் எதிரியோடு முட்டுப்பட்டு சண்டை மூளக்கூடும். இயன்றவரை அவ்வணி இடையில் வரும் சண்டைகளைத் தவிர்க்கவேண்டும். இலக்குவரை வெற்றிகரமாக, சலனமின்றி, எதிரி அறியாவண்ணம் நகரவேண்டும். அவ்வணியில் மொத்தம் பதினொருபேர் இருந்தார்கள்.

குறிப்பிட்ட சேணேவித்தளம் வரை அணி வெற்றிகரமாக நகர்ந்தது. நீண்டநாட்களாக துல்லியமான வேவு எடுத்திருந்தார்கள். அதுவும் தற்போது அணியை வழிநடத்திவரும் வர்மனும் ஏற்கனவே வேவுக்கு வந்திருந்தான். எனவே அணியை இலகுவாக இலக்குவரை நகர்த்த முடிந்தது. சேணேவித்தளத்தின் சுற்றுக்காவலரண் தொடருக்கு மிக அருகில் வந்துவிட்டார்கள். இனி சண்டையைத் தொடக்கி காவலரணைத் தகர்த்து உள்நுழையவேண்டியதுதான். இந்தநிலையில் காவலரணிலிருந்து 25 மீற்றர் தொலைவில் அணியினர் இருக்கும்போது எதிரியே சண்டையைத் தொடக்கிவிடுகிறான். தடைக்குள்ளேயே அவ்வணியின் முதலாவது வீரச்சாவு நிகழ்கிறது. கரும்புலி மேஜர் சுதாஜினி என்ற வீராங்கனை முதல்வித்தாக விழுந்துவிட்டாள்.

சண்டை தொடங்கியதும் கரும்புலியணி உக்கிரமான தாக்குதலைத் தொடுத்துக்கொண்டு காவரணைக் கைப்பற்றுகிறது.









மின்னல்வேக அதிரடித் தாக்குதலில் எதிரி திகைத்து ஓடத் தொடங்குகிறான். தாக்குதல் நடத்துவது பத்துப்பேர் கொண்ட சிறிய அணியென்பதை அவன் அனுமானிக்கவில்லை. சேணேவித்தளத்தை காத்து நின்ற நூற்றுக்கணக்கான தரைப் படையினரும் சண்டை தொடங்கிய மறுநிமிடமே ஓட்டமெடுத்து விட்டனர். சேணேவித்தளம் எஞ்சியிருந்த பத்துப்பேர் கொண்ட அணியிடம் வீழ்ந்தது.

சேணேவிகள் முழுமையாகக் கைப்பற்றப்பட்டன. மொத்தம் பதினொரு தெறோச்சிகள் இருந்தன. ஓடிய எதிரி வலுவைத் திரட்டிக்கொண்டு மீண்டும் தளத்தைக் கைப்பற்ற வருவான். இருப்பதோ பத்துப்பேர் மட்டுமே. இது தாக்கியழிப்பதற்கான அணி மட்டுமே. மீண்டும் கைப்பற்றவரும் எதிரியோடு சண்டைபிடிக்க முடியாது. ஆனாலும் போதுமான நேரம் இருந்தது. எதிரி உடனடியாக தளத்தைக்கைப்பற்ற முனையவில்லை. குறிப்பிட்டளவு நேரம் தளத்தைக் கட்டுப்பாட்டுள் வைத்திருந்து பின்னர் தலைமைப்பீட அறிவுறுத்தலின்படி தெறோச்சிகளைச் செயலிழக்கச் செய்யத் தொடங்கினார்கள். இந்த நடவடிக்கையில் கரும்புலி மேஜர் தனுசன் வீரச்சாவடைந்தான். பதினொரு தெறோச்சிகளையும் செயலிழக்கச் செய்துவிட்டு எஞ்சிய ஒன்பதுபேரும் பாதுகாப்பாகத் திரும்பினர். தெறோச்சிகள் அழிக்கப்பட்டுக்கொண்டிருந்தபோது குடாரப்புவில் தரையிறக்கம் நிகழ்ந்தது. அச்சேணேவித்தளம் அழிக்கப்பட்டது தரையிறங்கிய அணியினருக்கான உடனடி எதிர்ப்பை இல்லாமல் செய்தது.




தளத்தை அழித்த கரும்புலியணி மீண்டும் எதிரியின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள்ளால் கமுக்கமாக நகர்ந்து விடிவதற்குள் பாதுகாப்பாக தளம் திரும்பினர்.

பளை சேணேவித்தள அழிப்பு ஆனையிறவு மீட்புப்போரில் மிகப்பெரிய திருப்புமுனை. எதிரிக்கு மிகப்பெரிய பாதிப்பை உண்டுபண்ணியது. இந்த அழிப்போடு தரையிறக்கமும் ஒன்றாக நிகழ்ந்ததால் எதிரி மிகவும் குழம்பிப்போனதோடு உடனடியான எதிர்வினையை அவனால் செய்யமுடியவில்லை. தன்னை மீள ஒழுங்கமைத்து தாக்குதல் தொடங்க குறிப்பிட்ட அமையம் தேவைப்பட்டது.

**திட்டம்**

குறிப்பு: இது விடுதலைப்புலிகளால் வெளியிடப்பட்ட புத்தகங்கள் மற்றும் கட்டுரைகளில் இருந்து கிடைத்த தகவலின் அடிப்படையிலும் அவர்களின் நகர்வுப் பாதைகளையும் வைத்து என்னால் எழுதப்பெற்றதாகும். இதை வாசிப்பதன் மூலம் உங்களுக்கு குடாரப்புத் தரையிறக்கத்தின் திட்டம் பற்றிய ஒரு மேலோட்டமான கருத்துரு கிடைக்கும்.

சிறீலங்கா படைத்துறையால் வல்வளைக்கப்பட்டிருந்த ஆனையிறவில் இருந்த கூட்டுப் படைத்தளத்தினைக் கைப்பற்றி விடுவிப்பதற்காக குடாரப்பில் தரையிறங்கி அங்கிருந்து வெற்றிலைக்கேணி வரை வேகமான தரைத்தொடர்பினை ஏற்படுத்தும் அதே வேளை இந்திரபுரப்பகுதியில் இருந்த ஏ9 வீதியினை ஊடறுத்து, துண்டெடுத்து, ஆனையிறவிற்கான முக்கிய வழங்கல் பாதையினை துண்டித்து ஆனையிறவை விடுவிப்பதே திட்டமாகும்.

இப்படியான ஒரு தற்கொலைக்கு ஒப்பான அதியுச்ச திகைப்பூட்டும் திட்டத்தினை சிங்களப்படைகள் ஒருகாலும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள் என்பதை புலிகள் நன்கறிந்திருந்தனர். ஆகையால்தான் இதனை துணிந்து தேர்ந்திருந்தனர்.


இதற்கமைவாக மேற்குறிப்பிட்ட படையணிகளில் இருந்து தேரப்பட்ட 1200 பேர் கொண்ட தரைப்புலி படைத்தொகுதி ஆயத்தப் படுத்தப்படுவர். இவர்கள் பல்வேறு இடங்களிலிருந்து சுண்டிக்குளம் கடனீரேரிக்கு கொண்டுவரப்படுவர். அங்கிருந்து கட்டைப் படகுகள் மூலம் 3 கிமீ தாண்டியிருந்த, நான்கைந்து மாதங்களுக்கு முன்னர் சிறீலங்காப் படைகளிடமிருந்து மீட்கப்பட்ட ஓரிடத்திற்கு ஏற்றிப்பறிக்கப்படுவர். அங்கிருந்து சிலர் நடந்தும் சிலர் உழுபொறிகள் மூலமும் 10கிமீ பயணித்து கட்டைக் காட்டினை அடைவர். அங்குவைத்து இவர்களுக்குத் தேவையான அனைத்து அறிவுரைகளுக்கும் புலற்றப்படும். தேவையான மேலதிக பொருட்கள் - மூன்று நாட்களுக்குத் தேவையான உலருணவுகள், இனிப்புகள், அன்றைய மதிய உணவு - வழங்கப்படும். அங்கிருக்கும் புலிவீரர்களின் அணித் தலைவர்கள் முன்னரே கடற்கரைக்கு அழைத்துச்செல்லப்பட்டு படகேறும் பயிற்சிகள் வழங்கப்படும். பின்னர் இவர்கள் உழுபொறிகள் மூலம் வெற்றிலைகேணி கோவிலடி கடற்கரைக்கு ஏற்றிப்பறிக்கப்படுவர்.

அங்கிருந்து ஏற்கனவே அணியமாகவுள்ள தரையிறக்கப் படகுகளாக மாற்றப்பட்டிருந்த உப்பயான விதம் மற்றும் புளூசுரார் விதம் ஆகிய கட்டைப்படகுகளில் கடற்புலிகளால் ஏற்றப்பட்டு தாழையடி தானைவைப்பு மீதிருந்து வரும் தாக்குதல்களையும் கடலில் டோறாக்களின் தாக்குதல்களையும் சமாளித்தவாறு கரையோர காவலரண்களை மேவிக்கடந்து, 13 கிமீ பயணித்து, குடாரப்பு-மாமுனை கடற்கரையில் கனவகை படைக்கலன்களுடன் தரையிறக்கப்படுவர், சாள்ஸ் சிறப்பு கடற் தாக்குதல் அணியினரால்.

கடல்வழி நகர்வின்போது கடற்சமர் மூண்டு படகுகளுக்கு நேர்ச்சிகள் ஏற்பட்டு மூழ்கும் சமயத்தில் படகினில் இருப்பவர்களில் பெரும்பாலானோருக்கு நீச்சல் தெரியாதலால் அவர்கள் இலகுவாக நீந்திக் கரைசேர்வதற்கு ஏற்றவாறு கடற்புலிகள் படகுகளை கரையினை அண்டியவாறே ஓட்டிச்செல்லுதல் வேண்டும்.

பின்னகர்த்த புலிகளின் தாக்குதலணியொன்று உதவிக்கு அனுப்பப்படும். அது வர ஏலாமல் போக்கும் சமயத்தில் அங்கிருக்கும் தெறோச்சிகளை வெடிபொதிகள் மற்றும் கான் சார்ச்சுகள் கொண்டு அழிப்பதன் மூலமும் தளத்தினுள் இருந்த எறிகணைகளை வெடிவைத்து தகர்ப்பதன் மூலமும் சேணேவித்தளத்தினை பல மணிநேரத்திற்கு மீளப் பயன்படுத்த முடியாத நிலைக்கு செயலிழக்கச் செய்வர். இதனால் தரையிறங்கப் போகும் அணிகளுக்கு உடனடி சேணேவித் தாக்குதல் ஏதும் நிகழாமல் அவர்கள் பாதுகாப்பாக தரையிறக்கப்படுவர். பின்னர் கரும்புலி அணியினர் பாதுகாப்பாக தளந் திரும்புவர்.

பேரணி தரையிறக்கப்படுவதற்கு முன்னர், தலையணியாகிய சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் ஓரணியானது 7 படகுகளில் முன்சென்று தரையிறங்கி, வேகமான மெள்ளத்தில் சதுப்பு நிலத்தைப் பூகோள அமைவிடமாகக் கொண்ட கடனீரேரி வழியாக சுமார் 10 கிமீ தொலைவை இரவின் துணையுடன் நடந்து கடந்து, இத்தாவில் பகுதியில் சச்சரவில்லாமல் கமுக்கமாக நிலைகொள்ள வேண்டும். நிலைகொள்வோர் ஈரணியாகி, தென்மராட்சியில் புதுக்காட்டுச் சந்திக்கும் பளைக்கும் நடுவே இருந்த பகுதியில், தொண்டைமானாறு நீரேரிக் கரைப் பக்கம் 2கிமீ அகலத்தையும், யாழ் நெடுஞ்சாலைப் பக்கம் 800மீ அகலத்தையும், மொத்தமாக 4கிமீ நீளத்தையும் கொண்டு தொண்டைமானாறு நீரேரிக்கு முதுகையும் கிளாலி கடலிற்கு முகத்தையும் காட்டியபடி "நாக்கு" வடிவில் இத்தாவில்-



தரையிறக்கமானது சூரிய உதயத்திற்கு முன்னர் நடந்தேறியிருக்க வேண்டும். இல்லையேல் பகல் பொழுதில் சிங்கள வான்படையின் தாக்குதல்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கும்; இதனால் பாரிய இழப்புகளை சந்திக்க வேண்டியிருக்கும் என்பது முக்கியமாக கருத்திலெடுக்கப்பட்டிருந்தது.

தரையிறங்குவோர் செல்லும் படகுகளில் எந்தவொரு எதிர் தாக்குதல் செய்யும் வசதிகளும் இல்லாமையால் இவர்களுக்கு சேமமாக கடற்புலிகளின் 7 சண்டைப்படகுகளும் செல்லும். கடற்புலிகளுக்கு எவ்வளவுதான் இழப்புகள், உயிர்சேதங்கள் ஏற்பட்டாலும் தரையிறக்கப்படுவோருக்கு சிறு கீறலும் இல்லாமல் இறக்கப்பட வேண்டும். அதுவே தேசியத் தலைவரின் ஆணையாகவும் இருந்தது.

இவற்றிற்கிடையில் மற்றுமொரு அதிரடித் தாக்குதலும் நடந்தேறும். பளைப்பகுதியில் சிங்களப் படைகள் அமைத்திருந்த சேணேவித்தளமான "ஆட்டிவத்த" (தமிழில்: சேணேவி வத்தை) மீது 11 பேர் (5 ஆண்கள் 6 பெண்கள்) கொண்ட கரும்புலி அணி மூன்று குழுக்களாகப் பிரிந்து மின்னல்வேகத் தாக்குதல் நடத்தி கைப்பற்ற வேண்டும். இதற்காக அவர்கள் முன்னொரு நாளில் கடல்வழியாக உப்பயானங்கள் மூலம் உட்கொண்டுசெல்லப்பட்டு பின்னர் தரைவழியாக ஊடுருவி நகர்ந்து பதுங்கியிருப்பர். கைப்பற்றிய பின்னர் தெறோச்சிகளை

இந்திரபுரத்தில் இருந்த ஏ9 வீதியில் நிலையெடுக்க வேண்டும். நிலையெடுப்போரில் ஓரணி பளையிலிருந்த பாரிய தளத்தினை பார்த்தவாறும் மற்றைய அணி முகமாலையிலிருந்த பாரிய தளத்தினை பார்த்தவாறும் உள்தடுப்பு, வெளித்தடுப்பு அரண்களமைத்து நிலைகொள்ள வேண்டும். இந்த கமுக்கமான தொடக்க நகர்வின் வெற்றியில்தான் ஏனைய நகர்வுகள் தங்கியிருந்தன.

தலையணி நிலைகொள்ளும்போது பேரரையர் பால்ராச்சும் ஏனையோரும் தரையிறக்கப்படுவர்;பட்டிருப்பர். தரையிறங்கியோரில் பேரரையர் பால்ராஜ் தலைமையிலான 4 குழாங்கள் (Company) முழுதாக வெயில் வருவதற்குள் 2 கிமீ தரைவழியாகவும், பின்னர் 2 கிமீ விரக்களி ஆற்றினூடாகவும் பேந்து கண்டல் பற்றைகள், சதுப்பு நிலங்களைக் கடந்து இத்தாவில் அடைந்து அங்குள்ள அணியோடு கைகோர்க்க வேண்டும்.

இவர்களுக்கு முன்னரே தரையிறங்கும் சிற்றரையர் மறைச்செல்வன் தலைமையிலான கரும்புலிகள் அணியானது இயக்கச்சி, கொடிகாமம், பளை ஆகிய இடங்களில் உள்ள சேணேவித் தளங்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் இன்னபிற பணிக்கப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். ஏனையோர் இறங்கியவுடன் அருகில் இருக்கும் மாமுனையில் உள்ள தானைவைப்பினை அழிக்க வேண்டும். பின்னர் அங்கு ஒரு

கட்டளைப்பீடம் அமைக்க வேண்டும்.

சம நேரத்தில் நாகர்கோவில் படைத்தளத்தை பார்த்தவாறு நாகர்கோவில் தெற்கின் வடதிசையில் ஓரணியும், முகமாலை-கிளாலியினை பார்த்தவாறு மற்றொரு ஓரணியும், இத்தாவில் பெட்டிக்குச் செல்லும் எஞ்சிய வழி மூடிடாதபடி பளையை பார்த்தவாறு பிறிதொரு அணியும் உள்தடுப்பு அரண்கள் அமைத்து நிலைகொள்ள வேண்டும். ஏனைய அணிகள் செம்பியன் பற்றினைக் கைப்பற்றி தாழையடியினை வசமாக்கிடும் பணியில் ஈடுபட வேண்டும். அதேநேரம் ஊடறுக்கப்பட்ட கண்டி வீதிக்குச் செல்வோர் சிங்களம் ஏற்படுத்தும் மாற்று வழங்கல் பதையான கறுக்காய்தீவு - புலோப்பளை உள்ளடங்கிய ஒடுங்கிய கிளாலி-கச்சாய்-சாவகச்சேரி வீதி மீதும் எறிகணைத் தாக்குதல் செய்ய வேண்டும்.

தாழையடி என்பது மிகவும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தளமாகும். ஏனெனில் இவ்வாறு தரையிறக்கப்பட்டோரை மீள எடுப்பது ஏலாத காரியமாகும். அதனால் அவர்கள் தரைவழியாகவே வந்து சேரவேண்டும் என்பதும் மிக முக்கியமாக இருந்தது. அதற்கு தடையாக இருந்த தாழையடி தளத்தினைக் கைப்பற்றி வன்னியோடான தரைவழிப்பதை திறத்தலே ஒரே தீர்வாகும்.

தரையிறக்கப்படுவோருக்கு தரைவழி வழங்கல் ஏதுமற்ற நிலையில் முழு வழங்கலும் கடல் வழியாகவே நடைபெறும். கடல் வழங்கல்கள் பாரிய கடற்சமர்களுக்கும் வான் தாக்குதல்களுக்கும் முகம் கொடுத்துதான் வந்து சேர வேண்டும். ஆனாலும் தடங்கலின்றி நடைபெறவேண்டும். தொடர் கடல்வழி வழங்கல் சீராக இருக்கப்போவதில்லை என்பதால் தரையிறங்கியோர் தரைவழி வழங்கல் பாதை ஒன்றினை இயன்றளவு கெதியாக ஏற்படுத்த வேண்டும்.



தரைவழி பாதையினை திறப்பதற்காக பேரரையர் தீபன் தலைமை யிலான மற்றொரு படைத்தொகுதியில் சூட்டி தரைத் தாக்குதல் அணி, ஜெயந்தன் படையணியின் ஒரு பிரிவு, விக்டர் கவச எதிர்ப்புப் படையணி உட்பட்ட இம்ரான்-பாண்டியன் படையணியின் சில பிரிவுகள், சிறப்புப்படை ஆகியவற்றுடன் ராதா விமான எதிர்ப்பு அணியும் உதவிக்கு புலனாய்வுத்துறை தாக்குதலணியும் இணைந்து கட்டைக்காட்டில் இருந்து முன்னேறி உடுத்துறை, ஆழியவளை ஆகியவற்றைக் கடந்து தெற்குப் பகுதியில் இருந்து தாழையடியை இரவு நேரத்தில் தாக்கி நெருக்க வேண்டும். இவர்களுக்கு உதவியாக கடலில் இருந்து கரையோரக் காவலரண்கள் மீது கடற்புலிகள் தாக்க வேண்டும். சமநேரத்தில் வடகில் இருந்து தரையிறங்கிய அணிகள் தாழையடியினை தாக்கி நெருக்க வேண்டும். அதே சமயம் சிறப்புப்படையினர் பல குழுக்களாக படைத்தளத்தினுள் ஊடுருவி முக்கிய தாக்குதல்கள் நிகழ்த்த தாழையடி தமிழர் வசமாகும்.

பேந்து, மருதங்கேணிச் சந்தியில் இருக்கும் சிங்களப் படைத்தளத்தினையும் வீழ்த்திட வேண்டும். அதன் பின்னரே குடாரப்பில் தரையிறங்கியோருக்கான தொல்லையில்லா தரைவழிப் பாதை உடுத்துறை வழியாக திறக்கும். அதன் பின்னர் வடமராட்சி கிழக்கில் சமராடிய போராளிகள் ஏனைய சமர்க்களங்கள் நோக்கி நகர வேண்டும்.

இதுவே தரையிறக்கத்தோடான தாக்குதல் திட்டம் ஆகும்.

இவ்வாறாக 2ம் உலகப்போரில் நோர்மண்டியில் நேசநாட்டுப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட தரையிறக்கமானது எவ்வாறு போரின் போக்கில் பெரும் மாற்றத்தினை ஏற்படுத்தி ஒரு முழு படைத்துறை வெற்றியினை அவர்களுக்கு ஈட்டிக் கொடுத்ததோ அதுபோலவே இதுவும் இருக்கும் என்றும் அவர்கள் நம்பினர். அவர்கள் நம்பினது போலவே படைவலுச் சமநிலை மாறி மாபெரும் வெற்றியினை ஈட்டிக்கொடுத்தது மட்டுமல்லாது உலகின் பெரும் வல்லரசுகளின் பார்வையையும் தமிழர் பக்கம் திருப்பியது என்பது மறுக்கவியலா உண்மைகளாகும்.

வத்திராயன் பொக்ஸ் - வத்திராயனில் உள்ள ஒரு சமரணியின் தலைமையகத்தையும் முள்ளியானில் உள்ள படைத்தொகுதி தலைமையகத்தையும் உள்ளடக்கிய தானைவைப்பிற்கு சிறீலங்கா படைத்துறை அதிகாரிகள் “வத்திராயன் பொக்சு” என்று பெயரிட்டனர். முள்ளியான் மற்றும் வண்ணான்குளம் கரையோரச் சிற்றூர்களுக்கு இடையில் நீண்டு செல்லும் இச் செவ்வகப் பரப்பானது 3 கிமீ நீளமும் 2 கிமீ அகலமும் கொண்டது ஆகும்.


**சமர்க்கள விரிப்புகள்; முன்னேற்பாடுகள்**







அடுத்து, தரையிறக்கத்திற்கு முன்னர் என்வெல்லாம் நடந்தன என்பதை பற்றிப்பார்போம். இது பற்றிய தகவல்கள் யாவும் “வேருமாகி விழுதுமாகி” என்ற மாலதி படையணியின் வரலாறு கூறும் நூலில் இருந்து எடுத்துள்ளேன். இவற்றை வாசிப்பதன் மூலம் அற்றைய தரையிறக்கத்திற்கான முன்னேற்பாடுகள் எப்படி இருந்தன என்பதை அறியமுடிவதோடு, அவர்களின் அனுபவங்கள் எப்படியெல்லாம் இருந்தன என்பதையும் நாம் அறியலாம்.




“வேருமாகி விழுதுமாகி” பக்கங்கள்: 349-353

வரலாற்றுச் சிறப்புமிக்க தரையிறக்க நடவடிக்வகைக்கான கடின பயிற்சி அது. ஏனைய படையணிகளுடன் எமது படையணியின் இரு கொம்பனிகள் பயிற்சி பெற்றுக்கொண்டிருந்தன. மகளிர் படையணிகளின் பயிற்சி நடவடிக்கைக்குப் பொறுப்பாக சுகி நின்றார். எமது படையணிக்கான ஒன்றுகூடல் முடிந்த சில நாட்களிலேயே தரையிறக்கச் சமருக்கான பயிற்சி நடவடிக்கை தொடங்கப்பட்டு விட்டதால், ஐமுனாவின் கொம்பனியே முதலில் பயிற்சிக் கல்லூரிக்கு அனுப்பப்பட்டது. கல்லூரியைச் சுத்தப் படுத்தும் வேலையும் ,வர்களுக்கே கிடைத்து.

2000.03.01அன்று அணிகளுக்கான பயிற்சி ஆரம்பிக்கப் பட்டது. பரந்த வெளியில் புலிக்கொடி கம்பிரமாக ஏறிப்பறக்க, தொடங்கப்பட்ட பயிற்சிகள் குறுகியகாலத்திலேயே வேகமெடுத்தன. மன்னார் பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த தர்சாவின் கொம்பனியும் சில நாட்களின் பின்னர் கல்லூரிக்கு அனுப்பப்பட்டுப் பயிற்சியில் இணைக்கப்பட்டது. தடையணிகள், உள்நுழைந்து தாக்கும் அணிகள் என ஒவ்வொருவரும் தத்தமது கடமைகளுக்கேற்றவாறு பயிற்சியினைப் பெற வர்ணா, புரட்சிகா, செய்மதி, பிருதுவி, அங்கயற்கண்ணி ஆகியோரால் எமது அணிகளுக்குரிய பயிற்சிகள் வழங்கப்பட்டுக்கொண்டிருந்தன.

2000.03.25 அன்றைய மாலைப் பொழுதில், பயிற்சியை முடித்துக்கொண்ட எமது படையணியின் இருகொம்பனிகளும் உழவு இயந்திரங்களில் ஏறி ஒரு நீரேரிக்கு அண்மையில் இறங்கினோம். பழுப்பு நிறக் கரையையும், இடையிடையே பச்சைக்குடை விரித்ததுபோல் அடர்ந்த தாவரங்களையும் கொண்ட அந்நீரேரிதான் “சுண்டிக்குளம் நீரேரி” என அங்கு படகு வைத்துக்கொண்டு நின்ற ஓட்டி ஒருவர் சொன்னார். அந்த அழகிய நிரேரியைச் சிறிய படகுகள்மூலம் கடந்தோம். கத்தரிநீல நிறப் பூக்களைக்கொண்ட புற்கூட்டம் சிறுசிறு தீவுகளைப்போலப் பரந்திருந்தது அந்த அழகினை இரசித்தவாறே உல்லாசப் பயணத்துக்குச் செல்கின்ற உணர்வுடன் கரையை நெருங்க, எறிகளை வீச்சிலே வீழ்ந்து கிடந்த மரங்களும், ஆழத் தோண்டப்பட்டிருந்த குழிகளும் திடீரென இறுக்கமான ஓர் உணர்வை மனதில் தோற்றுவித்தன.





கரையில் உழவு இயந்திரங்கள் எமக்காகக் காத்திருந்தன மீண்டும் உழவு இயந்திரப் பயணம் தொடர, கட்டைக்காடு எம்மை வரவேற்றது. ஈச்சம் பற்றைகளும் புல்வெளிகளும், பல்வகை மரங்களுமாக இணைந்த அப்பகுதி நாலைந்து மாதங்களின் முன்புதான் சிறீலங்காப் படைகளிடமிருந்து எம்மால் மீட்கப்பட்டிருந்தது என்பதால், படையினர் விட்டுச் சென்ற தடங்களெதுவும் மாற்றமுறாமல் அப்படியே இருந்தன. இரவில் அங்கு சென்ற நாம், மறுநாள் காலையில் ஒன்று கூட்டப் பட்டடோம்.

பரந்த வெளியொன்றில் அனைத்து அணிகளும் வரிசையதாய் நின்ற காட்சி ஓர் வேகத்தை ஏற்படுத்தியது. மரங்களுக்கு மேலால் உயர்ந்த சூரியனின் கதிர்கள் சூரியக் குழந்தைகளைத் தொட்டுத் தழுவ, எமது இயக்கத்தின் மேன்மைமிகு குறிக்கோளை நிறைவேற்றுவதற்கான உறுதியுரையை முடித்துக்கொண்டோம். தரையிறக்கத் தாக்குதலை வழிநடத்தும் தளபதிகள் அனைவரும் சண்டைபற்றி உரை நிகழ்த்தினர். தலைவர் அவர்கள் எதிர்பார்க்கின்ற வெற்றியைப் பெறவேண்டியதன் தேவை எல்லோர் மனங்களையும் மீணடும் நிரப்பியது.

பின்னர், தாக்குதல் நடவடிக்கைக்கான மேலதிக பொருட்கள், உலர் உணவுகள் என்பன எங்களுக்கு வழங்கப்பட்டன. தமது பணியை இலகுபடுத்துவதற்காகத் தேவையானவற்றை முற்கூட்டியே தயார்ப்படுத்தும் பணியில் அணித்தலைவர்கள் ஈடுபட்டிருக்க, தரையிறக்கச் சமர் நடவடிக்கைக்குத் தாம் தெரிவு செய்யப்பட்டது குறித்த மகிழ்ச்சி எல்லோர் முகங்களிலும் தாண்டவமாடிக் கொண்டிருந்தது. இதனால் கூச்சலும் கும்மாளமும் அந்த இடத்தை நிறைக்க, மதிய உணவும் வந்து சேர்ந்தது.

அதற்கிடையில் கடலில் எப்படிப் பயணிக்கவேண்டும் என்பதை அறிவுறுத்துமுகமாக நடக்கவிருந்த படகேறும்பயிற்சிக்கு எல்லா அணித்தலைவர்களும் சென்றிருந்தனர். தாக்குதலின் இடையில் உண்பதற்காகக் கொடுக்கப்பட்ட கன்டோஸ் பொதிகள் சில, இப்போதே இல்லாமற் போகத்தொடங்கின. படகேறும் பயிற்சிக்குப் போனவர்களில் சிலர் கடலின் அடி ஆழத்தையும் பார்த்துவிட்டு வந்துசேர்ந்தனர். போராளிகளின் இனிய கூச்சல், கும்மாளங்களைப் பார்த்தவாறு ஆதவன் மேற்கில் மறைந்து கொண்டிருந்தான்.

தாக்குதல் அணிகள் புறப்படும் வேளை வந்தது. அனைத்து அணிகளையும் ஏற்றுவதற்கு உழவு இயந்திரங்கள் வந்து நின்றன. ஏற்கனவே தயாராயிருந்த நாம் எமது பொருட்கள் எல்லாம் சரியாக உள்ளதா என மீண்டும் ஒருமுறை சரிபார்த்துக்கொண்டோம். ஒவ்வொரு அணிகளாக ஏற்றிய உழவு




இயந்திரங்கள் நீண்ட மணற்பாதையைப் புயல் வேகத்தில் தாண்டி வெற்றிலைக்லைக்கேணியில் இறக்கின. அதுவரை ஆளையாள் இறுக்கிப் பிடித்தபடி நின்ற அனைவரும் கட கடவெனக் கீழே குதித்தனர். அப்போது பனைகளின் இடை வெளியினூடே மஞ்சள் நிலா மேற்கு வானில் மெல்லிய கோலம் காட்டியது .



"கடல் இரண்டொரு நாட்களாய் வழமையைவிட வித்தியாசமாய் இருக்கு. எண்டாலும் உங்களைத் தரையிறக்கிற பணி தடங்க லின்றி முடியும்"

என எம்மோடு கதைக்கும்போது நம்பிக்கை தந்திருந்த தளபதி சூசையின் கட்டளைப்படி படகுகள் கரையில் நின்றன. கூடவே மனம் நிறைந்த நம்பிக்கைப் புன்னகையுடன் கடற்புலிப் போரா ளிகளும்.

குளிர்ந்த மண் காலில் பட, மனம் நெகிழ்ந்தது. கரையில் பாதுகாப்புக்கென இராணுவத்தால் அமைக்கப்பட்டிருந்த "உடைந்த" காப்பரண்களையும், முட்கம்பித் தடைகளையும் தாண்டி கரையை அண்மித்தோம். அப்போது தெற்கிலிருந்து வடக்காக வானூர்தி ஒன்று செல்லும் ஒளிர்வு விட்டு விட்டுத் தெரிந்தது. தீடீரென நாம் நின்ற பகுதிக்கு அண்மையாக எறி கணைகள் வீழ்நது வெடிக்க, சலசலவெனத் தெறித்தன சிதறுதுண்டுகள். இது படைத்தரப்பின் வழமையான வேலை களில் ஒன்று எனப் புரிந்துகொண்ட நாம், உடைந்த காப்பரண் களுக்கு அண்மையில் நின்று கடலைப் பார்த்தோம். அது அலைகளின் வீச்சுக்கு அதிர்ந்துகொண்டிருந்தது. ஓயாத அலை யெனத் திரண்ட ஒவ்வொருவரதும் மனநிலை சொல்ல வொண்ணா உணர்வெழுச்சிக்கு உட்பட்டிருந்தது.

உயர வீசும் அலைகளெல்லாம் கடலன்னையின் குழந்தைகள். ஓயாது வீசிக்கொண்டிருக்கும் நாங்கள் தமிழன்னையின் குழந்தைகள். ஆகவே அலையின் வலிமை எங்களுக்கும் வேண்டும். மனம் எங்கோ சிறகடிக்க முற்பட்டது. எல்லோரும் நாம் பயணம் செய்யப்போகும் கடற்தாயின் அலைக்கரங்களை இரசித்துக்கொண்டிருக்க, எம்மை ஏற்றும் படகுகள் தயாராகின.







மூலம்: சமராய்வுப் பிரிவு, தமிழீழம் (ஆண்டு அறியில்லை)
முதன்முதலில் எழுத்துருவில் வெளியிடப்பட்டது: 2000 ஆம் ஆண்டு.

**சமர்க்கள விரிப்புகள் தொடரும்...**




விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது.
இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு தொடர்புகளுக்கு
437.345.4203




## தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

# திருகோணமலை இன அழிப்பு 12.04.2006



திருகோணமலை மாவட்டம் 1980களிலிருந்து தமிழருக்கெதிரான வன்முறைச் சம்பவங்கள் தொடரும் கொதிப்பான ஒரு இடமாக இருந்து வந்திருக்கின்றது. இவ்வன்முறைகள் ஊடாக இம்மாவட்டதிதில் செறிவாக வாழ்ந்து வந்த தமிழர் அங்கிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விரட்டப்பட்டனர். சிறீலங்கா அரசால் வெளியிடப்பட்ட தீவின் மக்கள் பரவல் சார்ந்த புள்ளிவிபரங்கள் இதை தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

இதே போல் 2006 ஏப்பிரல் 12ஆம் நாள் மாலை இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தை அடுத்து தமிழர்களுக்கு எதிராக சிங்களக் காடையர்களின் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. இதன்போது 10 தமிழ்மக்கள் உட்பட 15பேர் படுகொலை செய்யப்பட்டதுடன் 50பேர் படுகாயமடைந்தனர். மேலும் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழர்கள் காயப்படுத்தப்பட்டதுடன் பெருமளவு வீடுகள், கடைகள், வாகனங்கள் எரித்து அழிக்கப்பட்டன.

1983, 1987ஆம் ஆண்டுகளுக்குப் பின்னர் திருகோணமலை நகரில் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற மிகமோசமான வன்முறையாக இது கருதப்படுகின்றது. 2006 ஏபபிரல் 12ஆம் நாள் மாலை 4 மணியளவில் திருகோணமலை நகரிலுள்ள மரக்கறிச் சந்தைப் பகுதியிலுள்ள தேங்காய்க் கடைக்கு முன்பாக குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவரும் ஐந்து சிங்களவரும் கொல்லப்பட்டனர். இந்த குண்டு வெடிப்பு சம்பவத்திற்கு முன்னரே மூன்று லொறிகளில் சிங்களக்காடையர்கள் திருகோணமலை நகரக்குள் கொண்டு வரப்பட்டதை தமிழர்கள் கண்டனர். இச்சிங்களகாடையர்கள் தமிழருக்குச் சொந்தமான கடைகளை கொள்ளையடித்தபின் இக்கடைகளுக்கு தீயூட்டினர். இதனால் திருகோணமலை நகரிலிருந்து பெரிய புகைமூட்டம் எழுவதைக் காணக்கூடியதாக இருந்தது. விரைவில் தமிழர் மேலான தாக்குதல்கள் ஆரம்பித்தது.

இத்தாக்குதல்களுக்கு துவக்குகளும் கத்திகளும் உபயோகப்படுத்தப்பட்டன. ஏப்பிரல் மாதப் புதுவருடக் கொண்டாட்டத்திற்காக பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு நகருக்கு சென்றிருந்த பல தமிழர் இத்தாக்குதல்களில் கொல்லப்பட்டனர்.

வன்முறைகள் நடைபெறுவதை அங்கு நிலைகொண்டிருந்த பல இலங்கை இராணுவததினர் பார்த்துக் கொண்டு நின்றனர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. சுதுபண்டா, 39
02. அந்தோனிராஜ் கீதநடனி, 33
03. சந்திரா மத்துவஸ், 50
04. கசுன் சமந்தா, 23
05. கந்தசாமி திரவியன், 56
06. அசங்கா மிலான், 21
07. சுசந்தா, 20
08. ரில்வான், 36
09. செல்வராஜா, 44
10. மயூரா பெதிகே சிவமணி, 30
11. பரூக், 55
12. ராச்மி டிலராங்கி, 08

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)









# உயர் பாதுகாப்பு வலயத்தில் சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதல்களில் 90 பேர் படுகொலை - 01-03.04.2009 வரை

இலங்கை இராணுவம் 03 (01 தொடக்கம் 03. ஏப்ரல் மாதம் 2009) நாட்களாக தொடர்ந்து பீரங்கி மற்றும் மோட்டார் ஷெல் தாக்குதல்களை நடத்தியதுடன், ஆர்பிஜி குண்டுகள் மற்றும் ஐம்பது கலிபர் ரவுண்டுகளை பயன்படுத்தி பாதுகாப்பு வலயத்திற்குள் சுட்டதில் 90 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் 195 பேர் காயம் அடைந்தனர். மருத்துவ மற்றும் மனிதாபிமானப் பணியாளர்கள் “எதிர்ப்பு மண்டலத்திற்குள்“ வெள்ளிக்கிழமை தற்காலிக மருத்துவமனையின் மருத்துவ ஊழியர்கள் தங்களுக்கு இன்னும் பல மருந்துகள் இல்லை என்றும் வியாழக்கிழமை ICRC கப்பலில் 7 வகையான மருத்துவ பொருட்கள் மட்டுமே கொண்டு வரப்பட்டதாகவும் தெரிவித்தனர்.



புதன்கிழமை 33 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் 78 பேர் காயமடைந்தனர், வியாழன் அன்று 31 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 70 பேர் காயமடைந்தனர் மற்றும் வெள்ளிக்கிழமை 26 பொதுமக்கள் கொல்லப்பட்டனர், 47 பொதுமக்கள் புதுமாத்தளனில் உள்ள தற்காலிக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

சுமார் 450 நோயாளிகள் காயமடைந்த மற்றும் நோய்வாய்ப்பட்ட பொதுமக்கள் அவர்களது உதவியாளர்களுடன் புதுமாத்தளனில் இருந்து திருகோணமலை மாவட்டத்தில் உள்ள புல்



மோட்டைக்கு மற்றொரு கப்பலில் மாற்றப்பட்டனர்.




பால் பவுடர், திரிபோஷா மற்றும் சோள சோயா உள்ளிட்ட 1000 மெட்ரிக் டன் உணவுப் பொருட்களும் ஐசிஆர்சியால் கொண்டு வரப்பட்டது.

இதற்கிடையில், குழந்தைகள் மத்தியில் ஊட்டச்சத்து குறைபாடு



அதிகமாக காணப்படுவதாக மருத்துவமனையின் மருத்துவ ஊழியர்கள் தெரிவித்தனர்.





**எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும். நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில் உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.**



# அம்பாறையில் 13 தமிழ் இளைஞர்கள் படுகொலை 03.04.2009



03.04.2009 அன்று அம்பாறையில் 13 தமிழ் இளைஞர்களை சிறீலங்கா சிறப்பு அதிரடிப்படையால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள பாணம லாகுளவில் 13 தமிழ் இளைஞர்களை சிறப்பு அதிரடிப்படை (STF) கமாண்டோக்கள் வெள்ளிக்கிழமை சுட்டுக் கொன்றதாக அம்பாறை வட்டாரத்தில் இருந்து தெரிவித்தன. துப்பாக்கிச் சூடு சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள், பலியானவர்கள் அப்பாவி தமிழ் இளைஞர்கள் என்றும், அவர்களில் அப்பகுதிக்கு வேலைக்குச் செல்லும் இளைஞர்கள் என்றும் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், அவர்கள் தமிழ்ப் புலிப் போராளிகளைப் பயிற்றுவித்தவர்கள் என்று பாதுகாப்புத் துறை கூறியது, அவர்கள் பதுங்கியிருந்த இடத்தை சுற்றி வளைத்து தேடுதல் மற்றும் தேடலில் STF கமாண்டோக்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

# முல்லைத்தீவு பாதுகாப்பு வலயத்தின் மீதான தாக்குதல்களில் 71 பொதுமக்கள் படுகொலை – 05.04.2009



ஞாயிற்றுக்கிழமை, புலிகள் பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்துகிறார்கள் என்று குற்றம் சாட்டி வந்த சிறீலங்கா இராணுவம் ஞாயிற்றுக்கிழமை, புலிகளின் முக்கிய சண்டை அமைப்புகள் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே உள்ள ஒரு பிரதேசத்திற்குள், சிறீலங்காப் படையால் முற்றுகையிடப்பட்டதாகக் கூறி, அதன் கூற்றுக்கு முரணானது. புலிகளுக்குப் பலத்த இழப்புகளை ஏற்படுத்திய பிரதேசம் அப்பிரதேசத்தை சிறீலங்கா இராணுவம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டதாக கூறினர். இதற்கிடையில், பாதுகாப்பு வலயத்திற்குள் பொதுமக்கள் மீதான தாக்குதல்களை இரவு 8:30 மணி முதல் சிறீலங்கா இராணுவத்தினர் முடுக்கிவிட்டனர். பொதுமக்கள் பாதுகாப்பு வலயத்தின் சமீபத்திய அறிக்கைகளின்படி சனிக்கிழமை. குறைந்தபட்சம் 71 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் 143 பேர் காயங்களுக்கு உள்ளாகினர் மற்றும் சிறீலங்கா இராணுவத்தினர் பாதுகாப்பு வலயத்திற்குள் எறிகணைத் தாக்குதல் நடத்தியதில் ஒரு மாதக் குழந்தைக்கு காயம் ஏற்பட்டது. தற்காலிக மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் இருந்த டாக்டர்கள் குழந்தையின் உயிரை காப்பாற்ற போராடினர்கள்.

ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் பொக்கனைப் பிள்ளையார் கோவிலுக்கு அருகில் சிறீலங்கா விமானப்படையின் ஹெலிகாப்டர் ஏவப்பட்ட ரொக்கெட் தாக்குதலில் 8 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

மாத்தளன், பொக்கனை, வலைஞர்மடம், இரட்டை-வாய்க்கால் மற்றும் பாதுகாப்பு வலயத்தின் ஏனைய பகுதிகளை குறிவைத்து சிறீலங்காப் படையின் கடும் ஷெல் தாக்குதல்கள் நடத்தினர்.

புதுமாத்தளன் தற்காலிக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட பொதுமக்களில் குறைந்தது 23 பேர் உயிரிழந்துள்ளனர்.



உள்ளூர் உதவிப் பணியாளர்கள், பாதுகாப்பான வலயத்திற்குள் இருக்கும் பொதுமக்கள் மீதான தாக்குதல்களை பலவந்தமாக அடிபணியச் செய்யும் நோக்கத்துடன் சிறீலங்காப் படையினர் முடுக்கிவிடுவார்கள் என்ற அச்சத்தை வெளிப்படுத்தி இருந்தனர்.





# முல்லைத்தீவு பாதுகாப்பு வலயத்தின் மீதான தாக்குதல்களின் சுவடுகள் – 05.04.2009














# 'பாதுகாப்பு வலயத்தில்' சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதல்களில் 129 பொதுமக்கள் படுகொலை - 08.04.2009

இலங்கை இராணுவம் நடத்திய பீரங்கி எறிகணைகள் புதன்கிழமையன்று நாள் முழுவதும் "பாதுகாப்பு வலயம்" என அழைக்கப்படும் பகுதிக்குள் 129 பொதுமக்களின் உயிர்களைக் கொன்றதாகவும், 282 பேர் காயமடைந்ததாகவும் சமீபத்திய அறிக்கைகள் தெரிவிக்கின்றன. புதன் கிழமை காலை பொக் கனையில் உள்ள சிறுவர் பராமரிப்பு / போஷாக்கு நிலையத்தை இலக்கு வைத்து மூன்று பீரங்கி குண் டுகள் வீசப்பட்டன, அங்கு பல பொதுமக்கள் குழந்தைகளுக் கான மனிதாபிமான பால் உணவுகளை பெறுவதற்காக காத்திருந்தனர். குழந்தை பராமரிப்பு நிலையத்தின் மீதான ஷெல் தாக்குதல், பாதுகாப்பு வலயத்திற்குள் பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட "மிகக் கொடூரமான படுகொலை" என்று புதுமாத்தளனில் உள்ள தற்காலிக மருத்துவமனையின் மீட்புப் பணியாளர் ஒருவர் கூறினார். படுகொலை, மாலை வரை தொடர்ந்த தாக்குதல்கள் காரணமாக.

சமீபத்திய அறிக்கைகளின்படி, பாதிக்கப்பட்டவர்களில் அதிக எண்ணிக்கையிலான குழந்தைகள், 40 முதல் 80 பேர் வரை உள்ளனர்.







# முல்லைத்தீவு பச்சைப் புல்மோட்டைப் பகுதியில் 17 பொதுமக்கள் படுகொலை - 11.04.2009

இலங்கை இராணுவம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை பச்சைப் புல்மோட்டை என்ற இடத்தை இலக்காகக் கொண்டு, "பாதுகாப்பு வலயத்தின்" வடக்குப் பகுதியைப் பிரித்து கைப்பற்றும் நோக் கில், "பாதுகாப்பு வலயம்" மீது தீவிரத் தாக்குதலை நடத்தியதாக முதல்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. அதிகாலை 3:15 மணியளவில் சிறீலங்கா இராணுவத்தினரின் கடுமையான ஷெல் மற்றும் துப்பாக்கிச் சூடு தொடங்கியது, 45 நிமிடங்களுக் குள், பச்சைப்-புல்மோட்டைச் சுற்றியுள்ள பாதுகாப்பு வலயத்தின் பொதுமக்கள் பகுதிக்குள் 300 க்கும் மேற்பட்ட குண்டுகள் வெடித்தன. அதே நேரத்தில் மழை பெய்து வந்ததால், வெள்ளம் சூழ்ந்துள்ள பதுங்கு குழிகளில் மக்கள் ஒளிந்து கொள்ள கூட முடியாமல் தவிப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சனிக்கிழமையன்று சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதல் களில் 17 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் 48 பேர் காய மடைந்தனர்.



# 'பாதுகாப்பு வலயத்தில்' சிறீலங்கா இராணுவத்தின் ஷெல் மற்றும் துப்பாக்கிச் சூட்டில் 31 பொதுமக்கள் படுகொலை - 12.04.2009

பாதுகாப்பு வலயத்திற்குள் ஞாயிற்றுக்கிழமை நாள் முழுவதும் குறைந்தது 31 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். காயமடைந்த பொதுமக்களின் சரியான எண்ணிக்கை தெரியவில்லை, ஆனால் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை முதல் சிறீலங்கா இரா ணுவத்தினர் பாதுகாப்பு வலயத்தின் மீது ஒருங்கிணைந்த தாக் குதல்களில் ஈடுபட்டதால், குறைந்தது 36 காயமடைந்தவர்கள் ஞாயிற்றுக்கிழமை காலை புதுமாத்தளனில் உள்ள தற்காலிக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். பலியானவர் களில் 30 பேர் ஷெல் தாக்குதலில் காயமடைந்ததாகவும், 6 பேர் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்ததாகவும் மருத்துவ வட் டாரங்கள் தெரிவித்தன. காயமடைந்தவர்களில் இருவர் மருத் துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.

இவ் புதுமாத்தளன் தற்காலிக மருத்துவமனையை அடையும் மக்கள் சிறீலங்கா இராணுவத்தின் துப்பாக்கிச் சூடு வீச்சின் எல்லைக்குள் வருகிறார்கள்.
தற்காலிக மருத்துவமனை மற்றும் அதற்கான நுழைவுப் பாதை சிறீலங்கா இராணுவ நிலைகளுக்கு அருகில் அமைந்துள்ளது.

மாத்தளனின் சமீபத்திய அறிக்கைகளின்படி, ஆங்காங்கே துப் பாக்கிச் சூடு தொடர்ந்து காயமடைந்தவர்களை மருத்துவ மனைக்கு கொண்டு செல்லும் போது இடப்பெற்றதாக கூறிப்பிடப் பட்டுள்ளது.





# 'பாதுகாப்பு வலயத்தில்' சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதல்களில் 23 பொதுமக்கள் படுகொலை - 13.04.2009

இரவு 8:30 மணி முதல் கடந்த 12 மணி நேரத்தில் இலங்கை இராணுவம் நடத்திய ஷெல் மற்றும் துப்பாக்கிச் சூட்டில் குறைந்தது 23 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். ஞாயிறு முதல் திங்கட்கிழமை காலை 8:00 மணி வரை, 15 முதல் 20 வரையிலான எண்ணிக்கையிலான கொலைகளில் பெரும் பாலானவை, திங்கள்கிழமை அதிகாலையில் சிறீலங்கா இராணுவதினர் பாதுகாப்பு வலயத்திற்குள் முன்னேறு வதற்கான புதிய தளத்தை முடுக்கிவிட்டபோது நிகழ்ந்தன. பாதுகாப்பு வலயம் என்று அழைக்கப்படும் வடக்கு அல்லது தெற்குப் பகுதியை இரண்டாகப் பிரித்து கைப்பற்றுவதை இலக்காகக் கொண்டு சிறீலங்கா இராணுவம் இரவு நேரத்தில் முன்னேற முயன்றது, பெரும்பாலான பொதுமக்கள் உயிரிழப்புகள் வலைஞர்மடம் மற்றும் முள்ளிவாய்க்கால் பகுதிகளில் பதிவாகியுள்ளன.

காலை 8:00 மணிக்குப் பிறகு சண்டை நிறுத்தப்பட்டபோது ஆங்காங்கே ஷெல் மற்றும் துப்பாக்கிச் சூடு நடந்ததாக அறிவிக்கப்பட்டது.















# 32ம் ஆண்டு

# வீரவணக்கம்







வீரப்பிறப்பு:
09.05.1972

வீரச்சாவு:
23.03.1992

## கப்டன் மணாளன் [டயஸ்]

**சண்முகநாதன் ஸ்ரீராம்**

**தொல்புரம் மேற்கு சுழிபுரம், தமிழீழம்**

*(23.03.1992 அன்று மணலாற்றில் சிறீலங்கா ஆக்கிரமிப்பு படையினரின் கஜபாார நடவடிக்கைக்கெதிரான 7 ஆம் நாள் சமரில் வீரச்சாவு)*

முப்பத்திரண்டு ஆண்டென்ன ஏழேழு ஜென்மத்துக்கும்
மறவோம் கண்ணிலே தோன்றும் காட்சி எல்லாம்
கனவாகி நனவாகி போவதுண்டு
மண்ணிலே பிறந்திட்ட மனிதரெல்லாம்
மண்ணாகி மறந்தோடிப் போவதுண்டு
எண்ணில் அடங்காத விண்மீன்களும்
என்றோ நாளொன்றில் மறைந்துபோதும்
நெஞ்சிலே உங்கள் நாமம் என்றும்
நீங்காமல் நிலைத்திருக்கும்.
என்றும் உன்னை நினைப்பவர்கள்.

அறிவித்தல்: உறவுகள்

# ஆனந்தபுரத்தில் மௌனித்த வீரம்

## "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

30 ஆண்டுகால விடுதலை போராட்டத்தின் தலைவிதியை மாற்றி எழுதிய நிகழ்வாக - 2009 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்தின் தொடக்கத்தில் - முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஆனந்தபுரம் கிராமத்தில் நிகழ்ந்த பாரிய சமர் அமைந்துள்ளது.

விடுதலைப்புலிகள் இயக்கம் எடுத்த நகர்வுக்கு மாறாக - பாரிய உயிர் இழப்புக்களுக்கு பின்னரும் - தொடர்ச்சியாக நடந்த சமரில் ஆயிரக்கணக்கான சிங்கள படைகளை அழித்த சமரை முறியடிக்க மேலும் சிங்கள படைகள் களத்திற்கு அனுப்பப்பட்டிருந்தனர். அதேவேளை விடுதலைப்புலிகளுக்கான படைக்கல வளங்கள் தமிழீழ கடற்பரப்பினூடாக தாயகத்திற்கு கொண்டு செல்லப்படுவதை தடுப்பதற்கான முழுமையான "கடற்தடுப்புச் சுவரை" வல்லாதிக்க அரசுகள் சிங்கள தேசத்துக்கு அமைத்து கொடுத்தன.

அத்தோடு பாரிய படைக்கல பிரயோகத்துடனும் வல்லாதிக்க அரசுகளின் புலனாய்வு தகவல்களையும் உள்வாங்கியவாறு சிங்கள தேசத்தின் இராணுவ வியூவம் தமிழீழ தாயகத்தை




முழுமையாக அழிக்கும் வகையில் தனது ஆக்கிரமிப்பு நடவடிக்கையை மேற்கொண்டது.

வரையறுக்கப்பட்ட போர்த் தளபாடங்களுடனும் ஆட்பல வளத்துடனும் போரிட்ட தமிழர் சேனை வன்னிப்பெருநிலத்தின் பெரும்பகுதியை கைவிட்டு பின்வாங்கியிருந்தது. எனினும் இறுதிவரை ஏதோ ஒரு இடத்திலிருந்து மீண்டும் - ஆக்கிரமித்து வரும் படைகளை தடுத்து - முறியடிப்பு தாக்குதலை செய்து தமிழீழ தாயகத்தை மீட்டுவிடலாம் என்றே அனைத்து மக்களும் நம்பியிருந்தனர்.

புதுக்குடியிருப்பு பிரதேசம் சிறீலங்கா படைகளிடம் வீழ்ந்தபோது, தமிழீழ விடுதலைப் புலிகளின் அசாத்திய பலத்தை முழுமையாக நம்பிய மக்களும் விடுதலைப் புலிகளும் தங்களுக்கு ஒரு சிறிய இடைவெளி கிடைத்தாலும் அதனை சாதகமாக பயன்படுத்தி வெற்றியை பெற்றுவிடமுடியும் என்றே முழுமையாக நம்பியிருந்தனர்.

அந்தவகையில் தான் ஆனந்தபுரம் பகுதியில் - இறுதியாக அறிவிக்கப்பட்ட மக்கள் பாதுகாப்பு வலயத்திற்கு வெளிப்புறமாக - விடுதலைப்புலிகளின் இறுதிப்போருக்கான அவசர போரரங்கு ஒழுங்குபடுத்தப்பட்டது.

தமிழீழ தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் உட்பட விடுதலைப்புலிகளின் முக்கிய தளபதிகள் பலரும் அடங்கலாக தளம் அமைத்து பெருமளவிலான முறியடிப்பு தாக்குதல் ஒன்றை முன்னெடுத்து எதிரியை ஊடறுத்து உட் சென்று பல முனை தாக்குதலுக்கு திட்டமிட்டுக்கொண்டிருந்தார்கள்

விடுதலைப்புலிகளின் பிரதான போர்க்கலங்கள் அனைத்தையும் உள்வாங்கி திட்டமிடப்பட்ட இத்தாக்குதலுக்காக பெருமளவு விடுதலைப் புலிகளும் நிலைப்படுத்தப்பட்டிருந்தனர். தொலைதூர தாக்குதலுக்கேயென வடிவமைக்கப்பட்ட போர்க்கலங்கள் அனைத்தும் குறுந்தூர தாக்குதலுக்காக நிலைப்படுத்தப்பட்டு இருந்தது.

விடுதலைப்புலிகளின் இத்திட்டமிடலை தொலை தொடர்பு சாதனம் ஊடாக அறிந்துகொண்ட சிறீலங்கா படையினர் தடை செய்யப்பட்ட போர் ஆயுதங்களை பயன்படுத்தி அத்தாக்குதலை முறியடிக்க தயாராகிக்கொண்டு இருந்தார்கள்.

அதன்படி ஆனந்தபுரம் பகுதியை சுற்றிவளைத்து அப்பகுதியில் நிலைகொண்டிருந்த விடுதலைப்புலிகளை முற்றுகை தாக்குதலை முன்னெடுத்தன.

தமிழீழ தேசிய தலைவரை பாதுகாப்பாக பின்னகர்த்திய விடுதலைப் புலிகள், சிறீலங்கா படைகளின் முற்றுகையை முறி [illegible]

இத்தளத்தில் நிலைகொண்டு இறுதிவரை உறுதியோடு போரிட்டு பிரிகேடியர் தீபன், பிரிகேடியர் ஆதவன் / கடாபி, பிரிகேடியர் மணிவண்ணன், பிரிகேடியர் விதுசா, பிரிகேடியர் துர்க்கா உட்பட விடுதலைப் புலிகளின் பல முக்கிய தளபதிகள் 7 பிரிகேடியர்கள், 19 கேணல்கள் 111 லெப் கேணல்கள் 252 மேஜர்கள் உட்பட 689 போராளிகள் மடிந்தனர்.

விடுதலைப்புலிகளின் மூத்த தளபதியான பிரிகேடியர் தீபன் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஒரு ஒப்புயர்வற்ற தளபதி. ஜெயசிக்குறு போர்க்களத்தில் சிறீலங்கா படைகளுக்கு சிம்ம சொப்பனமாக செயற்பட்டவர்.

வவுனியாவிலிருந்து முன்னேறி, கிளிநொச்சியிலுள்ள படைகளுடன் இணைப்பை செய்து, வன்னி பெருநிலத்தை கூறுபோடும் திட்டத்துடன், முன்னேறிய சிறீலங்கா இராணுவத்தை, புளியங்குளத்தில் - 1997 ஆம் ஆண்டில் - தடுத்துநிறுத்தி புளியங்குளத்தை புலிகளின் புரட்சிக்குளமாக்கிய தளபதிதான் பிரிகேடியர் தீபன்.

புளியங்குளத்தை சுற்றிவளைத்து அதற்கான வழங்கல் பாதைகளை துண்டித்தபோதும், தளராமல் நாங்கள் "இங்கேயே சமைத்து சாப்பிடுவோம். ஆனால் ஒரு போதும் பின்வாங்ககூடாது." என உறுதியோடு கூறி அங்கேயே நிலைகொண்டிருந்து முன்னேறிவந்த டாங்கிகளையும் தகர்த்து ஒரு துருப்புக்காவி கவசவாகனத்தையும் கையகப்படுத்தினார்.

அதற்கு பின்னர் நடைபெற்ற ஓயாத அலைகள் - 2 நடவடிக்கையிலும் போர்த்தளபதி பிரிகேடியர் தீபனின் தந்திரோபாயமான படைநகர்த்தல் மிகப்பிரசித்தமானது.

சிறீலங்கா படைகள் இன்றுவரை அமைத்த முன்னரங்க பாதுகாப்பு நிலைக் கட்டமைப்புக்குள், மிகவும் பாதுகாப்பானதும் அதற்குள் ஊடுருவி தாக்குதலை செய்வது என்பது சாத்திய மற்றது என்ற நிலையிலான பலமான பாதுகாப்பு அரணாக அன்றைய கிளிநொச்சி சிறீலங்கா இராணுவ தளம் இருந்தது.




அப்படியான இறுக்கமான தளத்தை கைப்பற்றும் சமரை வழி நடத்தியவர் தளபதி தீபன்.

அதற்கு பின்னர் ஓயாத அலைகள் - 3 படைநடவடிக்கையின் போது பரந்தன் படைத்தளத்தை கைப்பற்றும் நடவடிக்கையின் போது பட்டப்பகலில் மரபுவழி இராணுவமாக தமிழர் சேனையை வழிநடத்தி பல மூத்ததளபதிகளின் பாராட்டை பெற்றவர்.

ஆனந்தபுரம் தளத்தை தக்கவைக்கவேண்டும் அல்லது அங்கேயே வீரமரணம் அடையவேண்டிவரும் என்பதை தெளிவாக தெரிந்துகொண்டு இறுதிவரை உறுதியுடன் போரிட்ட தளபதியின் இறுதி மூச்சும் ஆனந்தபுரம் மண்ணில் அமைதியாய் போனது.

பிரிகேடியர் ஆதவன் அல்லது கடாபி அவர்கள் விடுதலைப் புலிகளின் இன்னொரு முக்கிய தளபதி. சிறீலங்கா இராணுவத்தினருக்கு எதிராக தமிழீழ தாயகத்தில் மேற்கொள்ளப்பட்ட பெரும்பாலான கரும்புலி தாக்குதல்களை திட்டமிட்டு நெறிப்படுத்திய சிறப்புநடவடிக்கைக்கான தளபதி.

தமிழீழ தேசிய தலைவரின் பாதுகாப்பு பணிகளுக்காக தனது போராட்ட வாழ்க்கையின் பெரும்பகுதியை செலவழித்த இத்தளபதி, படைக்கட்டுமானங்களான தொடக்கப்பயிற்சி கல்லூரிகளையும் அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரிகளையும் நிர்வகித்து வந்திருந்தார்.

தமிழீழ தாயகத்தை விடுவிக்கும் போரில், குறைந்தளவு ஆளணி வளங்களுடன் சமரை வெல்வதற்காக, தமிழீழ தாயகத்திலிருந்த எதிரிகளின் தளத்திற்குள், ஆழ ஊடுருவி மேற்கொள்ளப்படும் கரும்புலித்தாக்குதல்கள் பெரும்பாலும் இவரது நெறிப்படுத்தலிலேயே நடந்திருக்கிறது.

நவீன மரபு வழிக்கட்டமைப்புகளுக்கு அமைவாக சிறப்பு இராணுவ நடவடிக்கைகளை நெறிப்படுத்திய இத்தளபதி புதிய போராளிகளை உருவாக்கும் பயிற்சிக் கல்லூரிகளையும் நேரடியாக கண்காணித்துவந்தார்.

வன்னியில் போர் இறுக்கமான கட்டத்தை அடைந்தபோது களமுனையிலிருந்தே நேரடியாக படை நகர்த்தலை மேற்கொண்ட இத்தளபதியும் ஆனந்தபுரம் சமரில் விழுப்புண் அடைந்தார். பின்னர் களமுனையிலிருந்து இவரை அகற்றுவதற்கு போராளிகள் பலத்த முயற்சிகள் மேற்கொண்டபோதும் அதுமுடியாமல் போக தமிழீழ தாயகத்தை விடுவிக்கும் போரில் தன்னுயிரையும் அர்ப்பணித்துக்கொண்டார்.

மட்டக்களப்பு புல்லுமலையை பிறப்பிடமாகக் கொண்ட கேணல் நாகேஸ் 1985-86 காலப் பகுதியில் தன்னை விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைத்துக் கொண்டார். ஆரம்பகாலத்தில் லெப்.கேணல் றீகன் அவர்களின் அணியில் தனது சமர்க்களப் பணியை ஆரம்பித்தார்.

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக தன் உடலெங்கும் விழுப்புண் தாங்கி தமிழீழத்தின் களங்கள் யாவும் ஏன் அதற்கு அப்பாலும் தொடர்ந்து களமாடியவர் கேணல் நாகேஸ். உன்னத வீரனாக உயர்ந்த தளபதியாக வாழ்ந்த கேணல் நாகேஷ் அவர்களும் ஆனந்தபுரம் மண்ணில் வீரச்சாவடைந்தார்.

விடுதலைப்புலிகளின் போராட்டவலுவை அடுத்த கட்ட பரிணாமத்திற்குள் நகர்த்திய மோட்டார் பீரங்கிகளும் ஆட்லறி பீரங்கிகளும் தான், ஆட்லறி பீரங்கிப்படையணி தளபதி பிரிகேடியர் மணிவண்ணனின் போராட்டவாழ்க்கையாக இருந்தது.
"ஐஞ்சிஞ்சி" என செல்லமாக அழைக்கப்பட்ட 120 மிமீ பீரங்கிகள் தான் ஓயாத அலைகள் - ஐ நடவடிக்கையின் போது பாரிய படைக்கல சக்தியாக விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்தது.

முல்லைத்தீவில் கைப்பற்றப்பட்ட 122 மிமீ ஆட்லறிகளுடன் ஆரம்பமான விடுதலைப்புலிகளின் கேணல் கிட்டு ஆட்லறி படையணி வெளிநாடுகளில் கொள்வனவு செய்யப்பட்ட இன்னும் பல ஆட்லறிகளுடன் பெருவளர்ச்சி கண்டிருந்தது.

இரண்டு ஆட்லறிகளுடன் ஆரம்பித்த ஆட்லறிபடையணி பல பத்து ஆட்லறிகளை கொண்டதாக வளர்ச்சியடைந்தபோதும், அதனை சரியான முறையில் பயன்படுத்தி தமிழீழ போராட்டத்தை முழுமையான மரபு வழி இராணுவமாக்கி முழுமைப் படுத்திய பெருமை இத்தளபதிக்கு சேரும். மரபுவழியான முறையில் ஆட்லறிகளை பயன்படுத்தினாலும் நேரடிச் சூடுகளை வழங்கி எதிரிகள் மீது திகைப்புத்தாக்குதலை நடத்தி தரைவழியாக முன்னேறும் புலிகளுக்கு காப்பரணாக ஆட்லறிகளை பயன்படுத்தியமை இப்படையணியின் சிறப்பாகும்.

ஆனந்தபுரத்தில் நடைபெற்ற அந்தச்சமரின்போது ஆட்லறிப் படையணியை உருவாக்கி வளர்த்தெடுத்த பிரிகேடியர் மணிவண்ணன் அவர்களும் தமிழீழ காற்றோடு காற்றாக கலந்துபோனார்.

தமிழீழ பெண்களின் போர்முகத்தை உலகத்திற்கு காட்டிய விடுதலைப்புலிகளின் மகளிர் படையணிகளின் மூத்த தள பதிகளான 2ஆம் லெப்ரினன்ற் மாலதி படையணியின் சிறப்பு தளபதியுமான பிரிகேடியர் விதுசா அவர்களும், மேஜர் சோதியா சிறப்பு படையணியின் சிறப்புத்தளபதியான துர்க்கா அவர்களும் விடுதலைப்புலிகளின் பெரும்பாலான அனைத்து போரங்கு களிலும் தமது படையணிகளை நேரடியாக வழிநடத்தியிருந் தார்கள்.

ஆனையை அடக்கிய அரியாத்தை என வரலாறு தேடிக்கொண் டிருக்கும் எம்மவர் மத்தியில் அரியாத்தைகளையே உருவாக்கி காட்டிய பெருமை இவ்விரு தளபதிகளையுமே முக்கியமாக சேரும். ஆண் போராளிகளுக்கு நிகராக பெண் போராளிகளை யும் போர்க்களத்தில் நகர்த்திய இப்போர்த்தளபதிகள், தமிழீழ தேசிய தலைவரின் எண்ணங்களுக்கு செயல் வடிவம் கொடுத்து, உலகப் பெண்களுக்கு முன்னுதாரணமாக தமிழீழ பெண்களை உருவாக்கினார்கள்.

ஆனந்தபுரம் சமரின்போது இவர்களும் ஆனந்தபுரத்தின் விடி வெள்ளிகளாக தமிழீழ விடுதலைக்காக தம்முயிரை அர்ப் பணித்து வீரகாவியம் படைத்தார்கள்.

ஆனந்தபுரம் சமரில் மூத்த தளபதிகள் பலரையும் களமுனைத் தளபதிகள் பலரையும் நூற்றுக்கணக்கான போராளிகளையும் இழந்த அந்தச்சமர் தமிழ் மக்கள் அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியது.

தமிழீழ விடுதலைப் போரினை வழிநடத்திய தலைவனையும் போராளிகளையும் உலுப்பிவிட்ட, அந்த இழப்பு தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் இராணுவ சமநிலையை எதிரிக்கு சாதகமாக்கி விடுதலைக்காக விரைந்த பயணத்தில் பாரிய பின்னடைவை ஏற்படுத்திவிட்டது.

ஆனாலும் தர்மத்தின் அடிப்படையில் பயணித்த தமிழீழ விடுதலைப் போராட்டம் மீண்டும் எழுச்சியோடு புதிய பரி ணாமத்தில் புதுவீச்சோடு பயணிக்க தோள்கொடுப்போம் என உறுதியெடுப்போம்.

நினைவுப்பகிர்வு:- வேங்கைச்செல்வன்.

# ஆனந்தபுரம்

சிவநகர், இரணைப்பாலை, புதுமாத்தளன், அம்பலவன் பொக்கணை, வலைஞர்மடம், மந்துவில் ஆகிய கிராமங் களுக்கு மத்தியில் அமைந்த பச்சை புல்மோட்டை என்ற சதுப்பு பிரதேசத்துடன் இணைந்த, தென்னைகள் நிறைந்த ஒரு சிறு கிராமம்.

★ இதுதான் ஈழப்போரின் அத்திபாரம் ஆடிப்போன இடம்.

★ தமிழ் மக்களின் நம்பிக்கை தகர்ந்துபோன இடம்.

★ வீடுகள், மரங்கள் மட்டுமன்றி வெறும் மண் கூட பொஸ்பரஸில் எரிந்த இடம்.

★ சமர்களின் நாயகர்களின் இன்னுயிர்கள் காற்றுடன் கலந்த இடம்.

★ அண்ணளவாக 600இற்கு மேலான மாவீரர்கள் ஆகதி யாகி வீழ்ந்த இடம்.

★ 2009.04.04 அன்று அதிகாலை வேளையில் முற்றாக அழிந்தது ஆனந்தபுரம் .

★ மறைந்து போனது விடியலின் ஒளிக்கீற்று.

★ ஆனந்தபுர வீதியில் போனாலே மனது கனத்து போகிறது…!

★ மீளும் நினைவுகளால் நிறைந்து போகிறது…!

★ விழிகளில் எமையறியாமலே நீரூறி போகிறது!



*படத்தில் - ஆனந்தபுரத்தில் கிருஸ்ணன் கோவிலுக்கு அண்மையாக, 2009இல் இதே நாட்களை அண்மித்து மருத்துவ பிரிவின் மருத்துவமனை இயங்கியபோது விமான தாக்குதலுக்கு இலக்காகி பல இன்னுயிர்கள் காற்றுடன் கலந்த ஓரிடம்.*

மந்துவிலில் எழுந்து நிற்கும் போர் வெற்றி நினைவுத் தூபியின் பின்புறமாக ஆனந்தபுரம் இப்போதும் ஒரு மௌன சாட்சியாக இருந்துகொண்டு இருக்கிறது. ஆனந்த புரத்தில் வளரும் புதிய தென்னைகளின் கீற்றுகளில் தவழ்ந்து வரும் தென்றல் காற்றிலே இப்போது கந்தக மணம் இல்லை. ஆனால், விதையாக வீழ்ந்தவர்களின் தாகங்கள் நிறைந்தே இருக்கிறது.


எம் மாவீரர்களின் உயிர் மூச்சுக்கள் கலந்தே இருக்கிறது.


அமைதியாக சில நிமிடங்கள் அந்த மண்ணில் நின்று, எங்கள் நாயகர்களாக நாம் நேசித்த அந்த வீரமறவர்களை மனதிருத்தி, அங்கு வீசும் காற்றினை ஆழமாக சுவாசித் தால் அந்த ஆன்மாக்கள் பேசும்.

**"அது குருதி ஓடும் நரம்பில் ஆடும் உணர்வின் அனுபவம்,**

**யாரும் வெளியில் நின்று அறிய முடியா புதிய தரிசனம்…"**







***முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு, ஆனந்தபுரம் பகுதியில் உள்ள தனியார் காணி ஒன்றில் கடந்த 11.10.2022 அன்று இனம் காணப்பட்ட மனித எச்சங்கள்***








JATHU RENOVATION
Free!
ESTIMATES
உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்
★ Basement ★Carpet★Flooring
★Hardware★Kitchen Cabinets
★Painting★Tiles★ Stairs
★Moulding★Window★Garage Door
★Spotlight★ Plumping★Electrical
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com


அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சினை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203


The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com


Call today to Save energy
Broken Glass...?
We will fix it within 24 hour.
Free Estimate!
Call today
$50 OFF
Let us help with...
Replacement (Door & Windows)
Custom Door & Windows
Front Door & Patio Door
Garden Door
Door & Windows Re-Caulking (Important)
Painting Doors & Windows
Basement Separate Entrance Door
Home Painting
Spotlights installation
California Shutters
PTR DOORS & WINDOWS
PTR
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com

## தொல்லியல் சுவடுகள்...




# இலண்டன் நூலகத்தில் 'குளக்கோட்டன் கட்டளைகள்' ஓலைச்சுவடிகள்!

ஆர்வமும், வாய்ப்பும் உள்ள நண்பர்கள், சமூக ஆர்வலர்கள், சமய அமைப்புகள், திருக்கோணேச்சர ஆலயம் என்பன இங்கிலாந்தில் உள்ள இந்த அருங்காட்சியகத்துடன் தொடர்புகளை மேற்கொண்டு "குளக்கோட்டன் கட்டளைகள்" ஓலைச்சுவடிகளின் முக்கியத்துவம் தொடர்பில் விரிவாக உரையாடி அவற்றினை மீளவும் திருக்கோணேச்சரத்திற்கு கொண்டுவர முயற்சிக்கலாம். தமிழகத்துக்குச் சொந்தமான பல்வேறு ஆலயச் சிற்பங்கள் பல வெளிநாட்டு அருங்காட்சியகங்களில் இருந்து மீளவும் கொண்டுவரப்பட்டதை இதற்கு முன்னுதாரணமாகக் கொள்ளலாம்.

நூறு வருடங்களுக்கு முன்னர் எமது கைவிட்டுப்போன திருக்கோணேச்சரத்துக்குரிய அருஞ்செல்வம் "குளக்கோட்டன் கட்டளைகள்" ஓலைச்சுவடிகள் மீளக் கிடைப்பது ஆர்வமுள்ள தாயக, புலம்பெயர் உறவுகளின் கைகளில் உள்ளது.

குளக்கோட்டன் கட்டளைகள் ஓலைச்சுவடிகள் போன்று பல்வேறு தேசங்களில் அருங்காட்சியகங்கள், நூலகங்கள் என்பவற்றில் உள்ள திருக்கோணேச்சரம் தொடர்பான வரலாற்று மூலங்களை எவ்வாறு இனம் கண்டு அடையாளப்படுத்தப் போகிறோம் என்பது நம் முன் உள்ள முக்கிய கேள்வியாகும்.

ஓலைச்சுவடிகள், செப்பேடுகள், சுதேச, காலனித்துவ ஆவணங்கள், ஆலயத்தின் புராதன சிலைகள் என்பனவற்றை இனம் காண்பதும் அவற்றைத் தொகுத்துத் திருக்கோணேச்சர ஆலயத்தின் வரலாற்றின் விடுபட்ட பகுதிகளை விஞ்ஞான ஆதாரங்களோடு நிரப்புவது ஆலய வரலாற்றில் ஆர்வம் கொண்டுள்ளவர்களின் கடமையாகிறது. - நட்புடன் ஜீவன்.





............................................................

இலங்கையில் உள்ள சிவாலயங்களில் திருக்கோணேச்சரம் நீண்ட, தொடர்ச்சியான தலபுராண வரலாற்றைக் கொண்ட சிவத்தலமாகும். வாயு புராணம், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரின் தேவாரப் பதிகம், அப்பரும், சுந்தரரும் திருக்கோணேச்சரம் தொடர்பில் குறிப்பிட்டுள்ள தேவாரப் பாடல்கள், பெரிய புராணம் போன்றவற்றில் திருக்கோணேச்சரத்தின் தலச் சிறப்பு விரிவாக பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. பத்தாம் நூற்றாண்டில் மச்சகேஸ்வரம் என்ற பெயராலும் அழைக்கப்பட்ட திருக்கோணேச்சரம் தேசத்துக் கோயிலாக முன்னைய காலங்களில் சிறப்பித்துக் கொண்டாடப்பட்டது என்பதை வரலாறு பதிவு செய்திருக்கிறது.

திருக்கோணேச்சரத்தின் தலபுராணத்தை விரிவாகச் சொல்லும் இரு நூல்கள் உள்ளன. அவையாவன ஸ்ரீதஷிண கைலாச புராணம், திரிகோணாசல புராணம் என்பனவாகும். இது தவிர பெரிய வளமைப் பத்ததி, கோணேசர் கல்வெட்டு, கோணமலை அந்தாதி, குளக்கோட்டன் கம்ப சாஸ்திரம், திருக்கோணாசல வைபவம் போன்ற நூல்களும் திருக்கோணேச்சரத்தின் வரலாற்றையும், வளமைகளையும் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஓலைச்சுவடி வடிவில் இருந்த இவ்வரிய நூல்கள் கடந்த காலங்களில் பல்வேறு தரப்பினரால் அச்சுருவாக்கம் செய்யப்பட்டிருந்தது. எனினும் பெரிய வளமைப் பத்ததி, குளக்கோட்டன் கம்ப சாஸ்திரம் ஆகிய நூல்கள் ஓலைச்சுவடி வடிவில் எமக்கு இதுவரை கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். எனவே திருக்கோணேச்சரத்தின் அறியப்படாத வரலாற்றைத் தேடி நீண்ட காலமாக எனது பயணம் அமைந்திருந்தது.

ஓலைச்சுவடிகளின் பின்னாலான எனது தேடலின் முக்கிய திருப்புமுனையாக அமைந்தது திரு கணேசலிங்கம் ஸ்ரீதரன் அவர்களுடைய பாதுகாப்பிலிருந்த ஓலைச்சுவடிகளைக் காணும் சந்தர்ப்பம் கிடைத்ததுதான். இவை அனைத்தும் திரு வே அகிலேசபிள்ளை அவர்களுடைய சேகரங்களாக இருந்து வம்ச வழியாகத் திரு ஸ்ரீதரனுக்கு கிடைத்தவை. நண்பன் சுரேன்குமாரின் அறிமுகத்தால் திரு ஸ்ரீதரன் அவர்களிடமிருந்த ஓலைச்சுவடிகளை பரிசோதிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அவற்றில் இரண்டு ஓலைச்சுவடி கட்டுக்கள் திருக்கோணேச்சரத்துடன் தொடர்பு பட்டவை. திரிகோணமலை அந்தாதி, திருக்கோண நாதர் மும்மணிமாலை என்பன அவையாகும்.

திரிகோணமலை அந்தாதி திருக்கோணேசர் மேல் பாடப்பட்ட அந்தாதி நூலாகும். திருகோணமலை சிதம்பரநாதர் சுப்பிரமணியனார் என்னும் புலவரின் புதல்வரும் ஆறுமுக முதலியார் என்று அழைக்கப்பட்டவருமான புலவர் சு. ஆறுமுகம் என்பவரால் 1886 ஆம் ஆண்டளவில் இந்நூல் பாடி முடிக்கப்பட்டது. திரிகோணமலை அந்தாதி 1990 இல் இந்து கலாச்சார அமைச்சினால் பதிப்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. 92 ஓலைச்சுவடிகள் அடங்கிய திரிகோணமலை அந்தாதி நூலக நிறுவனத்தினால் சுவடியாக்கம் செய்யப்பட்டு தற்பொழுது யாவரும் வாசிக்கும் வண்ணம் இலவசமாக இணையத்தில் கிடைக்கிறது. இது போலவே திரு.கணேசலிங்கம் ஸ்ரீதரன் அவர்களின் பாதுகாப்பிலிருந்த 240 ஓலைச்சுவடிகள் அடங்கிய திருக்கோண நாதர் மும்மணிமாலை என்ற ஓலைச்சுவடிகளின் தொகுதியும் முழுமையாகச் சுவடியாக்கம் செய்யப்பட்டு நூலகத் திட்டத்தில் இலவசமாக தரவிறக்கி வாசிக்கக் கூடியவாறு இருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.


ஓலைச்சுவடிகளைத் தேடிய பயணத்தில் கிடைத்த இன்னுமொரு அரிய பொக்கிஷம் கோணேசர் கல்வெட்டு என்னும் ஓலைச்சுவடிகள் ஆகும். திருக்கோணேச்சர ஆலயப் பரிபாலன சபையின் அலுவலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த அந்த ஓலைச்சுவடிகளை பார்க்கும் பாக்கியம் கடந்த வருட நடுப்பகுதியில் எனக்குக் கிடைத்தது. கோணேசர் கல்வெட்டு என்கின்ற வரலாற்று நூல் திருகோணமலையைச் சேர்ந்த கவிராஜவரோதயன் அவர்களால் 17ஆம் நூற்றாண்டளவில் எழுதப்பட்டதாகக் கருதப்படுகிறது. இது பாடல்களையும், உரைநடை பகுதிகளையும் கொண்டமைந்திருக்கிறது.

திருக்கோணேச்சர ஆலய பரிபாலன சபையின் அலுவலகத்தில் இருந்து ஓலைச்சுவடிகள் கிடைக்கப்பெற்ற சமகாலத்தில் பருத்தித்துறையில் இருந்து கோணேசர் கல்வெட்டைப் பதிவு செய்த இன்னொரு ஓலைச்சுவடி கிடைக்கப்பெற்றது. சதாவதானம் நா.கதிரைவேற்பிள்ளை ஆவணக் காப்பகத்தினை நிறுவி செயற்பட்டுவரும் திரு சிவகடாட்சம் செந்தூரன் அவர்களிடமிருந்து மேற்கூறிய கோணேசர் கல்வெட்டு ஓலைச்சுவடி எண்ணிம வடிவில் கிடைக்கப்பெற்றது. திருகோணமலை வரலாற்றைத் தொடர்ச்சியாகப் பதிவு செய்து வரும் கலாநிதி கனகசபாபதி சரவணபவன் அவர்களின் விரைவில் வெளிவரவிருக்கும் நூலான 'கவிராஜவரோதயனின் கோணேசர் கல்வெட்டும், குளக்கோட்டன் சித்திரமும்' என்ற நூலில் மேற்கூறிய ஓலைச்சுவடிகள் பதிவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

**குளக்கோட்டன் கட்டளைகள்**



Wellcome Collection என்பது 183 Euston Rd., London NW1 2BE, இங்கிலாந்தில் உள்ள ஓர் இலவச அருங்காட்சியகத்துடன் கூடிய நூலகமாகும். இங்கு மருத்துவம், வாழ்க்கை மற்றும் கலை ஆகியவற்றுடன் தொடர்புடைய கலைப்பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. ஆண்டுக்கு 550,000 பார்வையாளர்களை ஈர்க்கின்ற இந்த அருங்காட்சியகத்தில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வரும் குளக்கோட்டன் தொடர்புடைய ஓர் ஓலைச்சுவடி பற்றி மிக அண்மையில் அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.





2022 இன் நடுப்பகுதியில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறைப் பேராசிரியராக இருந்து ஓய்வு பெற்ற செ. குணசிங்கம் அவர்களுடைய தொடர்பு நண்பன் தம்பிராசா கோணேஸ்வரன் மூலம் கிடைக்கப்பெற்றது. 1970 களில் திருகோணமலையில் இடம்பெற்ற பல வரலாற்று ஆய்வுகளில் பேராசிரியர் செ. குணசிங்கம் அவர்களுக்கு உறுதுணையாக இருந்தவர் சாம்பல்தீவு நா. தம்பிராசா ஐயா அவர்கள். திருக்கோணேச்சரம் தொடர்பில் மிகப் பரந்த அளவிலான ஆய்வினைச் செய்து அதனை நூலாக வெளியிட்டிருந்த பேராசிரியர் செ. குணசிங்கம் அவர்களிடம் இருக்கும் வரலாற்று மூலங்களைச் சுவடியாக்கம் செய்ய வேண்டும் என்று நீண்ட நாட்களாக ஆவல் கொண்டிருந்தேன். இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் எழுத்தாவணங்களை எண்ணிமப்படுத்திச் சுவடியாக்கம் செய்து இணையவெளியில் வழங்கி வரும் நூலகத் திட்டத்தின் இயக்குனர் சபையின் உறுப்பினர் மருத்துவர் க. சுகுமார் அவர்களுடனான தொடர்பு அதற்கான சாத்தியத்தை உருவாக்கித் தந்தது.

ஆர்வத்தோடு அப்பணியின் ஆரம்பக் கட்ட வேலைகளில் ஈடுபட்டிருக்கும் மருத்துவர் க. சுகுமார் உடனுக்குடன் தனக்குக் கிடைக்கும் தகவல்களை என்னுடன் பகிர்ந்திருந்தார். அவற்றில் முக்கியமானது CATALOGUE OF TAMIL MANUSCRIPTS IN THE LIBRARY OF THE WELLCOME INSTITUTE FOR THE HISTORY OF MEDICINE என்ற



அறிக்கை. 1990 ஆம் ஆண்டு Library of the Wellcome Institute இல் இருந்த பனை ஓலைகளில் எழுதப்பட்ட 52 ஓலைச்சுவடிக் கட்டுக்கள் பேராசிரியர் செ. குணசிங்கம் அவர்களால் பெயரிடப்பட்டு அட்டவணைப்படுத்தப்பட்டதை அவ்வறிக்கை விரிவாகச் செல்கிறது. 1910 ஆம் ஆண்டிற்கும் 1926 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் Sir Henry Wellcome அவர்களால் பணிக்கமர்த்தப்பட்ட Dr Paira ஆயடட அவர்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட ஓலைச்சுவடிகள் எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவை எங்கிருந்து பெறப்பட்டவை என்பது பற்றிய விபரங்கள் பதிவுகளில் குறிக்கப்பட்டவில்லை. திகதியிடப்படாத 52 ஓலைகள் கொண்டடங்கிய இந்த ஓலைச்சுவடிக்கு குளக்கோட்டன் கட்டளைகள் எனப் பெயரிடப்பட்டிருக்கிறது. 1990 ஆம் ஆண்டு அதனைப் பரிசோதித்த பேராசிரியர் செ. குணசிங்கம் அவர்களின் குறிப்புக் கீழ்வருமாறு அமைந்திருக்கிறது.

**Kulakkottan Kattalaikal (Orders of Kulakkottan)**

Undated; 25.4 x 3 cm; 52 ff (ff 49-52 blank); some leaves have been fragmented; for the most part inscribed on both sides; legible; incomplete. Kulakkottan Kattalaikal (Orders of Kulakkottan): Kulakkottan was a Saiva prince originally from the Chola country in South India who played an important role in establishing the vanni chieftaincies in eastern Sri Lanka (Trincomalee District), after renovating the local historical Hindu temple Koneswaram. Though a precise view of the identity and chronology of Kulakkottan is not possible, his activities can be ascribed to a period somewhere between the end of the Chola rule in Sri Lanka (the second half of the eleventh century) and the emergence of a Tamil Kingdom in northern Sri Lanka (thirteenth century A.D.). The manuscript relates various arrangements made by Kulakkottan with different chieftains and temple servants to maintain the religious services at the Koneswaram temple. The text also refers to some administrative titles such as Vannipam, Mutali, Pararasasekaram, Sekarasasekaram, etc. This manuscript is a useful addition to the already available sources on Kulakkottan and his activities in relation to the Koneswaram temple.


திகதியிடப்படாத 25.4 cm நீளம் 3 cm அகலம் உடைய இரண்டு பக்கமும் எழுதப்பட்ட சிதைவடைந்த 52 ஓலைச்சுவடிகள் இவை. திருக்கோணேச்சர ஆலயத்தில் பணிக்கு அமர்த்தப்பட்ட ஆலயத் தொழும்பாளர்கள் தொடர்பில் குளக்கோட்டு மன்னன் செய்த ஏற்பாடுகளை இந்த ஏடுகள் விவரிப்பதாக அவர் பதிவு செய்திருக்கிறார். இது தவிர வன்னிபம், முதலி, பரராசசேகரம், சேகராசசேகரம் ஆகியோர் பற்றியும் இந்த ஏட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. முழுமையான ஓலைச்சுவடிகளைப் பார்த்தால் மட்டுமே இவை குளக்கோட்டன் கட்டளைகள் என்ற புதிய நூலா அல்லது ஏற்கனவே உள்ள கோணேசர் கல்வெட்டின் இன்னொரு வடிவமா என்பதை உறுதிப்படுத்த முடியும். ஐரோப்பிய மண்ணில் கிடைக்கப்பெற்ற குளக்கோட்டன் கட்டளைகள் என்ற இந்த ஓலைச்சுவடிகள் இதுபோன்ற திருக்கோணேச்சர ஆலய வரலாற்று மூலங்கள் பல்வேறு அருங்காட்சியகங்களிலும், நூலகங்களிலும் முழுமையாக வாசிக்கப்படாமல் இருக்கக்



கூடும் என்ற செய்தியை நமக்குத் தருகிறது. இந்தத் தேடல் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருக்கும் எனது தந்தை கலாபூஷணம் வே தங்கராசா, விருபா குமரேசன் அண்ணா மற்றும் நண்பன் சற்குணம் சத்யதேவன் ஆகியோருக்கு எனது மனம் நிறைந்த நன்றிகள்.

ஆர்வமும், வாய்ப்பும் உள்ள நண்பர்கள், சமூக ஆர்வலர்கள், சமய அமைப்புகள், திருக்கோணேச்சர ஆலயம் என்பன இங்கிலாந்தில் உள்ள இந்த அருங்காட்சியகத்துடன் தொடர்புகளை மேற்கொண்டு "குளக்கோட்டன் கட்டளைகள்" ஓலைச்சுவடிகளின் முக்கியத்துவம் தொடர்பில் விரிவாக உரையாடி அவற்றினை மீளவும் திருக்கோணேச்சரத்திற்கு கொண்டுவர முயற்சிக்கலாம். தமிழகத்துக்குச் சொந்தமான பல்வேறு ஆலயச் சிற்பங்கள் பல வெளிநாட்டு அருங்காட்சியகங்களில் இருந்து மீளவும் கொண்டுவரப்பட்டதை இதற்கு முன்னுதாரணமாகக் கொள்ளலாம்.

நூறு வருடங்களுக்கு முன்னர் எமது கைவிட்டுப்போன திருக்கோணேச்சரத்துக்குரிய அருஞ்செல்வம் "குளக்கோட்டன்




கட்டளைகள்" ஓலைச்சுவடிகள் மீளக் கிடைப்பது ஆர்வமுள்ள தாயக, புலம்பெயர் உறவுகளின் கைகளில் உள்ளது.

குளக்கோட்டன் கட்டளைகள் ஓலைச்சுவடிகள் போன்று பல்வேறு தேசங்களில் அருங்காட்சியகங்கள், நூலகங்கள் என்பவற்றில் உள்ள திருக்கோணேச்சரம் தொடர்பான வரலாற்று மூலங்களை எவ்வாறு இனம் கண்டு அடையாளப் படுத்தப் போகிறோம் என்பது நம் முன் உள்ள முக்கிய கேள்வியாகும்.

ஓலைச்சுவடிகள், செப்பேடுகள், சுதேச, காலனித்துவ ஆவணங்கள், ஆலயத்தின் புராதன சிலைகள் என்பனவற்றை இனம் காண்பதும் அவற்றைத் தொகுத்துத் திருக்கோணேச்சர ஆலயத்தின் வரலாற்றின் விடுபட்ட பகுதிகளை விஞ்ஞான ஆதாரங்களோடு நிரப்புவது ஆலய வரலாற்றில் ஆர்வம் கொண்டுள்ளவர்களின் கடமையாகிறது.

Dr த . ஜீவராஜ் ( MBBS, MCGP)

நன்றி: Dr த . ஜீவராஜ்



விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது.
இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு தொடர்புகளுக்கு
437.345.4203


AFFORDABLE
REFRIGERATION
SERVICES INC
Walk - In Freezers
Walk - In Coolers
Reach - In Freezers
Reach - In Coolers
We Sell. Install
used & new
Walk in Cooler
Walk in Freezer
kapil.afr@gmail.com
Kapil: 647.515.8643


வங்கிக் கடன்
தொல்லைகளிலிருந்து
விடுதலை
NEW LIFE FRESH START
PAST DUE NOTICE
Save
80%
கடன் 80% குறைய நடவடிக்கை
Reduce your debts upto 80%.
கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
Stop all interest on your debts.
கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, legal action & garnishments.
உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
Protect all your assets (House, Car, RRSP, RESP).
CRC CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca
மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
Make one monthly patment to all of your creditors.
வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
GIve you solutions without bankruptcy.
Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation
Over 20 Years Experience
in the field of Insolvency
Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca

# பார்க்க ஆசையா இருக்கு எண்டாலும் மனதில் ஒரு கவலை இருக்கு!

19.03.2024

கடத்த ஒன்பதாந் திகதி வெடுக்குநாறி மலையில் சிவ பூசைக்குள் போலீஸ் புகுந்தது.எட்டுப் பேர் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் சிறை வைக்கப்பட்ட அடுத்த நாள், 10ஆம் திகதி யாழ்ப்பாணம் முற்ற வெளியில் விமானப்படைக் கண்காட்சியின் கடைசி நாளன்று, ஆயிரக்கணக்கான மக்கள் அங்கே திரண்டார்கள்.

அங்கு திரண்ட சனத்தொகை சந்தோஷ் நாராயணனின் இசை நிகழ்வில் திரண்ட தொகைக்குக் கிட்ட வரும் என்று கூறப்பட்டாலும், அது ஒரு மிகை மதிப்பீடு என்று கருதப்படுகின்றது. எனினும் ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டார்கள் என்பது மட்டும் உண்மை.

தமது மரபுரிமைச் சொத்து ஒன்று ஆக்கிரமிக்கப்படுவதற்கு எதிராகவும், தமது வழிபாட்டு உரிமையை நிலை நிறுத்துவதற்காகவும் வெடுக்குநாறி மலையில் போராடிக் கொண்டிருக்கும் அதே மக்கள் மத்தியில் இருந்துதான் முற்ற வெளிக்கும் ஆட்கள் போனார்கள். இந்த முரண்பாட்டை எப்படி விளங்கிக் கொள்வது?

வெடுக்கு நாறி மலைக் கைதுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நல்லூரில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் பேசிய தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர், முற்றவெளிக்குப் போன மக்களைக் கடுமையாக விமர்சித்தார். 15 ஆண்டுகளுக்கு முன் நடந்தவற்றை மறந்து முற்றவெளிக்குப் போன மக்கள் மீது அவருக்குக் கோபம். அந்தக் கோபம் நியாயமானது. ஆனால் அதைவிட ஆழமான, நியாயமான ஒரு கேள்வி உண்டு. அது என்னவெனில், தமது சொந்த அரசியலின் மீதும் நேரடியான மற்றும் மறைமுக ஒடுக்குமுறைகளின் மீதும் தமிழ் மக்களின் உணர்திறனை, விழிப்பை அதிகப்படுத்தும் நிகழ்ச்சி நிரல் எந்தக் கட்சியிடம் உண்டு?

ஒரு மக்கள் கூட்டத்தின் பொதுப் புத்தி அப்படித்தான் இருக்கும். அது வாழ்க்கையைக் கொண்டாடக் கிடைக்கும் எல்லாச் சந்தர்ப்பங்களையும் தேடிப் போகும். மக்களுக்கு பொழுது போக வேண்டும். அதுதான் அவர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் பண்ணை வெளிக்கு வருகிறார்கள். யாழ்ப்பாணத்தின் ஏனைய உல்லாசத் தலங்களுக்குப் போகின்றார்கள். வசதி குறைந்தவர்கள் பண்ணைக்கும் ஏனைய சிறு பூங்காக்களுக்கும் போகின்றார்கள். வசதி கூடியவர்கள் யாழ்ப்பாணத்தின் நட்சத்திர அந்தஸ்துடைய விருந்தினர் விடுதிகளுக்கு போகின்றார்கள். புலம்பெயர்ந்த தமிழர்கள் முன்பு வரும்பொழுது தங்கள் சொந்தக்காரர்களின் வீடுகளில் தங்குவதுண்டு. இப்பொழுது கணிசமானவர்கள் விருந்தினர் விடுதிகளில் தங்குகிறார்கள். அதற்காக லட்சக்கணக்கில் செலவழிக்கின்றார்கள்.

அதாவது சமூகத்தின் வெவ்வேறு மட்டங்களில் இருப்பவர்கள் தங்கள் தங்கள் நிதித் தகமைக்கு ஏற்ப வாழ்க்கையைக் கொண்டாட விரும்புகிறார்கள். குறிப்பாக ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை வாழ்க்கையைக் கொண்டாட விரும்பும் அநேகருக்கு புலம்பெயர்ந்த தமிழர்கள்தான் ஒரு முன்னுதாரணம். மூன்றாவது புலப்பெயர்ச்சி அலைக்கு அது பிரதான காரணம்.






இப்படியாக வாழ்க்கையைக் கொண்டாட ஆசைப்படும் ஒரு மக்கள் கூட்டத்தை அவர்களுடைய சொந்த அரசியலின் மீது உணர்திறன் மிக்கவர்களாக மாற்றுவது எப்படி? அதை யார் செய்வது?

விமானப்படைக் கண்காட்சிக்கு வந்த ஒரு நோர்வேத் தமிழர் கூறுகிறார் "பார்க்க ஆசையா இருக்கு, எண்டாலும் ஒரு கவலை இருக்கு மனதில" என்று. ஆசையாக இருக்கிறது என்பது வாழ்க்கையை கொண்டாட ஆசையாக இருக்கிறது என்று பொருள். கவலை இருக்கிறது என்பது இறந்த காலத்தில் தமிழர்கள் பட்ட துயரங்களை நினைக்கும் போது ஏற்படுவது.

ஆனால் அது இறந்த காலமல்ல, நிகழ்காலமுந்தான். அதனால் தான் வெடுக்கு நாறி மலையில் போராட வேண்டியிருக்கிறது; மயிலத்தமடுவில், மாதனையில் போராட வேண்டியிருக்கிறது; காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அன்னையர்கள் தொடர்ந்து போராட வேண்டியிருக்கிறது. போர் ஒரு விளைவு மட்டுமே, மூல காரணம் அல்ல. ஒடுக்கு முறைதான் மூல காரணம். அது இப்பொழுதும் உண்டு.

எட்டுப் பேர் கைது செய்யப்பட்டிருக்கும் ஒரு சமூகத்தில் இருந்து ஆயிரக்கணக்கானவர்கள் முற்றவெளிக்குப் போயிருக்கிறார்கள். அங்கே படையினர் பரசூட்டில் இறங்குவதைப் பார்த்து ஆர்ப்பரிக்கிறார்கள். உலங்கு வானூர்தியில் ஏறுவதற்காக முண்டியடிக்கிறார்கள். அதைப் பெரும்பாலான யுரியூப்பர்கள் கவர்ச்சியாக விற்கிறார்கள்.

இது யுடியூப்பர்கள் காலம். வாசிப்பதற்கான பொறுமை குறைந்து வருகின்றது. கேட்பதற்கான தாகம் அதிகரித்து வரும் ஓர் ஊடகச் சூழல். யுடியூப்பர்கள் எத்தனை பேர் தேசத்தை கட்டியெழுப்பும் பொறுப்புணர்ச்சியோடு செயல்படுகிறார்கள்? தான் பரப்புவது வதந்தியா செய்தியா என்று எத்தனை யுடியூப்பர்களுக்குத் தெரியும்? எத்தனை யுடியூப்பர்கள் தமிழுக்கு வெளியே போய் வாசிக்கின்றார்கள்? எத்தனை யுடியூப்பர்கள் தாங்கள் வெளியிடும் தகவலின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்துகிறார்கள்? இதை இன்னும் கூர்மையாகக் கேட்டால் ஒரு யுடியூப்பருக்கு என்ன தகைமை இருக்க வேண்டும்? ஒரு நல்ல கமராவும் வேகமான இன்டர்நெற்றும் இருந்தால் மட்டும் போதுமா? தாங்கள் கூறும் விடயத்தின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்த வேண்டும் என்ற பொறுப்புணர்வு எத்தனை யுடியூப்பர்களுக்கு உண்டு?

கடந்த ஜனவரி நாலாந் திகதி, ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தார். அவருடைய வருகைக்கு எதிராக கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் பழைய பூங்கா வீதியில் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். அவர்களைத் தடுத்து நிறுத்த வீதியின் குறுக்கே போலீஸ் ஒரு பேருந்தை நிறுத்தி வைத்திருந்தது. அவ்வாறு பழைய பூங்கா வீதி முன்னறிவிப்பின்றி மூடப்பட்டதை எதிர்த்து அந்த வீதி வழியாக காரில் வந்த ஒருவர் போலீசாரோடு முரண்படுகிறார். அது தொடர்பாக ஒரு யுடியூப்பர் செய்தி வெளியிடுகையில் "காரில் வந்த இந்தியர், பார்த்து மிரண்ட இலங்கை போலீஸ்" என்று தலைபிடுகிறார். அக் காணொளி ஆறு லட்சத்திற்கும் மேற்பட்டவர்களால் பார்க்கப்பட்டிருக்கிறது. ஆனால் பொலிசாரைக் கேள்வி கேட்கும் நபர் ஓர் இந்தியர் அல்ல. சுயாதீன திருச்சபை ஒன்றின் பாஸ்டர். அவ ருடைய காரின் "டாஷ் போர்ட்" பகுதியில் இந்திய தேசியக்கொடி காணப்படுகின்றது. அதை வைத்து அவர் ஒரு இந்தியர் என்று யுரியூப்பர் கூறுகிறார். ஆயின், ஆறு லட்சத்துக்கும் அதிக மானவர்களிடம் அந்தப் பொய் சென்று சேர்ந்திருக்கின்றதா?

இலங்கையில் பொருளாதாரம் நெருக்கடி ஏற்பட்ட பொழுது ஓர் இந்திய யுடியூபர் கூறினார், வெள்ளைக்காரர்கள் வாங்கி வைத்திருக்கும் பாணை உள்ளூர் மக்கள் பறித்துக் கொண்டு ஓடுவதாக. அது ஒரு பொய்.

பெரும்பாலான யு ரியூப்பர்கள் தமது காணொளிகளைப் பார்பவர்களின் தொகையை எப்படி கூட்டுவது என்று தான் சிந்திக்கிறார்கள். பார்ப்பவர்களின் தொகை கூடக்கூட வருமானம் பெருகும். எனவே பெரும்பாலானவர்கள் உழைப்பை எப்படிப் பெருக்குவது என்றுதான் சிந்திக்கின்றார்கள். இது ஓர் ஆபத்தான வளர்ச்சி. யுரியூப்பர்களின் காலத்தில் உண்மை எது? பொய் எது? ஊடக அறம் எது? உழைப்பு மட்டும்தான் யூரியுப்தர்மமா? சமூகத்தை கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு, தேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு யுரியூப்பர்ளுக்கு இல்லையா? வாசகரை அல்லது பார்வையாளரை விமர்சனபூர்வமாகச் சிந்திக்கும் விழிப்புடைய பிரஜைகள் ஆக்குவதே தேசத்தைக் கட்டியெழுப்பும் ஊடகவியலாளரின் வேலை.

எனவே யுடியூப்பர்களின் காலத்தில் தேசத்தைக் கட்டியெழுப்புவது எத்தனை சவால்கள் மிக்கது என்பதனை விமானப்படை கண்காட்சி தொடர்பாக வெளிவந்த பெரும்பாலான யுடியூப்கள் மீண்டும் நிரூபித்தன. இது அரசியல் கட்சிகள் மற்றும் செயற்பாட்டாளர்களின் பணி மேலும் கடினமாக்கப்படுகிறது என்பதைக் காட்டுகிறது.

இப்படிப்பட்டதோர் ஊடகச் சூழலில், முற்றவெளியில் திரளும் மக்களைத் திட்டித் தீர்ப்பதனால் தேசத்தைக் கட்டியெழுப்ப முடியாது. தமது சொந்த அரசியலின் மீது அந்த மக்களை எப்படி உணர்திறன் மிக்கவர்களாக மாற்றுவது என்று கட்சிகள் சிந்திக்க வேண்டும். அதற்கு வேண்டிய வழிவகைகளைக் கண்டுபிடிக்க வேண்டும். தேசியவாத அரசியல் என்பது மக்களை ஒரு தேசமாகத் திரட்டுவது. தேசத்தை கட்டியெழுப்பும் கலையை பண்பாட்டை அறிவியலை தேசத்தைக் கட்டியெழுப்பும் யுடியூப்பர்களை தேசத்தைக் கட்டியெழுப்பும் ஊடகக் கலாச்சாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.

இப்படி எழுதுவதுகூட சமூகத்தின் ஒரு பிரிவினருக்கு எரிச்சலூட்டுவதாக இருக்கலாம். ஏனென்றால் வான்படைக் கண்காட்சி தொடர்பாக படித்தவர்கள் சிலர் தெரிவித்த கருத்துக்களில் அதைக் காண முடிந்தது. எல்லா பிரச்சினைகளும் முடிந்து விட்டன் நாங்கள் இப்பொழுது சந்தோஷமாகத்தான் இருககிறோம் கண்டதையும் எழுதிக் குழப்பாதீர்கள் மக்கள் சந்தோஷமாக இருக்க விரும்புகிறார்கள்; அவர்களை மீண்டும் பலியாடுகள் ஆக்காதீர்கள்... என்று கூறும் ஒரு போக்கு அதிகரித்து வருகிறது. மக்களைத் தமது நிகழ்காலத்தின் மீது உணர் திறன் மிக்கவர்களாக மாற்ற முற்படும் எழுத்துக்களுக்கு வாசிப்பும் வரவேற்பும் குறைந்து வருகிறது.

பதிலாக மாயைகளின் மீதும் பொருளற்ற மகிழ்ச்சியின் மீதும் பொய்களின் மீதும் கட்டுக் கதைகளின் மீதும் தாகம் கொள்ளச் செய்யும் ஊடக கலாச்சாரம் மேலெழத் தொடங்கிவிட்டது. வெறுப்பர்கள்- Haters -எல்லாவற்றையும் எதிர்மறையாக விமர்சித்துக் கொண்டிருக்கிறார்கள்.

சில மாத கால இடைவெளிக்குள் யாழ்ப்பாணம் முற்ற வெளியில் மக்கள் பெருந்திரளாகக் கூடிய நிகழ்வுகளிலிருந்து தமிழ் அரசியல்வாதிகளும் செயற்பாட்டாளர்களும் குடிமக்கள் சமூகமும் புத்திஜீவிகளும் கலைஞர்களும் ஊடகங்களும் கற்றுக்கொள்ள வேண்டும். ஆழமான வாசிப்புக் குறைந்து, ஆழமான யோசிப்பும் குறைந்து, மேலோட்டமானவைகளை நோக்கி மொய்க்கும் ஒரு ஜன சமுத்திரத்தை புதிய ஊடக மரபு உற்பத்தி செய்து வருகிறது. செயற்கை நுண்ணறிவின் புதிய வளர்ச்சிகளின் பின்னணியில் டீப் ஃபேக் - Deepfake- என்று அழைக்கப்படும் ஆழமான போலி உருவாக்கப்படுகின்றது. அது ஒரு வெகுசனப் பண்பாடாக வளர்க்கப்படுகிறது. ஆழமான பொய்களின் மத்தியில்மறதி அதிகமுடைய ஒரு மக்கள் கூட்டத்தின் மத்தியில் தேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டியுள்ளது.

நன்றி: நிலாந்தன்

# ஈகைச்சுடர்
# அன்னை பூபதி

## 36 ஆம் ஆண்டு நினைவு நாள்



## நாட்டுப்பற்றாளர் நாள்
## ஏப்ரல் 19 2023

## அன்னை பூபதி கணபதிப்பிள்ளை
## Annai Poopathy Kanapathipillai

கிரான், மட்டக்களப்பு, தமிழீழம்

மண்ணில்: 03.11.1932

ஈகைச்சாவு: 19.04.1988

உண்ணா நோன்பு போராட்டத்தில் ஈகைச்சாவைத் தழுவிக் கொண்ட முதல் பெண்மணி

Annai Poopathy was the first woman to embrace martyrdom in the fasting struggle for Thamileelam

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

சங்கத்தமிழ்




**Election Commission**
**Transnational Government of Tamil Eelam**
**நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தேர்தல் ஆணையம்**
Canada

**Canada Election Commissioner** **tgteelection2024@gmail.com**

***ஊடகச்செய்தி*** *-1* *கனடா - மார்ச் 18, 2024*

## நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் - பொதுத் தேர்தல் 2024

நா க த அரசாங்கத்தின் 4வது பாராளுமன்றத்திற்கான அரசவை உறுப்பினர்கள் தேர்தல்- கனடா

**அறிமுகம்**

நா.க.த அரசாங்கமானது தனது முதன்மை கொள்கையான

□புலம் பெயர் தமிழ் மக்களால் சனநாயக முறையில் தமது அரசியல் குரலாக தெரிவு செய்யப்பட்ட நா.க.த.அரசாங்கமானது, சுதந்திரமும் இறைமையும் கொண்ட தமிழீழ அரசை மீளவும் நிறுவப் பாடுபடும்□

என்பதற்கேற்ப சனநாயக ரீதியில் உலகளாவிய விழுமியங்களை கடைப்பிடிக்கும் நோக்கத்தில் ஒவ்வொரு 5 வருடங்களுக்கு ஒருமுறை பொதுத் தேர்தல்களை நடத்திவருகிறது. நடக்கவிருக்கும் நான்காவது பாராளுமன்றத் தேர்தல் மூலம் 12 நாடுகளிலிருந்து 115 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட இருக்கிறார்கள். இதில் கனடாவிலிருந்து தெரிவு செய்யப்படும் 25 உறுப்பினர்களும் உள்ளடங்குவர். இத் தேர்தல் வரும் மே 5ம் திகதி (2024) கனடாவில் நடைபெறும் என்பதை நா.க.த அரசாங்கத்தின் தேர்தல் ஆணையாளர் அறிவித்திருக்கிறார்.

அதற்கமைய இத் தேர்தலை கனடாவின் பல மாகாணங்களிலும் பரந்து வாழும் ஈழத் தமிழ் மக்களும் பங்கெடுக்க ஏதுவாக கீழே முதன்மை விபரங்கள் தரப்பட்டுள்ளன.

**வேட்புமனு தாக்கல் செய்ய விரும்பும் வேட்பாளர் கவனத்துக்கு:**

**விண்ணப்ப படிவங்கள்****:

- விண்ணப்ப படிவங்களை கனடா தேர்தல் ஆணையாளர் அலுவகத்தில் பெற்றுக் கொள்ளலாம். அத்தோடு மின் அஞ்சல் மூலமாகவோ அல்லது எமது இணையத்தளம் மூலமாகவோ பெற்றுக் கொள்ளலாம். **(Details given below)**

Page **1** of **3**

- போட்டியாளர்களுக்கான தகுதிகள் விண்ணப்ப படிவத்தில் தரப்பட்டுள்ளன.
- போட்டியாளர்கள் விண்ணப்ப படிவத்தோடு (Nomination Form) இணைக்கப் பட்டிருக்கும் □சுய விபரக் கோவை (Pre -Nomination Form) ஐயும் பூர்த்தி செய்து அண்மையில் எடுக்கப்பட்ட நிழல் படத்தையும் இணைத்து (Recent Photograph of the Candidate) தமது விண்ணப்பங்களை கீழே தரப்பட்டிருக்கும் தரவுகளுக்கு அமைய சமர்ப்பிக்க வேண்டும்.
  1. போட்டியாளர்கள்களுக்கான கட்டுத் தொகை C$ 1000 (Non Refundable Deposit C$ 1000)
  2. விண்ணப்ப படிவம், சுய விபரக் கோவை, கட்டுப்பணம், நிழல் படம் (Completed Application form with Photograph, Completed Pre nomination Form, Non Refundable deposit) மூன்றையும் இணைத்து ஒப்படைக்கப்படும் விண்ணப்பங்கள்தான் முழுமையானவை. இவைதான் கனடா தேர்தல் ஆணையரால் ஏற்றுக் கொள்ளப்படும்.
  3. விண்ணப்ப படிவங்கள் ஏற்றுக்கொள்வது பற்றிய விடயங்களில் ஆணையாளரின் முடிவே இறுதியானது.

**2024 தேர்தல் தொடர்பான முக்கிய திகதிகள்**

1) தேர்தல் திகதி: மே 5 2024
TGTE Election Day in Canada May 5th 2024

2) 2024 தேர்தலில் அரசவை உறுப்பினர்களாக போட்டியிடுவதற்கான விண்ணப்பங்களை மார்ச் 20ம் (Applications for Contestants can be obtained from March 20th 2024)திகதியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்

3) விண்ணப்பங்கள் ஆணையாளரலால் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி ஏப்பிரல் 10, 2024. (Last day for accepting Nomination -Closing Date- is April 10th 2024)

4) விண்ணப்பதாரர் தாமாக போட்டியிலிருந்து விலகிக் கொள்வதற்கான கடைசித் திகதி (Last date for withdrawing- Cutoff date for withdrawal of Candidacy April 12th 2024) ஏப்பிரல் 12, 2024.

**ஏனைய விபரங்கள்**

5. நா.க.த அரசாங்க தேர்தல் (கனடா) ஆணையாளர் அலுவலகம் (Office of the TGTE Election Commissioner 2024-Canada):

1160 Tapscott Rd., Unit #1
Scarborough, ON. M1X 1E9

Page **2** of **3**

அலுவலக நேரம்:

| | | |
|---|---|---|
| வார நாட்கள்: | பிற்பகல் | 2:30- 7:00 |
| வார இறுதி நாட்கள்: | காலை | 10:00- 12:00 |
| | பிற்பகல் | 2:30- 7:00 |

6) தொலைபேசி: 437 265 8483 (TGTE)

7) மின் அஞ்சல்: tgteelection2024@gmail.com

8) இணையத் தளம்: www.tgtecanada.com

9) வங்கி கணக்கு:

**Name:** Trans Global Tamil Emancipation
Bank: TD Canada Trust
1571 Sandhurst Cir, Scarborough, ON, M1V 1V2.
Branch#: 330
A/C #: 5276254

**Email for e-transfer**: globaltamils21@gmail.com

** நா.க.த.அரசாங்கத் தேர்தல் □நடைமுறைக் கைநூல் (செப்டெம்பர் 06இ 2013)□இன் வழிகாட்டல்படி தேர்தல் நடத்தப்படுகின்றன. அதற்கமைய (குறிப்பாக அலகு 5) கனடாவில் 25 தொகுதிகள் அடையாளம் காணப்டுள்ளன. ஒவ்வொரு தொகுதியும் □**தனி அங்கத்தவர் தொகுதியாக**□ இருக்கும். போட்டியாளர்கள் தமக்குரிய விண்ணப்பப் படிவங்களையே பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள்.

** Candidates are requested to obtain Nomination Forms for the Constituency in which he/she intend to contest.

** இதன் முழு விபரமும் எமது அடுத்த ஊடக அறிக்கையில் வெளியாகும். Details on this will be published in our next □Press Release□

தேர்தல் ஆணையாளர் (கனடா)
நா க த அரசாங்கம்

Page **3** of **3**

# பெற்ற தாய் பிச்சையெடுக்கிறாள்! மகன் காசியில் கோ தானம் செய்கிறான்! – பழ. நெடுமாறன் –

20.03.2024

இந்தியப் பெருங்கடலில் செல்லும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சரக்குக் கப்பல்கள் மற்றும் பயணிகள் கப்பல்கள் ஆகியவற்றைத் தாக்கிக் கொள்ளையடிக்கும் சோமாலியா கடற் கொள்ளையர்களிடமிருந்து இக்கப்பல்களைப் பாதுகாக்கும் பணியில் இந்தியக் கடற்படை மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருவதற்கு இந்தியப் பாதுகாப்புத்துறை அமைச்சர் இராஜ்நாத் சிங் அவர்களிடம் அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் லாயிட் ஆஸ்டின் பாராட்டுத் தெரிவித்திருக்கிறார்.




கடந்த 3 மாதங்களுக்கு முன்பு மால்டா நாட்டின் சரக்குக் கப்பல் ஒன்றினை சோமாலியா கொள்ளையர்கள் பிடித்து 10கோடி ரூபாய் பெறுமான சரக்கினைக் கொள்ளையடித்ததோடு, அந்தக் கப்பலைத் தங்கள் வசப்படுத்திக் கொண்டு, பிற கப்பல்களைக் கொள்ளையடிப்பதற்குப் பயன்படுத்தி வந்தனர். இக்கப்பலில் பணியாற்றிய 17பேர்களைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர்.



கடந்த மார்ச் 16ஆம் நாளன்று இந்தியக் கடற்படையைச் சார்ந்த போர்க் கப்பல்கள் மற்றும் விமானப் படையினர் 40மணி நேரத்திற்கும் மேலாகப் போராடி மால்டா நாட்டின் கப்பலையும், அதன் பணியாளர்கள் 17 பேரையும் மீட்டதோடு, கடற் கொள்ளையர்கள் 35பேரைக் கைது செய்தனர்.

கடந்த பல ஆண்டு காலமாக இந்தியப் பெருங்கடலில் செல்லும் பிற நாட்டுக் கப்பல்களை சோமாலியா கொள்ளையர்களிடமிருந்து பாதுகாக்கும் பணியில் இந்தியக் கடற்படைத் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. இந்த அரிய சாதனைகளை புரிந்துவரும் இந்தியக் கடற்படை கரையோர கடற்படை என்ற நிலையிலிருந்து ஆழ்கடல் கடற்படை (Blue Water Navy) என்ற நிலைக்கு உயர்ந்துவிட்டதாக இந்தியக் கடற்படைத் தளபதி அறிவித்திருக்கிறார்.

ஆப்பிரிக்காக் கண்டத்தைச் சேர்ந்த சோமாலியா நாடு, இந்தியாவிலிருந்து 1600 கடல் மைல்களுக்கப்பால் உள்ளது. இந்தியாவின் கடற்படை அதுவரையிலும் சென்று உலக நாடுகளின் கப்பல்களைப் பாதுகாத்து வருகிறது. ஆனால், மன்னார் வளைகுடா பகுதியில் மீன்பிடிக்கச் செல்லும் தமிழ்நாட்டு மீனவர்களைச் சிங்களக் கடற்படை சுட்டுத் தள்ளுகிறது. ஆடு, மாடுகளை ஓட்டிக் கொண்டு போவது போல, நமது மீனவர்களைப் பிடித்துக் கொண்டும் போகிறார்கள். நமது மீனவர்களுக்குச் சொந்தமான இயந்திரப் படகுகள், மீன் வலைகள் போன்றவை பறிமுதல் செய்யப்படுகின்றன அல்லது சேதப்படுத்தப்படுகின்றன. நமது மீனவர்கள் பிடித்த மீன்கள் கொள்ளையடிக்கப்படுகின்றன.



1983ஆம் ஆண்டிலிருந்து கடந்த 40 ஆண்டு காலமாக எவ்வித அச்சமுமில்லாமல் சிங்கள கடற்படை தமிழ்நாட்டு மீனவர்களை வேட்டையாடி வருகிறது. ஆனால், அவர்களைப் பாதுகாக்கும் வகையில் இந்தியக் கடற்படை இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இராமேசுவரத்திற்கு அருகிலுள்ள மண்டபத்தில் இந்தியக் கடலோரக் காவல்படையின் கப்பல்கள் நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றன. கடற்படையோ, கடலோரக் காவல்படையோ இதுவரை சிங்களக் கடற்படைக்கு எதிராக ஒரு சிறு நடவடிக்கைகூட எடுக்கவில்லை. எங்கேயோ இருக்கிற சோமாலியா நாட்டுக் கடற் கொள்ளையர்களிடமிருந்து உலக நாடுகளின் கப்பல்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் இந்தியக் கடற்படை, சிங்களக் கொள்ளையர்களிடமிருந்து நமது மீனவர்களைப் பாதுகாக்கும் கடமையைச் செய்யத் தயங்குவது ஏன்?

“தமிழக மீனவர்களை இந்தியக் குடிமக்களாகவே இந்தியக் கடற்படை கருதவில்லை. எனவே, அவர்களைப் பாதுகாக்க முன்வரவில்லை” என்பதைத் தமிழ்நாட்டு மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ்நாட்டு மீனவர்கள் கடந்த 40 ஆண்டு காலமாகச் சிங்கள வெறியர்களின் அட்டூழியங்களுக்கு இரை யாகி வருகிறார்கள். இவர்களின் பிரச்சனையைத் தமிழ் நாட்டின் தேசியப் பிரச்சனையாகக் கருதித் தமிழ்நாட்டு மக்கள் ஒன்றுபட்டு நின்று தமிழக மீனவர்களுக்கு ஆதரவாகக் கிளர்ந் தெழவேண்டும்.



விவசாயிகளுக்கு எதிரான மூன்று சட்டங்களை இந்திய அரசு கொண்டுவந்த போது, பஞ்சாப் விவசாயிகள் கட்சி வேறுபாடுகளைக் கடந்து ஒன்றுபட்டு நின்று, தில்லியை முற்றுகையிட்டு நடத்திய பெரும் போராட்டத்தின் விளைவாக இந்திய அரசு பணிந்தது; மூன்று சட்டங்களையும் திரும்பப் பெற்றது.

ஆனால், காவிரிப் பிரச்சனையில் தமிழ்நாட்டில் உள்ள கட்சிகளும், விவசாய அமைப்புகளும் ஒன்றுபட்டுப் போராட முன்வரவில்லை. காவிரி சமவெளிப் பகுதியில்கூட விவசாயச் சங்கங்கள் ஒன்றிணைந்து போராடவில்லை. ஆனால், கர்நாடகத்தில் அனைத்துக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து நமக்குத் தண்ணீர் தர மறுக்கின்றன. காவிரிப் பிரச்சனையில் உச்சநீதிமன்றம் நமக்கு நியாயம் வழங்கியிருந்தும்கூட நமது ஒற்றுமையின்மையின் காரணமாகக் கர்நாடகம் அத்தீர்ப்பை மதிக்க மறுக்கிறது. இந்திய அரசும் நம்மை அலட்சியப்படுத்துகிறது. எல்லாவற்றுக்கும் காரணம் நாம் ஒன்றுபடாததே ஆகம்.

தமிழ்நாட்டு மீனவர் பிரச்சனையைத் தமிழக மக்கள் தங்களின் பிரச்சனையாகக் கருதவேண்டும். மீனவர்களுக்கு ஆதரவாகக் கட்சி வேறுபாடின்றி அனைத்துத் தமிழர்களும் ஒன்றுபட்டுப் போராட முன்வந்தாலொழிய இப்பிரச்சனை ஒருபோதும் தீராது. இந்திய அரசும் நம்மை மதிக்கப்போவதில்லை. இதை எவ்வளவு விரைவில் நாம் உணர்ந்து செயல்படுகிறோமோ அவ்வளவு விரைவில் இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காணப்படும்.

# வெளிவந்துவிட்டது

உலக
வணிகம்
ULAGA VANIKAM

2024




## விளம்பரமின்றி வியாபாரமில்லை

தங்கள் வணிகத்தை மேம்படுத்திக்கொள்ள உலக வணிகத்தில்
உங்கள் விளம்பரமும் இடம்பெற அழையுங்கள்

www.ulagavanikam.ca

437-345-4203



# நினைவுகள் வேகமாக...

*(இந்தக்கதையை எழுதிய போராளி காந்தா இறுதியுத்தத்தில் வீரச்சாவு. அவரது போராளிக் கணவரும் இன்றுவரை இருக் கிறாரா இல்லையா என்ற தகவல் எதுவும் தெரியாது. காந்தா வின் சிறு குழந்தைகள் தற்போது உறவினர் ஒருவரின் ஆதர வில் வாழ்கிறார்கள். மாவீரர் காந்தா எழுதிய கதையிது)*

அந்த வரைபடம் எனது கோல்சருக்குள் மடித்தபடி பல நாளாய் கிடக்குது. எனக்கு அதைப் பார்க்கவேண்டுமெண்டா அதைப் பயன்படுத்திதான் மோட்டார்களுக்கு இலக்கின் வகை சொல்ல வேணுமெண்டோ அவசியம் இல்லை. இப்பதான் நிஸ்மியாக் காவந்தவா. வன்னியெண்டபடியால இந்தகுச்சொழுக்கைகள் அவாவிற்கு வடிவாத்தெரியாது. வரைபடத்தை எடுக்கச் சொல்லி அதில வடிவா விளங்கப்படுத்தச் சொல்லியும் கேட்டவா. எனக்கு பஞ்சியாகத்தான் இருந்தது. அக்கா கேட்டுட்டா எண்டதற்கு காட்டினன்.

வரைபடத்தை பார்க்கேக்க, “இந்த றோட்டிலயே காந்தா உம்மட வீடு” எண்டு அக்கா கேட்டவா. எனக்க ஒரே விசரா இருந்தது. வீடு இதில தான் எண்டு காட்டினப்போ எனக்கு ஏதோ செய் துச்சுது. ‘சீ... என்னகாலமப்பா’ என்று சினந்தும் கொண்டன். இப்பதான் அக்கா கேட்டா “நீநிக்கிற இடத்தில இருந்து எத்தனை கிலோ மீற்றர் தெரியுமா...?” என்னண்டா. அப்பதான் அந்தநாள் நினைவிற்கு வந்தது. அங்கதான் இருந்தன். ஆனால். எங் கயோ போட்டான். அக்கா என்னட்ட எத்தனை கிலோ மீற்றர் எண்டபதில் கேட்காமலே போயிற்றா. அந்த இடத்தவிட்டு எப்ப போனா எண்டு எனக்குத் தெரியேல்ல.

யோசிக்கேக்க மகிழ்ச்சியாகவும் இருந்தது, வெறுப் பாயும் இருந் தது. என்ர உடல் சோர்வா, அலுப்பா இருந்தது. ஏனெண்டா நேற்றிரவு நித்திரை இல்லை. அதற்கு முதல் நாளும் இல்லை. முதல் நாள் வேவுக்காரரோட போய் இராணுவத்தின்ர தடம் கிடக்கோ எண்டு பாத்து உறுதிப்படுத்தினனான். அதுதான் இரண்டு நாளா உசார் நிலையில இருந்திட்டம்.

அந்த நிலையில் உசாராய் இருந்தபடியால தான் அவன் அங்கு வெளிக்கிடேக்க கண்டு அடிச்சிட்டம். அவன்ர நகர்வு அந்த இடத்திலேயே தடை செய்யப்பட்டது. எனக்கு ஒரே இராணுவத் தின்ர நினைவுதான். ஏனெண்டா கொஞ்சத் தூரத்தில் எங்கட வீடு அங்கதான். அம்மா, அப்பா, தம்பி உறவுகள் என எல் லோரும் கூடியிருந்த ஊர். அவைகளுக்கு என்ன நடந்ததோ ‘சீ’ நான் இப்படி நினைக்கக் கூடாது. என்னை நானே திட்டிக் கொண்டேன்.

என்ர பிள்ளையள் பாவங்கள். நேற்று வடிவாச் சண்டை பிடிச் சதுகள். தங்கட தங்கட காப்பு நிலைகளிலே என்ன செய்யுதுகள்? வடிவா அவதானிச்சுதுகளோ என்று பார்ப்பம் எண்டுதான் வெளிக்கிட்டன். நான் துவக்க எடுத்துக்கொண்டுவர தேனர சிவந்தாள். முன்னுக்கு நடந்தாள். அதோட குறிஞ்சியும் பின் னுக்கு துவக்கோட வந்தா. இரண்டு கிலோ மீற்றர் நீளத்துக்கு நடந்து நிலைகளைப் பார்த்தோம்.

அது 55வது காப்பரண். அதில நின்ற பல்லவி, குறிஞ்சி தான் உறவுக்காரி என்று எனக்குத் தெரியாது. பல்லவியின்ர பதுங்கு குழிக்க நிண்ட போது குறிஞ்சி தான் அவளிட்டக் கேட்டாள். “பல்லவி இதில இருந்து எங்கட வீடு 2 கிலோ மீற்றர் வரு மெல்லா...” வன்னியில எண்டா இது கூப்பிடு தூரம் என்றாள் பல்லவி. அவையளின்ர உரையாடலைக் கேட்க எனக்கு அவை யும் தென்மராட்சி என்பது வடிவா விளங்குது. என்ர வீட்டக் கேட்டு நான் வேதனைபடுமாபது போல அதுகளையும் வேதனைப்படுத்த விருப்பமில்லாமல் இருந்ததுச்சுது.

அந்தக் காப்பரண் விட்டுப்போ கேக்க எனக்கு குறிஞ்சி. பல்லவி என அதுகளின்ர நினைவுதான் வந்திச்சுது. அதில இருக்கிற அம்மன் கோயிலுக்கு அதுகள் போயிருக்குங்கள். சீ... இப்ப அது சூனியப் பிரதேசமா பாழ்பட்டுக் கிடக்கும். அந்தப் பள்ளியில் படிச் சிருக்குறங்கள். அந்த ரோட்டால அடிக்கடி போய் வந்திருக் குங்கள். அதுகளும் என்னைப் போலத்தான் நினைக்குங்கள். இராணுவத்தை துரத்தினால், வீட்டை... ஊரை... பார்க்கலாம் எண்டு தானே சிந்திக்குங்கள். எனக்கு இப்ப நல்லா நித்திரை வருது. படுத்தா படு பயங்கரமாவரும். இப்படித் தானே அது




களுக்கும் வரும். என்னையறியாமலே வாய் விட்டுச் சொல்லிக் கொண்டேன். அப்பதான் அதுகள் கேட்டதுகள் “என்ன உங்கட பாட்டுக்கு நித்திரை எண்டு சொல்லிக் கொண்டு போறீயள்?”

“ஓண்டுமில்லை” எண்டன். என்ர நினைவெல்லாம் வீட்ட போச் சுது. காப்பரண் எல்லாம் பார்த்திட்டு என்ர நிலையில் வந்திருந் தன. திரும்பவும் “உசாரா இருங்கோ இராணுவம் நகரக் கூடும்” எண்டு செய்தி வந்திச்சுது.

என்ர சிறு சிறு அணப் பொறுப்பாளருக்கெல்லாம் உடனே

தகவல்களை அனுப்பினன். திரும்பவும் இனி நித்திரை இல்லை மீளவும் வீட்ட போட்டன். எனக்குப் பகல் கொள்ளுற தெண்டாலே படுபயங்கரமாப் பிடிக்காது. இப்ப அந்தக் காலத்தை நினைக்க ஆசையாய இருந்தது.

காலையில எழும்பிபடிச் சாப்பிடுற சாப்பாடு, பள்ளிக்கூடம் பள்ளியால வந்ததும் சாப்பிடுவன் எனக்கு அம்மா சாப்பிடத் தந்திட்டு தம்பிக்கும் கொடுத்திட்டு போய் படுத்திடுவா. சாப்பிட்டிட்டு போனா விறாந்தையில அப்பா நல்ல நித்திரை அடிப்பார். அம்மா முன்னறைக்க படுத்திருப்பா அவவும் நித்திரையா இருப்பா. தம்பி சாப்பிட்டிட்டு வந்து அப்பாவிற்கு பக்கத்தில் படுத்திருப்பான். அக்காவும், அண்ணையும் கட்டாயம் பகல் நித்திரை கொள்ளுவினம். அவையளைப் பார்க்க எனக்கும் நித்திரை கொள்ள வேணும் போல இருக்கும்.

தலையணையைத் தூக்கிக் கொண்டு எனக்குப் பிடிக்காத பாடப்புத்தகத்தையும் எடுத்துக் கொண்டு போய் படிக்கிறதோட படுப்பன். நித்திரை வராது... பேந்து புரண்டு புரண்டு படுத்துப் பார்ப்பேன். அப்பவும் நித்திரை வராது. எழுப்பிப் போய் பின்னறைக்குள்ள புழுக்கொடியல் உரப்பைக்குள்ள இருந்து எடுத்து வருவன். கைநிறைய புழுக்கொடியல் இருக்கும். இப்ப புழுக்கொடியல் சாப்பிட ஆசையாக இருக்கிறது. இதுக்க இருக்கிற இந்த கொஞ்சத் தூரம் ஆமியைத் தூரத்திட்டா அங்க போய் சாப்பிடலாம். அம்மா கட்டாயம் புழுக்கொடியல் போட்டு வைச்சிருப்பா. புழுக்கொடியல் எடுத்துக்கொண்டு தேங்காயும் எடுத்து உரிச்சு உடைச்சுக் கொண்டுவந்து. பெரிய நாவலுக்குக் கீழ் கட்டின ஊஞ்சலில் ஆடி ஆடி சாப்பிட்டுப் பார்ப்பன். நித்திரை வராது. பகல் நித்திரை சரிவராது. மனம் கேட்காம திரும்பவும் வந்து படுத்துப் பார்ப்பன். நித்திரை வராது. பேந்து முன் வீட்ட போவன். விபுலனை விளையாடக் கூப்பிடுவமெண்டா. அங்க அவன் தாய்க்குப் பக்கத்தில் படுத்து நித்திரை அடிப்பான். முன் வீட்டு அன்ரியின் மனுசன் வெளிநாட்டில. அவா வீட்டையும் திறந்து போட்டிட்டு நல்ல நித்திரை அடிப்பா.

எனக்கு விசாராக்கும். திரும்பி வீட்டை வருவன். மாமரத்தில ஏறி காயாச்சும் சாப்பிட்டுக் கொண்டு மாமரக் கொப்பில் படுத்துப் பார்ப்பன். அதுவும் சரிவரா. தினம் இதுதான் நடக்கும் எல்லோரும் பகலிலே நித்திரை கொள்ள நான் மட்டும் எதையாவது சாப்பிட்டுக் கொண்டு அது வெளியே திரிவன். இப்ப நான் அன்று போல சின்னவளாகவும் இருந்திருக்கலாம். உசார் நிலையில இருக்கச் சொல்லியெல்லோ தகவல் வந்தது. அந்தக் காலத்தில நித்திரை கொண்டாலும், பகலிலே வரவே வராது. இப்ப எப்பயடா நித்திரை கொள்ளுவன் எண்டிருக்கு.

என்ர பிளாட்டூன். செக்சன் பொறுப்பாளர்கள் எல்லாம் தொடர்பு எடுத்ததுகள். உசாராதாங்கள் இருப்பதா குறிப்பிட்டுதுகள். பல்லவி தொடர்பெடுக்கேக்க கேட்டாள். “அக்கா அவன் வந்தால் அடிச்சுக் கொண்டு அப்படியே தள்ளிக் கொண்டு போய் துப்பரவாக்கி விடுவம்” என்றாள் அதைத்தான் நானும் நினைச்சு வைச்சிருந்தன. கொஞ்சத்தூரம் அவன் ஓட ஓடக்கலைச்சு வீட்டுக்குக் கிட்ட போய்விடலாம். எல்லோருக்கும் இதைத் தானே சொல்லுறனான். ஊரைப்பிடிப்பம். வீட்டை போவம். அது மட்டும் எல்லாத் துயரையும் தாங்கிக் கொள்ளுவம் எண்டு.

என்ன விரும்புறன் எண்டு சொன்ன முரளிக்குக் கூட இப்படித்



தானே சொன்னான். ஊருக்குப் போகும் மட்டும் சண்டையில சாகாதிருந்தா, அங்க போன பிறகு முரளிய விரும்பிறன் என்று சொன்னான். நாலு வருசமா அவனும் எதுமே என்னட்ட கதைக்காமல் இருக்கிறான். முரளியும் சண்டையில தான் நிப்பான். என்ர ஊரையும் என்னையும் நினைப்பான். எல்லோருக்கும் தங்கட ஊரைப் பார்க்க உறவுகளோட கதைக்கத்தானே ஆசையாக இருக்கும். திரும்பவும் நான் வீட்ட போய் வந்தன். அம்மா, அப்பா, தம்பி, என்ன செய்வீனம்? நடைபேசி கதைக்கத் தொடங்கியதும் முதலில் பல்லவியின்ர தொடர்புதான் கிடைச்சது. அந்தப் பக்கம் அவன் அசைவதாகத் தெரியுதாம். இராணுவம் 24 சூழல்வைத்து அடிக்கும் பீரங்கிக்குண்டுகள் வந்து விழுந்தது. வேற கனக்கச் சூடுகளும் வேகாமா வந்து விழுந்தது. வேற செல்களும் வந்து கொண்டிருந்தது. 55வது நிலைப் பக்கம் திருவிழா தொடங்கிற்று. நான் அவசரமாகவும் வேகமாகவும்



பல்லவியின்ர நிலைக்கு போக வேண்டியிருந்தது.

ஓடிப்போனன். குறிஞ்சியும் தேனரசியும் என்னோட ஓடிவந்திச்சினம். குறிஞ்சிக்குச் சன்னம் பட்டிட்டுது. அதோடதான் வரப் போறதா குறிப்பிட்டாள். அவளப் பேசிப்போட்டன். கவலையா இருந்தது. சண்டையில நேரத்தை வீணடிச்சா எங்களுக்குத் தான் இழப்பு அதிகரிக்கும். வேகமா நாங்கள் போயிற்றம். பல்லவி நல்லா சண்டை பிடிச்சுக்க கொண்டிருந்தாள். வரைபடத்தை பார்த்து செல்விழுந்த கோணம் சொல்ல வேண்டியிருந்தது.

பல்லவி சொன்னாள் “அக்கா அதுக்குள்ள தான் எங்கட வீடு நான் என்னர செக்சனை கொண்டு இறங்கட்டே” தன் கோல்சருக்குள் இருந்த வரைபடத்தை எடுத்து எனக்குக் காட்டினாள். இரண்டு கிலோ மீற்றருக்கப்பால் அவளின் வீடு இருப்பதை அந்தக் கணத்திலும் வரைபடத்தில் காட்டினாள் அவள். முன்னோக்கி எதிரி நகர முற்பட்ட பக்கமா நகர முற்பட்டாள். கொஞ்சம் பொறு செல்லால கொடுத்திட்டு இறங்குவம் எண்டால், ஒரு நல்ல சண்டை கிடைச்சா திருப்பி இறங்கி அடிக்க வேணும்.

பல்லவி தான் பாய்ந்து அடிச்சுக் கொண்டு போனாள். கொஞ்சத் தூரத்தில் என்னைக் கூப்பிட்ட சத்தம் கேட்டது. ஓடிப் போனன். பிள்ளைகள் என்னை முந்திக் கொண்டு அவனைச் சுட்டபடி போய்க் கொண்டிருந்ததுகள். பல்லவி என்னட்ட வா எண்டாள். அவளுக்கு வயிற்றில காயம். அக்கா நீங்கள் என்ர அம்மாவையும் போய்ப் பாருங்கோ எண்டவள் உடனே மூச்சு விட மறந்திட்டாள். அம்மாவைப் போய்பாருங்கோ என்று திரும்பவும் ஒலித்தது. ஆனா, அது என்ர பிரமையா இருக்க வேணும். ஒரு மணித்தியாலயத்தில படுபயங்கரமா சண்டை நடந்திட்டுது செக்சன், பிளாட்டூன் எல்லாம் நல்லாச் சண்டை பிடிச்சதுகள் பல்லவியின்ர செக்சன் முன்னுக்கு அடிச்சுக் கொண்டு போனது தான்... பல்லவியும் விழுந்ததோட அடுத்தடுத்த செக்சனுக்கு இழப்புவரத் தொடங்கிற்று.

பல்லவி அவவொரு திறமையான சிறு அணிப் பொறுப்பாளர். நல்லாச் சண்டை பிடிப்பாள். என்ர கண்ணுக்கு முன்னுக்கு அப்படிச் சொல்லிப் போட்டுப் போயிற்றாள். என்ர சிந்தனை வெகு நேரமாக ஓடிச்சுது. பல்லவியின்ர நினைவு அடிக்கடி வந்து போகுது. நேற்றைய சம்பவங்கள்க் கோத்து மீட்டுக்கொண்டிருந்த போதுதான் நடைபேசியால் தொடர்பு வந்திச்சு. நிஸ்மியாக்காதான் தொடர்பு கொண்டிருந்தார்.

நேற்று நடந்த சண்டையில எங்கட நிலைகளில இருந்து பின்னுக்கு காயக்கரார்கள் என்று போனவையின்ர காப்பரண்களை நிறைக்க வேண்டியிருந்தது. அதுக்குத்தான் ஒரு செக்சன் பெடியள் வருகினம் எண்டும் அவதான் நேரயாவாற எண்டும் குறிப்பிட்டா. நேற்று நான் இருந்து நிலையும் இண்டைக்கு என்ர நிலையும் எனக்கே எதையெதையோ எல்லாம் கற்றுத்தந்து.

இதைத்தான் அடிக்கடி நினைச்சன். பல்லவி வீரச்சாவடைஞ்சா அந்தச் சண்டையில, அளின்ர செக்சன் மாதிரி ஒரு செக்சன் எண்டாலும் இருந்தா அந்தச் சூனியப் பிரதேசமான ஒரு கிலோ மீற்றரையும் பிடித்து முன்னுக்கு நகர்ந்து எங்கட முன்னனி நிலையை அசைச்சிருக்கலலாம். எதிரிக்கும் கொஞ்சம் பயமாகவும் இனி நகர்வெடுக்கத் துணியாமலும் இருந்திருப்பான். இந்த எண்ணந்தான் என்னைப் போட்டுக் குடைஞ்சிது. இன்னும் கொஞ்சப் பேர் இருந்தால் அல்லாட்டி இன்று வந்திருந்தா நிலைமை வேறாக இருந்திருக்கும். எங்களுக்கு வீச்சா சண்டை பிடிக்க ஆக்கள் காணாமல் இருக்கதே. எண்டு நினைக்க கவலையாகவே போட்டுது.

இப்ப நிஸ்மியாக்கா சொன்னபடி ஒரு செக்சன் வருதாம் தம்பியவையாம். வரட்டும் காயப்பட்டுப் போனவையின்ர இடத்தை நிரப்ப எண்டாலும் வரட்டும். நான் நினைச்சுக் கொண்டிருக்கவும் அந்த செக்சன் வந்து நிண்டது. வந்தவையளுக்கும் வரைபடம் காட்டி போற நிலைகளையும் காட்டி நிலைகளைச் சொல்லி விளங்கப்படுத்தவேணும். அது என்ர முக்கிய கடமையுமாய் இருக்குது. வரைபடத்தை விரிச்சு விளங்கப்படுத்தினன். அந்த செக்சன் பொறுப்பாளர். ஏதுவுமே கதைக்காம. அதில என்ன இதில என்ன என்று கேட்காம இருந்தது எனக்கு ஆச்சரியமாகவே இருந்தது.



தம்பி என்ன ஒண்டும் கேட்காம இருக்கிறியள் எண்டன். அவன் அந்த வரைபடத்தில் அந்த இடத்தைச் சுட்டிக்காட்டினான். அதில தான் தன்ர வீடு எண்டான். என்ன பெயர் எண்டு கேட்டன். பல்லவன் எண்டான். நினைவுகள் வேகமாக... நெஞ்சை ஏதோ செய்தது...

முற்றும்

மூலம்: மாவீரர் காந்தா (பகிரப்படாத பக்கங்கள்)

**முக்கிய அறிவித்தல்**

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின்
நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள்,
தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு
அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள்
அறிவித்தல்களையும்,
மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து
ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது.
தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம்,
இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று.
எமது மின்னஞ்சல் முகவரிக்கு
தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு
வேண்டுகிறோம்.
sangathamilcanada@gmail.com


ஈகைச்சுடர் அன்னை பூபதி
36 ஆம் ஆண்டு நினைவு நாள்
நாட்டுப்பற்றாளர் நாள்
ஏப்ரல் 19 2024
அன்னை பூபதி கணபதிப்பிள்ளை
Annai Poopathy Kanapathipillai
கிரான், மட்டக்களப்பு, தமிழீழம்
மண்ணில்: 03.11.1932
ஈகைச்சாவு: 19.04.1988
உண்ணா நோன்பு போராட்டத்தில் ஈகைச்சாவைத் தழுவிக்கொண்ட முதல் பெண்மணி
Annai Poopathy was the first woman to embrace martyrdom in the fasting struggle for Thamileelam
04.04.2009 அன்று முல்லைத்தீவு ஆனந்தபுரப்பகுதியில் சிறீலங்கா சிங்களப்படைகளின் முற்றுகை உடைப்புச்சமரின் போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மூத்த தளபதிகள் மற்றும் ஏனைய மாவீரர்களின்
15ம் ஆண்டு
வீரவணக்கம்
பிரிகேடியர்
விதுசா
கந்தையா ஞானபூரணி
கரவெட்டி, யாழ்
(29.09.1969 - 04.04.2009)
பிரிகேடியர்
மணிவண்ணன்
அருளம்பலம் தவேந்திரன்
பருத்தித்துறை, யாழ்
(31.12.1970 - 03.04.2009)
பிரிகேடியர்
துர்க்கா
பொன்னுத்துரை கலைச்செல்வி
வலிகாமம், யாழ்
(24.03.1971 - 03.04.2009)
பிரிகேடியர்
தீபன்
வேலாயுதம்பிள்ளை பகிரதகுமார்
கண்டாவளை, கிளிநொச்சி
(08.01.1966 -05.04.2009)
பிரிகேடியர்
கடாபி
ஆறுமுகம் விநாயகமூர்த்தி
கொற்றாவத்தை - வதிரி, யாழ்
27.02.1968 - 04.04.2009
சங்கத்தமிழ்
"தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் – The Thirst of Thamils is the Homeland of Thamileelam"